வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 பங்குனி திங்கள் 2-ம் நாள் (15—3—1964) ஞாயிற்றுக்கிழமை ஷவ்வா 29 | இதழ் 42




# சீன பிரதமர் பதவி துறப்பார்?

## தளபதி சூட்டே பிரதமராகலாம்

### சீன அதிகார பீடத்தில் பிளவு

**சீனப் பிரதம மந்திரி சௌ என்-லாய் விரைவில் பதவி நீக்கம் செய்யப் படுவார் என்று கொழும்பு இராஜ தந்திர வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.**

அவருக்குப் பதிலாக ஒற்றைக்கண் தளபதி சூட்டே அல்லது டென்சியாவோ-பிங் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்படலாமென்றும் அதே வட்டாரங்கள் கருத்து தெரிவித்தன.

சோவியத் பிரதமர் குருஷேவுக்கெதிராகக் கடுமையான கொள்கையைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டார் என்பதே சீன அதிகார பீடத்தால் சீனப் பிரதமர் மீது கொண்டுவரப்பட்டுள்ள குற்றச்சாட்டு என்று தெரிகிறது.

சீன—ரஷ்ய மோதல் உச்சக் கட்டத்தை அடைந்து வருகிறது. சித்தாந்தப் போராட்டமும், உலகக் கம்யூனிஸ்ட் தலைமையைக் கைப்பற்றும் போராட்டமும் ஒருபுறமிருக்க, சீன—ரஷ்ய எல்லைத்தகராறு வளர்ந்து, எல்லையில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

சீனவில் மாசேதுங் தலைமையிலுள்ள அதிகார வர்க்கம் ரஷ்யாவில் குருஷேவின் ஆட்சியைக் கவிழ்த்துவிடுவதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாம்.

#### மாவோ-சௌ தகராறு?

'குருஷேவ் ஒரு காகிதப் புலி—அவரது வீழ்ச்சி அண்மிவிட்டது' என்று இருவாரங்களுக்கு முன்பு மாசேதுங் ரஷ்யப் பிரதமரைச் சாடினர், பிரெஞ்சுப் பிரதிநிதிகள் கோஷ்டியொன்றுக்கு அளித்த பேட்டியில்.

ஆனல் சீனப் பிரதமர் சௌ-என்லாய் பிரிட்டிஷ் டெலிவிஷன் பேட்டியொன்றில், சீன-ரஷ்யத் தகராறு தற்காலிகமானதென்றும், தகராறு விரைவில் தீர்ந்துவிடுமென்றும், இத் தகராறைப் பயன்படுத்தலாமென்று மேலைய ஏகாதிபத்தியங்கள் மனப்பால் குடிக்க வேண்டியதில்லையென்றும் கூறினர்.

இதிலிருந்து சீன—ரஷ்யத் தகராறில் மாசேதுங் தீவிரமான கொள்கையையும் சௌ-என்லாய் மிதமான கொள்கையையும் கடைப்பிடிக்கிருர்களென்பது தெளிவு. இதனல் சௌ-என்லாய் பதவியினின்று வெளியேற வேண்டிய நிலை உருவாகியிருப்பதாகவும் அறியப்படுகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

## காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வருவாயில் வீழ்ச்சி

### மொழித் திணிப்புக்கு கைமேற்பலன்

**காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மொழித் திணிப்புக் காரணமாகத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில்—குறிப்பாக யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் தாபனத்துக்கு வருமானம் குறைந்துவிட்டதாகத் தெரிகிறது.**

ஜனவரி முதல் தேதிக்குப் பிறகு ஏற்பட்ட கணிசமான வருமானக் குறைவு பற்றி அதிகாரிகள் ஒரு மாநாடு நடாத்தினர்களாம். சிங்கள மொழித் திணிப்பால் வருவாய் குறைந்தாலும், நாளாவட்டத்தில் நிலைமை சரியாகிவிடும் என்றும் மொழிக் கொள்கையை எது விதத்திலும் விட்டுக் கொடுக்கத் தயாரில்லை என்றும் கூட்டரவுத் தலைவர் கூறிவிட்டாராம்.

யாழ்ப்பாணத்திலும் ஏனைய பல இடங்களிலும் சிங்களத்தில் அனுப்பி வைக்கப்பட்ட 'பொலிசி' களைத் தமிழர்கள் பலர் கிழித்

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழர்களுக்கு புதுப் பெயர்

பௌத்த சோஷலிஸ்ட் கட்சி மீண்டும் செயல் படத் தொடங்கியுள்ளது. உண்ணுவிரத வீரர் திரு. எப். ஆர். ஜயசூரிய இக் கட்சியின் தலைவர். இக் கட்சிக்கு உதவி புரிய பிக்குகள் ஒரு கோஷ்டியினர் முன் வந்துள்ளனர். இக் கட்சி 1951ல் நிறுவப்பெற்று செயலற்றுக் கிடந்தது.

பௌத்த சோஷலிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்தால் பிரஜைகளல்லாதோர் அனைவரையும் நாடு கடத்திவிடுமாம். அவர்களின் ஆட்சியில் இலங்கைப் பிரஜைகளான தமிழர்கள் "சிங்கள இந்துக்கள்" என்றும் முஸ்லிம் மக்கள், "சிங்கள முஸ்லிம்கள்" என்றும் அழைக்கப் படுவார்களாம். இக் கட்சி வட, கீழ் மாகாணங்களிலும் கிளைகள் அமைக்குமென்றும், திருமலையில் ஏற்கனவே கிளை அமைக்கப்பட்டுள்ளதென்றும் அக் கட்சியின் காரியதரிசி திரு. டெரல்ட் பீரிஸ் கூறினர்.

## இலங்கையில் சௌ வின் செக். எதிர்ப்பு பிரசாரம்

சீனப் பிரதமர் சௌ என்லாய் இலங்கையில் தங்கியிருக்கையில் பல பிரமுகர்களுடன் இலங்கையின் தொழில் வளர்ச்சி பற்றி அளவளாவிக் கொண்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில், இலங்கைப் பிரமுகர்களுக்கு ஆச்சரியமாகவிருந்த செய்தி ஒன்றைக் கூறினராம்.

(9-ம் பக்கம் பார்க்க)

## தோட்டப் பாடசாலைகளின் தரத்தை உயர்த்த இ. தொ. கழகம் முயற்சி

### எட்டாம் படிவம் நிறுவும்படி துரைமார் சங்கத்திற்கு வேண்டுகோள்

**தோட்டப் பாடசாலைகளின் தரத்தை உயர்த்தி, தோட்டப் பிள்ளைகள் 8-வது படிவம் வரை படிக்கும் வசதிகளைச் செய்து கொடுக்குமாறு இலங்கைத் தொழிலாளர் கழகம், தோட்டத் துரைமார் சங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது.**

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் கழக நிர்வாகக்கமிட்டிக் கூட்டத்தில் தோட்டப் பாடசாலைகளில் 8ம் படிவம் வரை தோட்டப் பிள்ளைகள் படிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுக்குமாறு தோட்டத் துரைமார் சங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தோட்டப் பிள்ளைகள் தற்போது 5வது படிவம்வரை மட்டுமே தோட்டப் பாடசாலைகளில் கல்வி பயில முடிகிறது.

ஆரம்பக் கல்வியைப்பூர்த்தி செய்த பிள்ளைகள் 5ம் வகுப்புக்குமேல் படிக்க வேண்டுமானல், நகரப்பாடசாலைகளுக்குத்தான் செல்ல வேண்டும். [illegible] களிலே இடமில்லை என்றும், பிரஜாவுரிமையை நிரூபிக்கும்படியும் கூறி தோட்டப் பிள்ளைகளை அனுமதிக்க மறுத்துவிடுகிறார்கள்.

இந்த நிலைமையில் தோட்டப் பாடசாலைகளின் தரத்தை உயர்த்தி, 8ம் படிவம் வரை அப்பாடசாலைகளில் கல்விபயில தோட்டப் பாடசாலைகளுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டியது மிக மிக அவசியமும் அவசரமுமாகும் என்று இ. தொ. கழகம், தோட்டத் துரைமார் சங்கத்தை வற்புறுத்தியுள்ளது.

## அறிவிப்பு

சுதந்திரன் ஸ்தாபனத்தில் பணியாற்றிய எம். எச். எம். பாசி என்பவர் 1-3-64ம் திகதி முதல் எமது ஸ்தாபனத்திலிருந்துவிலகிவிட்டார். மேற்படி நபருடன் வைத்துக்கொள்ளும் எமது அலுவலகம் பற்றிய எத்தகைய தொடர்புகளுக்கும் நாம் பொறுப்பாளிகளல்ல என்பதை அறிவித்துக் கொள்ளுகிறோம்.

அவர் விலகிய திகதியிலிருந்து யாராவது அவருடன் தொடர்பு கொண்டிருந்தால், அதுபற்றி எமக்கு உடன் தகவல் தெரிவிக்கவும்.

நிர்வாகி,

சுதந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்

## தமிழனின் தேசிய காப்பியம்

## ஒளவைகாணுதஒன்றியத்தை அடிகளார் கண்டார்

### அன்று அரசன் இன்று அரசாங்கம்

இந்த உலகில் சாதாரண மக்கள் என்ன நினைக்கிருர்கள்? உலக மக்கள் வாழ்வதற்கு உண்ணும்உணவுதான் முக்கியம் என்று எண்ணியிருக்கிருர்கள். உயிர் வாழ்வதற்கு உணவு அவசியம். யாரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றுதான். நாமும் மறுக்கவில்லை. ஆனுல்...!

உலக உயிர்களைக் காப்பது உணவுமட்டும் அல்ல என்பது உத்தமர்கள், உலகம் உய்ய வழிவகுத்தோர்கள், பண்புடன் வாழ பாதை சமைத்தவர்கள் கண்ட உண்மை. ஆம்! நெல்லும்

**ஏ. பி. வி. கோமாஸ்**

உயிரல்ல என்ருர்கள் அவர்கள். நீரும் உயிரல்ல என்கிருர்கள் அவர்கள். அப்படியாகில் எதுதான் உலகம் உய்ய, மக்கள் உயிர் வாழ, நானிலத்தில் வசிப்பவர்கள் நாலுநாள் வாழச் செய்வது தான் என்ன? ஆம்...!

நெல்லும் நீரும் இருந்தாலும்கூட அதனுல் பலன் பெறுவதற்கு நல்லாட்சிஅவசியமல்லவா? நாட்டில் சமாதானம் இல்லாதபோது நாடும் நெல்லும் நீரும் இருந்துஎன்னபிரயோசனம். பயிர்த்தொழில்தான் முறையாக நடக்குமா? இல்லை.

நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணம் நல்லவர்கள் மனதில்தான் உதிக்குமா? உதிக்காதே! அப்படியான உயர்ந்த எண்ணம்.

பரந்த உலகம் தனிலே நிறைந்திருக்கும் மக்கள், சிறந்ததோர் மன்னன் ஆட்சியிருந்தால்தான் மனம் நிறைந்தவாழ்வு வாழ முடியும் என்று கூறுகின்றனர், மக்கள் நலம் விரும்புவோர்.

ஆகையால் நெல்லும் நீரும் அல்ல, வல்ல அரசனை வாழும் மக்களுக்கு உயிராகிருன். அப்படியென்ருல் வேந்தன் என்ன எண்ணவேண்டும், எப்படி நடக்கவேண்டும்?

ஆம். 'நான்தான் நாட்டுக்கு உயிர்; அவர்களுக்கு நெல்லும் நீரும், புல்லும்பூண்டும் உயிரல்ல; வெற்றிகொள்ளும் படையிருந்தாலும், வேழம் போல் பலமிருந்தாலும் மக்கள் நலத்தைத்தான நான் முதலில் கவனிக்கவேண்டும்' என்ற நல்லெண்ணம்வேண்டும், எந்தவொரு நாடு காக்கும் மன்னவனுக்கும்.

அன்றைய மன்னர்கள் அகத்தில் கொள்ளவேண்டி, அழகாகப் பாடி வைத்தார்கள் அன்று வாழ்ந்த அறம் பாடியபுலவர்கள். அவ்வாறு அன்று, மேலே சொன்ன கருத்தை மெய்யாக உள்ளடக்கிப் பாடப்பட்ட ஒரு அருமையான பாடல், பண்டையத் தமிழர்கள் புகழ் பாடும், மாண்புடை வீரத்தை எடுத்துக்காட்டும் புறநானூற்றில் காணப்படுகிறது.

அன்று, புலவர் மோசிகீரனர் மன்னர்களுக்காகப் பாடியதாக இருக்கலாம். ஆயினும் இன்று மன்னன் ஆட்சி மறைந்து மக்கள் ஆட்சி நடைபெறுவதாகக் கூறிக்கொள்ளும் இந்நாளில், மக்களுக்காக ஆட்சிபீடம் அமர்ந்திருக்கும் குட்டிமன்னர்கள் இதனை உணர்ந்து பார்க்கவேண்டும்.

ஆமாம். சாகாவரம்பெற்ற இப்பாடல் நமக்கும் நல்லபாடம்தான். இதோ பாடல்...

நெல்லும் உயிரன்றே
  நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே
  மலர்தலை உலகம்
அதனுல், யான் உயிர்
  என்பது அறிகை
வேல்மிகு தானை
  வேந்தற்குக் கடனே...

புறம்...186.

---

தமிழ்த் தேசியம் இந்த நூற்ருண்டில் வியாபித்து நின்ற போதிலும், அவ்வுணர்ச்சியை முதலில் வலியுறுத்திய சிறப்பு, சிலம்புக்கு காப்பியம் தந்த சேர நாட்டு இளங்கோவையே சாருகிறது. 'வட வேங்கடம் தென் குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுலகம்' என்று காப்பியனுர் கூறிப் போந்த பொழுதிலும், ஒன்றுபட்ட தமிழகத்தை அடிகளாரே முதலில் கண்டார். தமிழ், தமிழ் நாடு என்ற எல்லை வரம்பில் ஒற்றுமை வேண்டும் என்று அடிகளார் பலவிடத்தில் நிறுத்திக் கூறியுள்ளார். எனவே சிலப்பதிகாரம் தமிழ்த் தேசிய காப்பியமாகும்.

தமிழ்த் தேசியம் 20-ம் நூற்ருண்டில் ஊற்றெடுத்த ஓர் உணர்ச்சி வெள்ளமாகும். தமிழ் நாட்டில் சிறப்பாகப் பாரதியின் காலத்திலும், ஈழ நாட்டில் இருபதாம் நூற்ருண்டின் நடுப்பகுதியிலும் ஆரம்பமானது என்று கூறுவது பொருந்தும். இதற்கு அரசியல் சூழ்நிலையே பெரும்பாலும் காரணமாக அமைந்துள்ளது. தமிழ் நாட்டிலே, சோம்பிக்கிடந்த தமிழினத்தைத் தட்டி எழுப்பி, வெள்ளையர் ஆட்சியை வேரறுக்கத் தமிழ்த்தேசியம் வளர்க்கப்பட்டது. ஈழத்தில் வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பிரதேசங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களை ஒன்று திரட்டி ஒரு சக்தியாக்க தமிழ்த் தேசியம் உதவுகிறது.

### திருமணத்தில் திரண்டனர்

'வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' என்று மூவேந்தர் நாட்டையும் தமிழகமென்று தொல்காப்பியனுர் கூறிய போதிலும் அக்கருத்து அக்காலத்தில் வேருன்றியிருந்தது என்று கொள்வதற்கில்லை. இது 'டாண்டே' கண்ட இத்தாலி போன்று வெறும் கற்பனையாகவே இருந்தது. இதற்குச் சங்கச் செய்யுட்கள் சான்று வழங்குகின்றன. ஒவ்வொரு தமிழ் மன்னனும் தன்னுடைய மண்ணையே தமிழ் நாடு என்று போற்றினுன், தமிழர்கள் வாழ்ந்த ஏனைய மாநிலங்களை அன்னிய நாடுகள் என்றே எண்ணி அடிக்கடி போர் தொடுத்து ஆக்கிரமித்தனர். மன்னன் வழியையே மக்களும் அறிஞர்களும் பின்பற்றினர். தமிழ் என்ற மொழிப் பற்றின் காரணமாக, தமிழன் என்ற இன நெறியின் காரணமாக முடியுடை மூவேந்தரும் ஒன்றுபட்டனர் என்பதற்குச் சான்றுகள் இல்லை. இந்த ஒற்றுமையைக்காணத் துடித்த ஒளவை மூதாட்டி பாரிவள்ளல் மகளிர் திருமணத்தில் மாத்திரமே கண்டார்.

இளங்கோவடிகள் சங்க காலச் சான்ருேரைக் காட்டிலும் ஒருபடி உயர்ந்து பிளவுபட்ட மூவேந்தர் நாட்டையும் மும்மைத் தமிழகமாகச் செய்தார். மூவேந்தரைப் பல விடயங்களிலும் ஒப்ப ஒருங்கு புகழ்ந்துபாடுகிருர். சேரர் குடியிற் பிறந்த செம்மல் பாண்டியனையும் சோழனையும் இகழ்ந்தானல்லன். சேரனை எவ்வளவுக்கு உயர்த்திப் பாடுகிருரோ அவ்வளவிற்குப் பாண்டியனையும், சோழனையும் போற்றத்

**சி. கணேசலிங்கம் பி. ஏ.**

தவறவில்லை. கரிகாற் சோழனையும், சோணுட்டின் செழுமையையும் புகார்க் காண்டத்தாலும், நெடுஞ்செழியனையும் பாண்டி நாட்டின் பெருமையையும் மதுரைக் காண்டத்தாலும், செங்குட்டுவனையும் சேர நாட்டின் சிறப்பையும் வஞ்சிக் காண்டத்தாலும் போற்றுகிருர். மும்மைத் தமிழகத்தையும் ஒன்றுபடுத்த தமிழ்ப் பாவை ஒருத்தியின் துணையை நாடுகிருர். அப்பெண்மையின் திருவுருவம் சோணுட்டில் பிறந்து, பாண்டி நாட்டில் வாழ்ந்து, சேர நாட்டில் கோயில் கொள்கிறது.

### அடிகளார் விருப்பு

தமிழ் என்ற மொழிப் பற்றின் காரணமாகவும், தமிழன் என்ற இன நெறியின் காரணமாகவும், தமிழ் நாடு என்ற தன்மான உணர்ச்சியின் காரணமாகவும், தமிழர்கள் ஒன்றுபட வேண்டுமென்று அடிகளார் பல விடங்களில் எடுத்துக் கூறுகிருர். அரசாலும், இடத்தாலும், மதக் கோட்பாட்டாலும் வேறுபடினும், தமிழ், தமிழினம், தமிழ் நாடு என்ற உணர்வால் ஒன்றுபட வேண்டுமென்று வலியுறுத்தும் முதற்காப்பியம் சிலம்பு. இவ்வுணர்ச்சியை உரஞ்செய்ய அடிகளார் செங்குட்டுவனைப் பயன்படுத்துகிருர். தமிழ் நாட்டு மன்னனை வட நாட்டு வேந்தர் இழித்துரைத்தனர் என்று அறிந்ததும் வெஞ்சினம் கொள்கிருன். தமிழ் வேந்தரில் எம்மன்னனை இழித்துரைத்தனர் என்று ஆராயத் தலைப்படவில்லை. தமிழ் மன்னன் ஒருவனை இழித்துரைப்பின் அது தமிழ் மன்னர் மூவருக்குமே இழிவெனக் கருதிப் போர் தொடுக்கிருன். இதைக் கூறவந்த அடிகள், 'தமிழ்ப் படை சென்றது; தமிழர் வீரம் வென்றது; தமிழ் வேந்தனை இழித்துரைத்தோரைப் பழிவாங்கினுன்' என்ருர்.

### தீர்க்க தரிசனம்

போற்றி வளர்க்கப்பட வேண்டிய தமிழ்த் தேசியத்தை மதப்பூசல் உடைக்குமென்று அடிகளார் கருதினுர். [illegible] [illegible] அதனுல் தமிழர்கள் மத்தியில் பல மதங்களும் நிலைபெறும், எனவே மதச் சார்பற்ற மொழி அடிப்படையில் தமிழ்த் தேசியத்தை உருவாக்கினுர். சிலப்பதிகாரத்தில் பல மதங்களும் போற்றப்படுகின்றன. கடவுள் வாழ்த்தில் ஒரு தெய்வமும் குறிப்பிடப்படவில்லை இயற்கைப் பெருஞ் சக்தியையும், இன்தமிழ் நாட்டையும் நல்லாட்சியையுமே வாழ்த்துகிருர். கோவில் கட்டப்பட்ட கண்ணகியும், மதச் சார்பற்ற தெய்வமாக வர்ணிக்கப்படுகிருள். கற்பின் வலிமையையும், தமிழ்ப் பெண்ணின் பெருமையை

(15-ம் பக்கம் பார்க்க)

---

## கவிதைப் பூங்கா

### ஏற்றம் புரிந்திட வாழ்ந்திடுவோம்!

—"கலையரசன்"—

விண்ணைத்தழுவக் கொடி பறக்கும்—தமிழ்
  வீரம்புகல முரசொலிக்கும்
கண்ணை நிகரெனும் நம் நாட்டில்—பல்
  கலையும் நிமிர்ந்து சிரித்திருக்கும்
எண்ணம் பிறந்து ஆக்கம் பெறும்—அதில்
  எண்ணரும் நலம் சேர்ந்திருக்கும்
நண்ணும் பசிப்பிணித்துன்பமில்லை—இங்கு
  நாடிடும் நன்மைக்கு ஈடுமில்லை

கட்சிகள் பேதங்கள் யாவுமில்லை—இங்கு
  காட்டிக் கொடுக்கும் கயமையில்லை
பட்டம் பதவி பெறுவதற்காய்—தமிழ்
  பாரினை விற்பவர் யாருமில்லை
மொழியினைப் போற்றி வளர்த்திடுவர்—அதை
  விழியின் நிகர் எனக் காத்திடுவர்
அழியின் உயிரினை நீத்திடுவர்—அதன்
  அழகின் உவகையிற் பூத்திடுவர்

வள்ளுவம் பிறந்த தெம்மொழியில்—பல
  வள்ளல்கள் வாழ்ந்தது மெம்மினத்தில்
எல்லாளன் சங்கிலி போன்ற மன்னர்—நல்
  ஏற்றம்புரிந்தது நம்நாட்டில்
கற்பினைக் கண்ணெனப் போற்றிடும்—மாதர்
  கணவனைத் தெய்வமாய்க் கொண்டிடுவர்
நற்பயன் பெற்றது நம்நாடு—பல
  நாடும் புகழ்ந்த தமிழ் நாடு

இப்பெரும் நற்றிறம் பெற்றவர்—இன்று
  இங்கு கிடக்கும் நிலையென்ன?
முப்பெரும் படைகளும் இல்லாதுய் - போற்றும்
  முந்தையர் பண்புகள் கொள்ளாதுய்
தப்பிதம் செய்திட்ட கைதியென—இங்கு
  தாழ்ந்து பணியும் கொடுமையினை
இப்பொழுதோட்டிட வேண்டுமென்றே—தமிழ்
  ஏற்றம் புரிந்திட வாழ்ந்திடுவோம்!

—— | ஃ | ——

### எழு படைக்கு!

—பொன்—தவம்—

மான வீரக் கலவை யுரு
மதிலுள் வளர்ந்து மண்ணின் மேல்;
வானப் புகழில் வாழ்ந்த பெரு
வடிவுக் கூட்ட வழி வந்தோய்
ஈன மிங்கு இன்று தரு
இழிவு கண்டும் இன்னு மூண்;
ஏன மென்று எலும்புடலை
எண்ணி யிராதே யெழு படைக்கு!

புரண்டு விழுந்து வாய் புதைத்துப்
'புதிரா' யுண்டு தவழ்ந் தோடி;
உருண்டு திரிந்து தமிழ் தேர்ந்த
உரிமை மண்ணைக் கொடுமைக் காய்
வெருண்டு விட்டு வாழ் வாயா?
வெறுத்து விட்டுப் பயந் தோடி
இருண்ட கண்டஞ் சேர் வாயா?
இறத்தல் மேலே எழு படைக்கு!

எண்ணிப் பார்க்க நெஞ் சேங்கும்
இடமா யிருந்த மலை நாட்டைப்
பெண்ணு மாணுஞ் சேர்ந்(து) ஈழப்
பேறு யாக்க உடல் தேய்த்துக்
கண்ணீர், குருதி, உயிர் சேர்த்துக்
கள்ளக் தோணிப் பெய ரேற்ருல்;
மண்ணி லிழிவு வேறுண்டா?
மானங் காக்கப் படை சேரு!




**திருவாளர் குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ம.ச. தம்பையா,
பண்டத்தரிப்பு

கே: என்னுடைய மகள் நெசவுசாலையில் வேலை செய்கிருள். சம்பளம் எடுத்தால் தனியே படம் பார்க்கப்போகிருள். யாழ்ப்பாணத்திற்குப் பிடவை வாங்கப்போகிருள். போக வேண்டாம் என்ருல் அழுகிருள். அதற்கு என்ன செய்யலாம்?

ப: வளர்ப்பு வரம்பு மீறிவிட்டது. உடனடியாக மகளை ஒரு மாப்பிள்ளைக்குக் "கன்னிகாதானம்" செய்து விடுங்கள்.

கே: மாவட்ட சபை முறையை அமுல் நடத்திஞல் சிங்களம் அழியும் என்கிருர் ஒரு நாயக்க தேரோ. உண்மையா?

ப: பொய் — மாவட்ட சபைகளால் சிங்களம் வளருமேயன்றி அழியாது. தமிழின் வளர்ச்சிக்கும் இடம் கிடைக்கும்.

ஃ

என். எம். புஹாரி,
பேலியகொடை

கே: இலங்கையில் வாழும் ஒரு சில இஸ்லாம் மத அன்பர்கள் தமிழையே பேசிக் கொண்டு சிங்களவருக்கு வாலபிடிப்பதேன்?

ப: இப்படிச் செய்வது சுயநலமிக்க ஒரு சில முஸ்லிம் தலைவர்களேயன்றி முஸ்லிம் பெருமக்கள் அல்ல.

ஃ

வசந்தன்,
யாழ்ப்பாணம்

கே: யாழ்ப்பணத்தில் ஒரு மகளிர் பாடசாலையை வாலிபர்களும் மாணவர்களும் நகர் காவலர்களிலும் பார்க்க, கவனமாக ஆவலுடன் காவல் புரிவதேன்?

ப: வாடை பிடிக்க.

ஃ

கண்ணன்,
கொம்பனித்தெரு

கே: குயுக்தி மாமாவே! உமது வீட்டில் சமைப்பது வேலைக்காரியா? குயுக்தி மாமியா?

ப: குயுக்தி மாமியே! எனது சுவைக்கேற்ப வேலைக்காரி எப்படிச் சமைக்க முடியும்? வேலைக்காரி சமைத்தால் சம்பளம் கேட்பாளே! அதற்கு நான் எங்கே போவது?

ஃ

கா. பசுபதிப்பிள்ளை,
ஆரையம்பதி

கே: நான் ஓர் எழுத்தாளனுக வி்ரும்புகிறேன். இதற்கு என்ன செய்ய வேண்டும்?

ப: எழுதுங்கள்! எழுதிஞல்தான் எழுத்தாளஞக முடியும். எழுதுவதற்கு விஷயம் வேண்டுமே! அதற்கு அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்!

ஃ

ஒற்றுமைப்பிரியன்,
ஏழாலை மேற்கு

கே: தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து சமஷ்டிக் கட்சியினர் போராட்டம் செய்தால், ஏன் செய்கிருர்கள் என்றும், செய்யாது விட்டால் ஏன் செய்யவில்லை என்றும் சில சமஷ்டி விரோதிகள் கேட்கிருர்கள். இவர்களைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம்?

ப: எதையும் செய்யாமல் எதிலும் குற்றம் கண்டுபிடிக்கும் சோம்பேறிக் கும்பல் அது. அவர்கள் முற்றிலும் அலட்சியம் செய்யப் படவேண்டியவர்களே.

கே: சீனுவை எதிர்த்த இலங்கை ருஷ்யக் கோஷ்டியினர் கடைசி நேரத்தில் சீனப் பிரதமர் சூ என் லாயை வரவேற்றதின் நோக்கம் என்ன?

ப: அது உற்சாகமான வரவேற்பல்ல. அவர்களின் பத்திரிகைகளிலும் சீனப் பிரதமர் விஜயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. ஓர் இரகசியம்: திரு. சண்முகதாசனும், சௌ என்லாயும் 'தப்ரபேன்' ஓட்டலில் அளவளாவியதாகக் குயுக்தி மாமி கூறுகிருர்.

கே: அண்மையில் புரட்சிக் கொள்கைக்காகப் பொதுவுடைமைக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட தோழர் என். சண்முகதாசனும், இன்னும் சமசமாஜக்கட்சிக்குள் புரட்சி பேசும் தோழர் எட்மண்ட் சமரக்கொடியும் ஒன்று சேர்ந்து ஒரு புதிய அரசியல் கட்சியை உண்டாக்க முனைவார்களா?

ப: அவர்கள் ஒன்று சேர முடியாது. காரணம் திரு. சண்முகதாசன் தீவிர ஸ்டாலினீயவாதி — திரு. சமரக்கொடியோ தீவிர ட்ராட்ஸ்கீயவாதி.

ஃ

ஆ. லோகேஸ்வரன்,
இரத்தினபுரி.

கே: பத்திரிகைக் கமிஷன் முன் நீர் சாட்சியமளிக்கவில்லையா?

ப: இல்லை. உங்கள் கேள்விகளுக்கு விடையளிக்கவே எனக்கு நேரம் சரியாக இருக்கிறது.

ஃ

வை. சா. ஆனந்தன்,
காரைநகர்.

கே: மொழிப் பிரச்சினையைப் பற்றி பேசிவந்த என். எம். பெரேரா சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டத்தில் இரு இனமும் சேர்ந்து பொருளாதாரத்தைப் பலப்படுத்த வேண்டும் எனக் கூறிஞரே, இதன் நோக்கம் என்ன?

ப: மொழிப் பிரச்சினை தீர்ந்துவிட்டதாகத் தகவல் கிடைத்திருக்கும். எனவே இனி பொருளாதாரத்தைப் பலப்படுத்துவோமென்கிருர்.

ஃ

அ. சிவப்பிரகாசம்,
ஏழாலை மேற்கு.

கே: அடுத்த பொதுத் தேர்தலில் யூ. என். பி. ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றிஞல் இன்று, ஆளும் கட்சிக்கு "ஆமாம்" போடும் மேற்சபை உறுப்பினர் திரு. நடேசபிள்ளை அவர்கள் மீண்டும் யூ. என். பி. யினுல் மேற்சபை உறுப்பினராக நியமிக்கப்படுவாரா?

ப: நியமிக்கப்படலாம். முன்பு அந்தக் கட்சியில் இருந்தவர்தானே! எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஆளும் கட்சியை [illegible] சிலரின் அரசியல் உபாயம். அதனுல் அவர்களுக்குச் சொந்த முறையில் சில நன்மைகள் உண்டு.

கே: இலங்கையின் நிதி அமைச்சர் ரி. பி. இலங்கரத்தினவின் தற்போதைய நிலைமை என்ன?

ப: அவருடைய பட்ஜெட் தலைகிழாகக் கவிழ்ந்துவிட்டது. நிதி நிலைமை தெரியாமல் பட்ஜெட் தயாரித்த பெருமை தனக்குத்தான் உண்டு என்று இப்போதெல்லாம் பெருமையடித்துக் கொள்கிருராம்.

கே: சுதந்திரன் விளம்பரப் பலகையில் ஒரு சொல்லுத்தான் தமிழிலும் மிகுதிச் சொற்கள் ஆங்கிலத்திலும் இருப்பதாக என் நண்பர் ஒருவர் குறிப்பிடுகிருர். உண்மையா?

ப: அந்த ஒரு சொல் மிகுதிச் சொற்களையெல்லாம் விழுங்கி ஏப்பமிடக் கூடிய அளவுக்குப் பெரிதாக இருக்கிறதே. அதன் காலடியில்தான் கிடக்கின்றன ஆங்கிலச் சொற்கள். தமிழ் தெரியாத விளம்பரதாரர்களுக்கும் அச்சகத்துக்கு 'ஆடர்' கொடுக்க வருகிறவர்களுக்கும் அலுவலகத்தைச் சுட்டிக் காட்ட மட்டுமே ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

ஃ

கட்டுடையூரான், கட்டுடை.

கே: மாணவன் அரசியல் விடயங்களில் பங்கு பற்றலாமா?

ப: சிங்களக் காசோலைகள் மூலம் தமிழாசிரியர்கள் அரசியலுக்கு இழுக்கப்பட்டுவிட்டனர். பாடசாலைகளில் சிங்களத் திணிப்பு, சிங்கள ஆசிரியர்கள் நியமனம், தமிழ் வகுப்புகளை மூடி மாணவர்களின் கல்வி உரிமையைப் பறித்தல், பாடசாலைகள் புனரமைப்பு ஆகியவை மாணவர்களை அரசியலுக்கு இழுத்துள்ளன. அரசியலிலிருந்து ஆசிரியர்களோ மாணவர்களோ தப்பிவிட முடியாது.

கே: தமிழரசுப் போராட்டங்களை மலைநாட்டில் நடத்திஞலென்ன?

ப: [illegible] மலைநாட்டில் போராடும் நாள் வெகு தூரத்திலில்லை.

கே: தொண்டமானுக்கு பாராளுமன்றம் சென்ருல் வாயடைத்துவிடுமோ? காரணம் ஏதோ?

ப: அவர் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர். எனவே கைகாட்டுகிருர். மலைநாட்டு மக்களின் உரிமைகளுக்காக சண்டப் பிரசண்டம் செய்யத் தொடங்கிஞல் பதவி பறிபோய்விடுமே!

கே: சுந்தரலிங்கத்தார் சர்வ கட்சி மகாநாட்டில் பங்கு பற்றுவாரா அல்லது பொது மக்களுக்கு அறிக்கை விடுவாரா?

ப: மாநாட்டில் பங்கு பற்றுவாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனுல் தமிழரசுக் கட்சியைத் திட்டித் தீர்க்கும் நீண்ட அறிக்கைகளை அவரிடமிருந்து எதிர் பார்க்கலாம்.

ஃ

சி. நடராஜா, திருகோணமலை.

கே: இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அண்ணு நிச்சயம் வெற்றிபெறுவார் என்பதே என் கருத்து. தங்கள் கருத்தென்ன?

ப: வெற்றி பெறுவார்— வெற்றி பெற்றே ஆகவேண்டும். தி. மு. க. வின் எதிர்ப்புப் போராட்டம் இப்போதே தில்லி ஆட்சியாளரைச் சிந்திக்கத் தூண்டியுள்ளது. 'இந்தித் திணிப்பால் தென்னகம் குமுறி எழுந்துவிட்டது. மொழித் திணிப்பு பயன்படாது' என்கிருர் தில்லி மந்திரி சக்ளா.

ஃ

சு. மகேஸ்வரன், புங்குடுதீவு.

கே: தமிழ் நாட்டில் பலர் வேலையின்றிக்கஷ்டப்பட சிவாஜி கணேசன் ஒரு பெரிய தொழிற்சாலையை வேறு இடத்தில் கட்டுகிருரே. "தனக்குக் கண்டு தானம் வழங்கு" என்பதை அறியாரோ?

ப: கேரளத்தில் அமைக்கிருராம் ஒரு தொழிற்சாலையை. கேரளீயர்களும் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களே.

ஃ

வீ. சண்முகலிங்கம்,
நாரந்தனை தெற்கு.

கே: இதுவரை காலமும் தமிழ் மக்களின் நிலை கண்டும் மௌனமாயிருந்த சிலர், மொழிப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு ஏற்படப் போகிறது என்று அறிந்ததும் திடீரென்று பத்திரிகைகள் மூலம் அறிக்கைவிட்டார்களே இதன் மர்மம் என்ன?

ப: சுமுகமான தீர்வு ஏற்படும் பட்சத்தில், 'எனது அறிக்கையால்தான் அத்தீர்வு ஏற்பட்டது' என்று அவர்கள் ஒவ்வொருவரும் பிறகு பெருமை அடித்துக் கொள்ளலாமல்லவா?

ஃ

மு. கருணநிதி, ஏழாலை மேற்கு.

கே: இந்தியாவில் இதுவரை விட்ட ராக்கெட்டுகளிஞல் ஏதாவது பலன் கிடைத்ததா?

ப: இன்னும் பரீட்சார்த்தக் கட்டத்திலிருப்பதால் பலனை எப்படி எதிர்பார்க்க முடியும்?

கே: நேருவின் உடல் நிலை எப்படி இருக்கிறது?

ப: பிரதமர் பதவியைத் தாங்கக் கூடிய நிலையில் இருக்கிறது.

கே: உலகத்தில் உங்களுக்குப் பிடித்த ஐவர் யார்?

ப: (1) சலவைத் தொழிலாளி, (2) அதிகாலையில் பேப்பரைக் கொண்டுவந்து நீட்டும் பையன், (3) சலூன் தொழிலாளி, (4) நான் எழுதுவதைத் தட்டிக் கேட்காமல் எழுத்துக் கோக்கும் 'கொம்பஸிட்டர்', (5) வாராவாரம்கேள்விகளால் என்னை அபிஷேகம் செய்யும் நீங்கள்.

கே: எம். ஜி. ஆர். கரடிக் குட்டி வளர்க்கிருராமே?

ப: இருந்தாலும் அவருக்குக் கரடிவிடத் தெரியலையே!

ஃ

குமுதினி, அனுராதபுரம்.

கே: எங்கள் பாடசாலையில் திருமணமான ஆசிரியர் ஒருவர் மாணவியைக்காதலிப்பதுசரியா? முறையா?

ப: முறையற்ற செயல்— அவர் விவாகரத்துச் செய்து கொண்டவராயின், அவரை மன்னிக்கலாம்.

## நீசத்தனம் நிறைந்து போச்சுது

—(வேலவன், தம்பலகமம்)—

மனிதருக்கு அறிவு மிக அதிகமாச்சுது
மக்கள் வாழ்வில் இருந்து வந்த அமைதி போச்சுது
புனிதமான அஹிம்சைக் கொள்கை புகையலாச்சுது
புத்தர் காந்தி யேசு வார்த்தை புளித்துப் போச்சுது
கனிவு என்ற சொல்லுக்கிங்கே பஞ்சமாச்சுது
கஷ்டப் பட்டுப்பட்டு நெஞ்சு கன்றிப் போச்சுது
நினைத்தவுடன் போரின் பீதி நெஞ்சை வாட்டுது
நீசத் தனம் மக்களிலே நிறைந்து போச்சுது

சந்திரனின் உலகைக் காண்போம் என்று சொன்ஞங்க
சற்றும் ஓய்வு ஓச்சல் இன்றி உழைத்திடுருங்க
அந்தரத்தில் தொத்திக் கொண்டு அணுக்குண்டைபோட்டு
இந்த அகிலத்தையே அழித்துப்போட ஆசைப்படுருங்க
இந்த நிலை மனிதருக்கா எய்திட வேண்டும்
இறைவா இந்த மனுகுலத்தைக் காத்திடவேண்டும்
தொந்தரவு ஏதுமின்றிச் சுகமாய் வாழ்ந்திட
துணை இருந்து கடவுள் எம்மைப் பார்த்திடவேண்டும்

நீர்க் குமிழி வாழ்க்கை இது என்று தெரிந்தும்
நினைத்தபடி நடக்கிருங்க நீசத்தனமாய்
போர்க் கருவி செய்வதற்காய் செலவு செய்திடும்
பொருளைக் கொண்டு மக்கள் தம்மை வாட்டிடும் பசியை
தீர்த்திடலாம் என்று யாரும் எண்ண வில்லையே
தெரிந்திருந்தும் கொடுமை ஓங்க உழைக்கிருங்களே
நேர்மை யற்ற வழிகளிலே நினைவைச் செலுத்தும்
நீசத்தனம் மக்களிலே நிறைந்து போச்சுது.

**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, நீரேசும் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதிஞல் இனுமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.
வி. பி. பி. செலவு வேறு

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174 செட்டியார் தெரு கொழும்பு—11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசபணியில் அவதியுறும் தமிழர்களின் நிலை

## ஆட்சி மொழி கற்றிருந்தும் அல்லல்கள் ஓயவில்லை

**பதவி நிலைக்க, உயர்ச்சி பெற, பண வருவாயைப் பெருக்கக் கருதிய தமிழ் அரசாங்க ஊழியர்களில் அனேகர் அரசின் சூழ்ச்சி வலையில் சிக்கிச் சிங்களம் படித்தனர். இன்று இரண்டுங்கெட்டான் நிலையில் திணைக்களங்களில் நாயினும் கேவலமாக நலிகின்றனர்.**

**அரசாங்கத்தின் அழுத்தமெதுவுமின்றியே தமிழ் ஆசிரியர்கள் இன்று சிங்களம் படிக்க முன்வந்திருப்பது யானை தன் தலையிலேயே மண்ணைத் தூவுவதற்கு ஒப்பாகும் முஸ்லிம்கள் சிங்களத்தைத் தேர்ந்தால் அழிவுக்கு வித்திடுவார்களே அன்றி சிங்கள வெள்ளத்தில் எதிர்நீச்சடித்து வெற்றிபெற முடியாது.**

அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிக்க வேண்டும் என்ற குரலை அரசாங்கம் விடுத்ததுதான் தாமதம், விழுந்தடித்துக் கொண்டு பலர் சிங்களம் படிக்க ஆரம்பித்துவிட்டனர். ஓரளவு படித்துவிட்டு வேலை எதுவுமின்றிச் சோம்பித் திரிந்த பல சிங்கள வாலிபர்கள் சிங்கள போதனாசிரியர்களாக மாறினார்கள். கொழுத்த வருவாயைத் தமிழ் ஊழியர்களிடமிருந்து பெற்று வயிறு வளர்க்கிறார்கள்.

மாதப்படி எடுத்து வாழ்க்கை வண்டி ஓட்டுவதற்கே துன்பப்பட்டுழலும் தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களப் படிப்புக்காகக் கொள்ளை கொள்ளையாகக் கொட்டினர்.

அரிச்சுவடி தயாரிக்கும் சிங்களப் புத்தக வெளியீட்டாளர்கள் பதிப்புக்கு மேல் பதிப்பு, பல பதிப்புக்களாக, புத்தகங்களைத் தயாரித்துத் தமிழ் இளைஞர்களின் கையையும் பையையும் காலியாக்கினர். இத்தனைக்கும் மத்தியில் தமிழ் இளைஞர்கள் பெற்ற சிங்கள அறிவோ வர்ணிக்கும் தரமன்று.

பதவி நீடிப்பு, பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்ற விஷம் தடவிய இனிப்பைக் காட்டித் தமிழ் இளைஞர்களை மயக்கிச் சிங்களம் படிக்க வைத்த அரசின் சூழ்ச்சி வெற்றியளித்ததென்றே கூறலாம். அரசினர்க்கு மட்டுமல்ல, அரசை மொழித் துறையில் தூண்டிவிடும் வகுப்பு வெறியர்களுக்கும் நன்கு தெரியும்—பிறந்த நாள் முதல் இன்று வரை சிங்களத்திலே ஊறித் திளைத்த சிங்கள இனத்தவருடன் தமிழ் பேசும் இளைஞர்கள் போட்டியிட்டு வெற்றியீட்ட முடியாது என்பது.

சிங்களம் படித்தால் வேலை—சிங்கம் படித்தால் பதவி உயர்ச்சி—சிங்களம் படித்தால் பண வருவாய் என்றெல்லாம் வலை விரித்தது, தமிழ் பேசும் இளைஞர்களுக்குச் சந்தர்ப்பமளிப்பதற்காக அல்ல, சிங்கள இளைஞர்

“வேல்”

களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக — தமிழ் இளைஞர்களைப் பொதுத் துறைகளிலிருந்து ஒதுக்குவதற்காக.

இந்த உண்மையினை உணராத தமிழ் பேசும் இளைஞர்கள் ‘நீ முந்தி நான் முந்தி’ என்று சிங்களத்தைப் படித்தார்கள். விழுந்து விழுந்து

## தமிழ் ஆசிரியர் நிலை என்ன?

படித்தார்கள். தமிழ் பேசும் இனத்தைப் பணயம் வைத்துப் படித்தார்கள். தன் மானத்தைத் துறந்து படித்தார்கள்.

பரிதாபத்துக்குரிய இவர்கள் இன்று அரசாங்கத் திணைக்களங்களில் அனுபவிக்கும் அல்லல்களோ அளவிடற்கரியதாகி விட்டன. நாயினும் கேவலமாக அவதியுறுகிறார்கள்.

கூடுதலான விகிதாசாரத்தினர் தங்கள் நிலையைக் காப்பாற்ற இனத்தின் மானத்தை விற்று சிங்களத்தைப் படித்ததனால் இன்று ஒற்றுமையுடன் ஒருமித்து உரிமை கோரிப் போராட முடியாத நிலையில் அரசாங்க ஊழியர்கள் உள்ளனர்.

தன்மானத்தோடு இந்நாட்டின் நிர்வாகத் துறையில் தலைநிமிர்ந்துவாழ்ந்த தமிழ் பேசும் மகன் இன்று கைகட்டிச்சேவகம் புரிந்து மாற்றானிடம் மண்டியிட்டு அவன் காலடியில் உருளும சோற்றுப் பருக்கைகளைப் பொறுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டான். இந்த இழி நிலைக்குப் பொறுப்பு யார்?

இரவுபகல் பாராது, இடுக்கண்களை ஏற்று, இன்னல்பட்டு இடர்பட்டு இனத்தின் விடுதலையைத் தேடிட ஓடும் தலைவர்களின் சொற்களைத் துச்சமாக மதித்து, சூது மதியினரின் சூழ்ச்சி வலையே தஞ்சமென்றிருந்தவர்களின் அற்ப பதவி ஆசை — பணத்தாசை இன்று இனத்தை வேரறுக்கும் கூரிய வாளாகி விட்டது. ஏகோபித்துக்குரல் எழுப்பி, இழைக்கப்படும் அநீதியை எடுத்துக் கேட்க நாதியற்ற நிலையில் தமிழ் பேசும் இனம் தள்ளப்பட்டு விட்டது.

### தமிழ் ஆசிரியர்கள்

அரசாங்க ஊழியர்கள் சென்ற பாதையினைப் பின்பற்றும் பணியினில் இன்று தமிழ் ஆசிரியர்கள் தலை வைக்க முன் வந்திருப்பது பெரும் கிலேசத்தை வளர்ப்பதாகிறது. அரசாங்கத்தின் அழுத்தம் இல்லாதிருக்கும் போதும், சிங்களத்தைப் படிக்கவும், சோதனைகள் எடுக்கவும் தமிழ் ஆசிரியர்கள் முனைந்து கொண்டிருப்பது ஆசிரிய சமூகத்துககு இழுக்குத் தேடுவதோடு மட்டுமல்லாமல், யானை தன் துதிக்கையால் தானே மண்ணை அள்ளிக் கொட்டுவதற்கு ஒப்பாகும்.

ஆசிரியர்கள் சிங்களம் படிக்க முற்பட்டால், உத்தியோகங்கொண்ட மாணவர்களும் ஆசிரியர்களை விடப் பல மடங்கு முன் செல்வார்கள்.

இரண்டாவது பாடமாகச் சிங்களம் தமிழ்ப் பிள்ளைகளுக்குப் போதிக்கப்படுவதும் ஆபத்தானது என்பதை இப்பொழுதே தமிழ் பேசும் மக்கள் உணர்ந்து கொண்டு செயற்பட வேண்டும். ஒரு பாடத்தை மட்டும் சிங்களத்தில் படித்துச் சிங்களத்தில் கடமை செய்யும் அளவு, மொழி வளர்ச்சியை ஒரு மாணவன் பெற்றுவிட முடியாது. ஆகவே நாளா வட்டத்தில் சகல பாடங்களையும்—ஏன் ஆரம்பக் கல்வியையுமே சிங்களத்தில் பெறவே மாணவனும்—அவன் பெற்றோரும் விரும்புவர். இது இயற்கையாகவே மனோதத்துவரீதியான உண்மை. இந்நிலையில் தமிழ் ஆசிரிய சமுதாயத்தின் நிலை என்ன?

ஒவ்வொரு தமிழ்ப் பாடசாலையிலும் ஒவ்வொரு சிங்கள ஆசான் கடமையாற்ற வந்துவிட்டால், அவரே தலைமை ஆசிரியரின் நிலைக்கு உயர்ந்து விடுவார். அரசாங்கத்துடனும் கல்வி இலாகாவுடனும் உத்தியோக மொழியில் தொடர்புகொள்ளும் பொறுப்பு அவரையே சார்ந்துவிடும். சிங்களத்தில் [illegible] சிங்கள ஆசிரியர் மேலதிகமான பொருளீட்டி கிராமத்திலோ அல்லது கடமை பார்க்கும் எந்த ஊரிலோ முக்கியமான பிரமுகராகி விடுவார். அரசாங்கச் சலுகைகளும் அவருக்கே அதிகமிருக்க ஏதுவுண்டு.

ஒரு பாடத்துடன் ஆரம்பித்த சிங்கள வகுப்புகள் மெல்ல மெல்ல சகல பாடங்களிலும் புகுந்து, ஈற்றில் தலைமை ஆசிரியரே சிங்களவராகி, பாடசாலையே சிங்கள மயமாகிவிடவும் கூடும். இது வெறும் கற்பனையல்ல. தமிழ் ஆசிரியர் சமூகம் விழிப்புடன் சிந்தித்துச் செயலாற்றுமல் விட்டால் நாளா வட்டத்தில் நடைபெறப் போகும் நிலைமையை நாம் அலசும் போது தென்படும் உண்மைஇதுவாகும். தமிழ் ஆசிரிய சமூகத்துக்கே இந் நாட்டில் இடமில்லாது போய் விடும்.

### முஸ்லிம்களின் நிலை

இலங்கையின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் முஸ்லிம்களின் மொழி தமிழேயாகும். பதவி ஆசை கொண்டு அரசியலில் குறுக்கு வழி தேடுவோர் புரட்டுகள் பல புரியலாம். ஆனல் தமிழ் மொழியைத் துறந்தால் இஸ்லாமிய சமூகமும் எதிர் காலத்தில் “புத்தம் சரணம் கச்சாமி” பாட வேண்டிய நிலைதான் ஏற்படும் என்பதை எடுத்துக் கூறவேண்டியுள்ளது.

இஸ்லாமியர்களில் இன்று ஆயிரக்கணக்கான தமிழ் ஆசிரியர்கள் தோன்றியுள்ளனர். இஸ்லாமியர் சிங்களத்தைத் தேர்ந்தெடுத்தால், பொது வாழ்வில் மட்டுமல்லாமல் இலக்கியத் துறையிலும் தமிழுக்குத் தொண்டு புரிவதில் மேம்பட்டு நிற்கும் இஸ்லாமிய இளைஞர்களின் வருங்காலம் என்னவாகும்?

ஆங்கிலத்தை ஆய்ந்து கற்க முற்பட்டவர்கள், சிங்களத்தை ஏன் கற்க முடியாது? என்று வினவெழுப்புவோரையும் நாம் காண்கிறோம். அடிமைப்படுத்தி எமை ஆண்ட அந்நியன் சகல தொழில்களுக்கும் தன் நாட்டிலிருந்தே ஆட்களைத் தருவிக்க முடியாததனால், அவனுடைய மொழி கற்றவர்க்கு விசேட சலுகைகளைக் கொடுத்தான். காரியமாற்றுதற்கு ஆள்வோனன அவன் மொழி தெரிந்தோர் அதிகமிருக்கவில்லை.

### ஆங்கிலத்தின் நிலை

இங்கு இன்று ஆளும் வர்க்கமே பெரும்பான்மையாகவிருக்கிறது. வசதிகளும் வாய்ப்புகளும், சலுகைகளும் அவர்களுக்கே அதிகமாகவுள்ளன.

மூன்று பல்கலைக் கழகங்களிலிருந்து வருடா வருடம் பல்லாயிரக்கணக்கான சிங்களப் பட்டதாரிகள் வெளியேறுகிறார்கள். ஆட்சி உறுதி பெற்று, அரவணைப்பும் கொண்டு, முன்னேற வாய்ப்புமுள்ள சிங்கள வாலிபர்களுடன், இரண்டாம் மொழியாக வேற்று மொழியைக் கற்று முன்னேறிப் போட்டிபோட எந்தத் தமிழ்—இஸ்லாமிய மாணவனுக்காவது சந்தர்ப்பம் கிடைக்க முடியுமா?

இவற்றை ஆராய்ந்து தமிழ் பேசும் ஆசிரிய சமூகம் சிங்கள மோகத்தைக் கைவிடுதல் அவசியம். இன்றேல் அரசாங்க ஊழியத்திலிருந்து அரை குறைச் சிங்களத் தேர்ச்சியாளர்கள்படும் வேதனையை விடப் பன் மடங்கு வேதனையை அனுபவிக்க வேண்டியேற்படும்.

---

### சந்தியில்....

கடந்த மாத ஆரம்பத்தில் வடமாகாண ஆசிரியர் சங்கம் கூடி மிக முக்கியத்துவம் வாய்ந்த இரு தீர்மானங்களை நிறைவேற்றியது. இரண்டாவது தீர்மானம் கீழே தரப்படுகிறது:-

‘எல்லா ஆசிரியர்களும் அரசாங்கத்துடனும் ஒருவரோடு ஒருவரும் பாடசாலை சம்பந்தமான எல்லா விடயங்களையும் தத் தமது தாய் மொழியில் செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.’

இத் தீர்மானத்தையும் ஒரு தமிழ் ஆசிரியா எதிர்த்திருக்கிறார். அவர் எப்பேர்ப்பட்டவராயிருக்கவேண்டும்?

மொழிப்பிரச்னையைத் தீர்ப்பதற்காகப் பிரதமர் முயற்சி எடுக்கிறார் என்பதைக் காற்றுவாக்கிலேயே கேள்வியுற்று உடனேயாம். கொம்யூனிஸ்ட் கட்சிக் கிளையைக் கூட்டி ‘உடனடியாக மொழிப் பிரச்சினை தீர்க்கப்பட’ வேண்டுமென்று அறிக்கை விட்ட கொம்யூனிஸ்ட் பிரமுகர் தான் அவர்.

* * *

பாடசாலைகளை அரசாங்கம் கையேற்கப் போவதை அறிந்த இன்னுமொரு ‘தோழர்’ ஆசிரியர் ‘கண்ணாமூச்சி’ விளையாட்டில் இறங்கினார். அரசாங்கம் எடுக்காத பாடசாலையைத் தேடி ஓடினார். ஆனல் அங்கேயும் மூக்கறுபட்டு விட்டது. அடுத்த பொதுத் தேர்தலை மனதில் கொண்டு வசதியான ஒரு தொகுதியையும் கருத்தில் கொண்டு, சேவையிலிருந்து விலகினால்கிடைக்கக் கூடிய ‘பென்ஷன்’ தொகையையும் கணக்கிட்டுக் கொண்டிருந்தார்.

இ. ஐ. முன்னணி ‘தோழர்’ கற்பனை செய்திருந்த தொகுதிக்கு வேறு ஒரு வேட்பாளரை நிறுத்துவதற்கு இப்பொழுதே தயாராகிக் கொண்டதை அறிந்து வேதனை கொண்டு, வேறு தொகுதியில் வாலாட்ட நினைக்க, அங்கேயும் ஒரு ல. ச. ச. கட்சி வேட்பாளர் தம்மைத் தயாராக்கி வருவதை அறிந்து கொட்டாவி விட்டுக் கொண்டுள்ளாராம். தேர்தலைக் கற்பனை செய்து கொழுத்த சம்பளத்தை விட்டு விடாததையிட்டு ஓரளவு திருப்தியுமடைகிறாராம்.

* * *

இலங்கை வானொலி சிங்கள ஒலிபரப்பில் ஒருநாள் தமிழ்பாடல்கள் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தனவாம். உற்றுக் கேட்டபோது அவை தென் மோடியில் அமைந்த ஒரு நாட்டுக் கூத்து என்று தெரிய வந்ததாம். அந்த ஒலிபரப்புக்குப் பொறுப்பானவரிடம் விசாரித்தபோது, “சிங்கள நடன முறையைத் தழுவி இது அமைக்கப்பட்டமையினல் அதை நாங்கள் சிங்கள ஒலிபரப்பில் ஒலிபரப்புகிறோம். சிங்களக் கலையின் அசல் கொப்பி இதுவாகும்” என்று கூறினாராம். இத் தகவலை ஒரு ‘ஊருமகன்’ அம்மானுக்கு எழுதியிருக்கிறார்.

மட்டக்களப்பில், போற்றிப் பாதுகாக்கப்பட்டு வரும் தென் மோடி நாட்டுக் கூத்து சிங்களக் கலையின் பிரதிமைதானு? அறிஞர்கள் இதையிட்டு ஆராய்ந்து ‘சுதந்திர’னுக்கு எழுதுவார்களா?

—அம்மான்

---

பாட்டரி ரேடியோ
பாவிப்பாளருக்கு ஓர் நற்செய்தி!

ஜேர்மனியில் செய்யப்பட்ட
‘கிரண்டிக்’ ரேடியோ பாட்டரிகள்
இப்பொழுது கிடைக்கும்.

90 வி. எச். றி. * 1.5 எல். றி.

450 தொழிலாற்றும் மணித்தியாலங்
களின் வாழ்நாளுக்குச் சமம்.

விபரங்கள்
உங்கள் பட்டணத்திலுள்ள ‘கிரண்டிக்’
விற்பனையாளரிடமிருந்து

அல்லது

‘கிரண்டிக்’ ஏக விநியோகஸ்தர்கள்:-

சென்ற் அந்தனீஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
516, ஸ்கின்னர்ஸ் றேட் தெற்கு,
கொழும்பு-10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலைத் துறைமுகத்தில் சீனர்கள்!

# இரகசிய சோதனை

## பொலீசார் உதவியுடன் நடைபெற்றது

## சண். கோஷ்டியிடமிருந்து சென் யீ தகவல் பெற்றார்

"சில தினங்களுக்கு முன்பு திருகோணமலைத் துறை முகத்துக்கு வந்த சீனர்கள் ஐந்து பேர், துறைமுகப் பொலீஸாரின் அனுமதியைப் பெற்று ஒரு படகிற் சென்று இரகசிய சோதனைகள் நடத்தியதாக அறியப்படுகிறது."

இவ்வாறு திரு. பிலிப் குணவர்தனவின் "மகா ஜன எக்ஸத் பெரமுன" என்ற வாராந்தப்பத்திரிகை 7-3-64ந் திகதி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

இச் செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"இந்தச் சீனக்கோஷ்டிக்குத் தன்னிச்சைப்படி பரிசோதனை நடத்துவதற்கு வசதிகள் செய்து கொடுக்குமாறு மேலிடத்திலிருந்து பொலீசுக்குக் கட்டளையிடப்பட்டதா?

திருகோணமலையைப் போன்ற மிக முக்கியமான ஒரு துறைமுகத்தில் சோதனைகள் செய்வதற்கும், குறிப்புகள் எழுதிக் கொள்வதற்கும் இந்த ஐந்து சீனர்களுக்கும் வசதிகள் எப்படிக் கிடைத்தன?

அதற்கு அனுமதி வழங்கியது யார்?

இலங்கைப் பிரஜை ஒருவருக்குக் கூட அனுமதியின்றி பிரவேசிக்க முடியாத, கடுமையான காவல் கட்டுப்பாடுகளுள்ள கேந்திரஸ்தானமான திருகோணமலைத் துறைமுகத்தைப் பரிசோதிப்பதற்குச் சீனர்களுக்கோ வேறுயாருக்கோ இரகசியமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தால், அது மிகப் பெரிய குற்றமாகும்.

இந்தப் பரிசோதனையை நடத்தியவர்கள் அமெரிக்காவின் பொம்மையான சியாங் கெய் ஷேக்கின் ஒற்றர்களா? இல்லையேல் மக்கள் சீன அரசாங்கத்தின் பிரதிநிதிகளா?

அவர்கள் யாராக இருந்தாலும் சரி, அமெரிக்க தூதராலயத்துக்கோ சீனத் தூதராலயத்திற்கோ தெரியாமல் அரசாங்கம் இத்தகைய செயலுக்கு அனுமதி அளித்திருக்க முடியாது.

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற இலங்கையை மற்றொரு வல்லரசுக்கு அடிமைப்படுத்த இந்த நாட்டு மக்கள் தயாரில்லை.

ஆகவே அந்தக் கேள்விக்கு வெளி விவகார, பாதுகாப்பு அமைச்சரான பிரதம மந்திரி உடனடியாகப் பதிலளிக்க வேண்டும்."

## இரகசிய ஒப்பந்தம்

"சீனத்துக்கும் இலங்கைக்குமிடையே இரகசிய ஒப்பந்தமொன்று செய்யப்பட்டிருப்பின், இலங்கை அரசாங்கம் அந்த ஒப்பந்தத்தை உடனடியாகப் பகிரங்கப் படுத்த வேண்டும்."

இவ்வாறு ஐ. தே. கட்சியின் 'சியரட்ட' பத்திரிகையில் இவ்வாரம் (6-3-64)ல் 'தேச பூஜித்த' என்பவர் எழுதியுள்ள அரசியற் குறிப்பில் இலங்கை அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் தனது அரசியற் குறிப்பில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

'சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எம். பிகள் அநேகர் அக்கட்சியிலிருந்து வெளியேறத் தீர்மானித்திருப்பதை ஏற்கனவே பன்முறை இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

சில தினங்களுக்கு முன்பு ஆளும் கட்சியின் முன்னணித் தலைவர் ஒருவரைச் சந்தித்த இந்த எம். பிகள் கோஷ்டி தங்களின் இராஜிநாமாவை ஏற்றுக்கொள்ளும்படி அவரைக் கேட்டுக் கொண்டனர்.

இந்தத் தலைவர் மிக முக்கியமான சில வாக்குறுதிகளை அவர்களுக்கு அளித்து, அவர்களின் ராஜிநாமாக்கடிதங்களை வாபஸ்பெறச் செய்தாராம்.

யுத்தம் ஏற்படும் சமயத்தில் அல்லது வேறு நெருக்கடியான வேளையில் இலங்கையில் சீன முகாம் ஒன்று நிறுவிக்கொள்ள இலங்கை அரசாங்கம் சீனாவுக்கு வாக்குறுதி அளித்திருப்பதால் சீனாவிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய் பெறுமான துணிமணி, அரிசி இலவசமாகக் கிடைக்குமென்றும், இந்தச் சீன உதவியைக் கொண்டு அச்சமின்றி பொதுத் தேர்தலை நடத்தலாமென்றும் அந்தப் பிரமுகர் எம். பிகள் கோஷ்டியினரிடம் கூறினாராம்.

மந்திரிசபையில் பொறுப்புள்ள அமைச்சர் ஒருவரால் கூறப்பட்டதாகக் கூறப்படும் இத்தகவலிலிருந்து இலங்கை சீனாவுக்குக் காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. கோடிக் கணக்கான ரூபாய் பெறுமான துணிமணியும் அரிசியும் சீனாவிடமிருந்து இலவசமாக இலங்கைக்குக் கிடைக்கக் காரணமென்ன?

சீனாவுக்கு இவ்வளவு பெரிய கருணை உள்ளம் ஏற்படக் காரணம் இப்பொழுது அம்பலமாகியுள்ளது.

கட்டுநாயக்கவிமானத்தளம், இரத்மலானா விமான நிலையம், திருமலைத் துறைமுகம் ஆகிய சர்வதேச முக்கியத்துவம் பெற்ற இடங்களில் அவசியம் ஏற்படும்போது முகாம் அடித்துக்கொள்ள இலங்கை அரசாங்கத்தால் சீனர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சீனப் பிரதமர் சௌ-என் லாயுடன் தளபதி சென் யீயும் இலங்கை வந்திருந்தார். இவர் ஒரு படைத் தளபதி, சீன வெளி விவகார உதவி மந்திரியும் கூட.

இலங்கையை அடிப்படையாவது சீனத்தின் [illegible]மாக்கிவிட வேண்டுமென்றும், இந்தியாவைத் தாக்குவதற்கும், ஆசியாவில் தன் செல்வாக்கைப் பரப்புவதற்கும் இலங்கையைப் போன்ற ஒரு கேந்திரஸ்தானம் முழு ஆசியாவிலும் கிடையாதென்றும் சென் யீ மிக இரகசியமாகக் கூறியுள்ளார் என்று அறியப்படுகிறது.

என். சண்முகதாசன், பிரேமலால் குமாரசிறி போன்ற சீன ஆதரவாளர்களிடமிருந்து இரகசியத் தகவல்களைப் பெற்ற சென் யீ இலங்கையைச் சீனாவின் பொம்மையாக்கிக் கொள்வதற்காகச் சாத்தியமான அளவு அரிசியும் துணியும் இலங்கைக்கு அனுப்பவேண்டுமென்று கூறினாராம்.

சீனத் தலைவரின் விஜயத்துக்குப்பின் மேற்கண்ட வதந்திகள் அடிபடுகின்றன. எனவே இலங்கைக்கும் சீனாவுக்குமிடையே இரகசிய ஒப்பந்தமொன்று கையெழுத்திடப்பட்டிருந்தால் அந்த ஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கம் உடனடியாக வெளியிடவேண்டும்."

## சிங்கள இதழ்களில் . . .

### வருந்துகிறோம்

'சுதந்திரன்' 8-3-64ம் திகதி இதழ் வாசகர்களின் பார்வைக்கு உரிய காலத்தில் கிடைக்காமைக்கு வருந்துகிறோம். தவிர்க்க முடியாத காரணத்தினால் ஏற்பட்ட நிலைமையே இத் தாமதத்துக்குக் காரணம்.

### எழுச்சி

மக்கள் ஒன்று என்ற எண்ணம் வந்தால் தான் ஓர் எழுச்சி ஏற்படும். அந்த எழுச்சியின் முன் அரண்கள் தவிடு பொடி; கோட்டைகள் தூள்! தளங்கள் பாழ்! அத்தகைய எழுச்சி தமிழினத்திற்கு வேண்டும்.

—அறிஞர் அண்ணா

## சீனாவை எதிர்த்து வாலிபர் தீக்குளிப்பு

சீனாவும், பாகிஸ்தானும் இந்தியாவுக்கு இழைக்கும் அட்டூழியங்களை எதிர்த்து குஜராத் ராஜ்ஜியத்திலுள்ள பாட்னா நகரத்தைச் சேர்ந்த ஒரு வாலிபர் தீக் குளித்து உயிர்த் தியாகம் செய்துள்ளார்.

உடல் பூராவும் பெட்ரோல் ஊற்றி தீ வைத்துக் கொண்டு இறந்த இவர், தன் குல தெய்வத்திற்கு ஒரு கடிதம் எழுதி வைத்திருக்கிறார்.

'சீனாவும் பாகிஸ்தானும் செய்யும் அட்டூழியங்கள் தாங்க முடியவில்லை. அவர்களைப் பழிக்குப் பழிவாங்க, புதுப் பலத்துடன் மறுபிறவி எடுப்பதற்காகத் தற்கொலை செய்து கொள்கிறேன்' என்று அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளாராம்.

## சிங்களம் மட்டும் சட்டத்தினால்

# வேலை இழந்தோர் கழகம்

## பாதிக்கப்பட்டோர் அனைவருக்கும் செயலாளர் அழைப்பு

"அரசாங்கத்தின் ஓர வஞ்சகத் திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். தனிச் சிங்களச் சட்டத்திற்குப் பலியானதுதான் எங்கள் வாழ்வு. நியாயம் வழங்கும் கொள்கை, பொறுப்பு வாய்ந்த தன்மை ஆதியன இன்றைய எம் அரசாங்கத்துக்கு இருந்திருக்குமானால் எம் வாழ்வு இவ்விதம் பாதிக்கப்பட்டிருக்க மாட்டாது. திறனும் துடிப்பும் ஆற்றலும் மிக்க எம் இளம் பருவத்தின் உழைப்பை அர்ப்பணித்ததற்குப் பரிசாக, நடுவயதிலே நட்டாற்றில் விடப்பட்டிருக்கவும் மாட்டோம்.

"ஆனால் நட்டாற்றிலே நீந்திக் கொண்டிருப்பவனுக்குத்தான் தன்னையறியாத துணிவும் வலிவும் எங்கிருந்தோ வந்து சேருகின்றன. உள்ளமும் உடலின் ஒவ்வொரு அணுவும் அங்கு உரம் கொண்டதாய், உறுதி கொண்டதாய் மாறுகின்றன. அலைபுரள் ஆற்றினை எதிர்த்துப் போராடுகிறான் அவன். வெற்றிகொள் வீரனாயும் மாறுகிறான்.

"இவ்விதம் நாமே ஆற்றினை நாடவேண்டும் என்பதுமல்ல. சில வேளைகளிலே வீடுகளும் வெள்ளப் பெருக்கினால் அலைதரு மோதலுக்கு உள்ளாவதுண்டல்லவா? அத்தகையதோர் நிலைமைதான் எம் தமிழ் இனத்தைத நாடி வந்து கொண்டிருக்கின்றது. இதனை நாம் அனைவரும் உணர்வது நலம். எம் இனத்தின் வாழ்வும் வருங்காலமும் இதிற்றான் தங்கியுள்ளது."

இவ்வாறு 'சிங்களம் மட்டும் சட்டத்தால் வேலை

(13-ம் பக்கம் பார்க்க)



எஸ் - லொன்

இன்றைய அதிசயமான பைப்

இதுவே ஒரு உண்மையான பல்-பயன் தரும் பைப்.... திண்மையானது கனக்குறைவானது, மலிவானது, கையாள்வது சுலபம், உக்காது கறையான் அண்டாது அரிப்பேற்படாது, கிருமி, கறள், அழுக்குப்படல எதிர்ப்புடையது. எஸ்-லொன் மின்சார கொண்டுயிட் வேலை உட்பட பெரும்பாலான வீட்டு, கைத்தொழில், விவசாய உபயோகத்திற்கு சிறந்த ஒப்பற்ற பைப்.

பைப் வேலை, உங்களுக்கு உண்டானால் அதற்கு உகந்த பைப் எஸ்லொன்தான் ஆகவே இன்றே எங்குமுள்ள சிறந்த ஸ்டோர்களில் அதைக் கேட்டு வாங்க நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்
மகாராஜா கட்டிடம்.
பேங்ஷால் வீதி, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியமைப்புக் கண்டு உழைக்க தமிழ் ஊழியர் முன் வர வேண்டும்

## கூட்டரவுத் தமிழ் ஊழியர்களுக்கு புதிய தொழிற் சங்கம்

## தொழிற் சங்கத் தலைவர்கள் பேச்சு

கூட்டரவு ஊழியர்களைச் சிங்களம் கற்குமாறு கட்டாயப்படுத்துவது, அவர்களது சேவை ஒப்பந்தத்துக்கு முற்றிலும் மாறான நிபந்தனையாகும். இதையிட்டு அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க முடிவு செய்துள்ளது. கூட்டரவுகளில் வேலைபார்க்கும் சகல தமிழ் பேசும் தொழிலாளர்களையும் ஒரு தொழிற்சங்க அமைப்புக்குள் கொண்டு வருவதற்கு நமது சங்கம் முயற்சி எடுத்து வருகிறது. வாழைச்சேனை, பரந்தன், காங்கேசன்துறை ஆகிய இடங்களில் உள்ள கூட்டரவுத் தமிழ்த் தொழிலாளர்கள் விரைவில் ஒன்று சேருவதற்குரிய சூழ்நிலை உருவாகிவிட்டது.

இவ்வாறு கடந்த வாரம் நடைபெற்ற கூட்டரவுத் தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அரசாங்க எழுது வினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோடீசுவரன் குறிப்பிட்டார்.



திரு. அ. அமிர்தலிங்கம்

சங்கத் தலைவர் திரு. வே. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதியும், இ. தொ. கதகத் துணைத் தலைவருமாகிய திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

'இன்றைய நிலையில், தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் தமிழ் பேசும் தொழிலாளர்களை எதிர்நோக்கியிருக்கிற பிரச்சினை வேறு-சிங்களத் தொழிலாளர்களை எதிர்நோக்கும் பிரச்சினை வேறு. தமிழ் பேசும் தொழிலாளர்களுக்குக் கட்டாயச் சிங்களத் தேர்ச்சி, ஊதிய உயர்வு மறுப்பு, வேலை நீக்கம் போன்ற பிரச்சினைகள் ஒன்றுக்குப் பின் ஒன்ருக வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் தமிழ் பேசும் தொழிலாளர் தங்களுக்கெனத் தனித் தொழிற்சங்கங்கள் நிறுவி, அவை மூலம் தங்கள் பிரச்சினைகளுக்குப் போராடுவதைத் தவிர வேறு வழி அவர்களுக்கில்லை.

### பகற்கனவு

தமிழ் பேசும் தொழிலாளர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பெரும்பான்மை இனத் தொழிலாளர்களோ அல்லது அவர்களை வழிநடாத்தும் முற்போக்குத் தலைவர்களோ முன் வருவார்கள் என்பது பகற்கனவு. ஏனென்ருல் தனிச் சிங்களச் சட்டத்தை எல்லாச் சிங்களக் கட்சிகளுமே ஒப்புக்கொண்டு



திரு. செ. கோடீசுவரன்

விட்டன. இன்னுமொரு வேதனைக்குரிய நிகழ்ச்சியென்னவென்ருல், தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கு ஏற்படுகிற ஒரு சில பிரச்சினைகள் பெரும்பான்மைத் தொழிலாளர்களாலேயே ஏற்படுத்தப்படுகின்றன. சிங்களத்தில் தவிர ஏனைய எந்த மொழியிலும் கடமையாற்றக் கூடாதென அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் போன்றவை தங்களது உறுப்பினர்களுக்குக் கட்டளை இடுவதனால் தமிழ் பேசும் தொழிலாளர்கள் தங்கள் மாதப் படியைக் கூட உரிய காலத்தில் எடுக்க முடியாது திண்டாடுகின்றனர்.

இவற்றையெல்லாம்உணர்ந்து தமிழ் பேசும் தொழிலாளர்கள் தங்களுக்கு மொழி வழி தனியமைப்புக் கண்டு உழைக்கமுன்வர வேண்டும்.'

இலங்கைத் தொழிலாளர் கழகப் பொருளாளர் திரு. க. சிவானந்தசுந்தரம் அவர்கள் பேசும்பொழுது 'தொழிலாளர் வர்க்க ஒற்றுமையில்



திரு. க. சிவானந்தசுந்தரம்

நம்பிக்கை வைத்துப் பணியாற்றியகாலம் போய்விட்டதென்றும், வர்க்க ஒற்றுமை ஏட்டில் இருக்கலாம், ஆனல் அது நாட்டில் இல்லையென்பதை அனுபவபூர்வமாகக் கண்டதன் பலனகவே அ. எ. வினைஞர் சங்கம் தோன்றியதென்றும். ஏனைய தமிழ் பேசும் தொழிலாளர்களும் அப்படியான அனுபவம் வரும்வரை காத்திராமல், மொழி வழி பிரிந்து தனித் தொழிற்சங்கங்கள் அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

### புதிய தொடர்

இலங்கைத் தமிழ் முனனணி எழுத்தாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் புதிய தொடர் ஒன்று சுதந்திரன் இதழில் விரைவில் ஆரம்பமாகவிருக்கிறது.


**வேல் படை மருந்து**

வண்டுகடி, தேமல், ஊறல், படர்தாமரை. தழுவணி, பித்த வெடிப்பு, நாட்பட்ட கக்கூஸ்பத்து, தண்ணீர்கடி, கரப்பான் முதலிய சர்ம வியாதிகளைக் குணப்படுத்தும் ஓர் சிறந்த களிம்பு.

விலை ரூ. 1-50 தபால் செலவு வேறு

தயாரிப்பவர்கள்:

S. P. S. ஜெயம் அன் கோ.,

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,

34, செட்டியார் தெரு, கொழும்பு-11.


## திருந்தி வாழ்வோம்

—ஈழமேகம் பக்கீர் தம்பி—

பொல்லாத மலைக்காட்டைத் திருத்தி வெட்டிப்
பொன் விளையும் பூமியாய் ஆக்கி வைத்த
நல்லவர்காள் ஏனுங்கள் பிள்ளைச்செல்வம்
நற்கல்வி பெற்றுய்யச் செய்தாலென்ன
வல்லவராய் இந்நாட்டில் வாழ்ந்தாலென்ன
வாய்மூடி ஏன் மௌனம் சாதிக்கின்றீர்
தள்ளிவிடு தோழா உன் தாழ்மைப் போக்கை
தகர்த்தெறியும் அறிவான கல்வியூட்டு.

அல்லென்றும் பகலென்றும் பார்த்திடாது
அயராது, உழைத்துழைத்து வெயர்வை நீரை
வல்லகடல் போலோட்டும் மலையகத்து
மாவீரப் பிரசைகளே சொல்லக் கேளீர்!
இல்லாளும் வாழாமல் ஈன் றெடுத்த
இனியதவப் பாலகரும் வாழா தேங்கக்
கல்லாக ஏன் சமைந்தீர் மதுவரக்கன்
காட்டி வைத்த படுகுழியில் விழுந்திட்டீரோ?

கிள்ளிவிட்டு வருகின்றீர் தளிரைக் கொய்து
கேட்கின்றீர் கூலியினைத் துரைமார் பார்த்துத்
தள்ளுவதைச் சம்பளமாய்ப் பெற்றிட்டாலும்
தமிழா உன்கணக் கொன்றும் அறிய மாட்டாய்
எள்ளி நகை ஆடுதற்கேன் இலக்காயானுய்,
எழுந்திரடா உன்னுரிமை பெறுதற்கின்றே
பிள்ளைகளே உன்செல்வம் அவர்கள் செல்வம்
பெறுவதற்கு பள்ளிக்கு அனுப்பு இன்றே!

செங்குருதி வெயர் வையாய் மாறச்செய்தாய்
தேயிலை உன் செந்நீராய் ஆக்கி வைத்தாய்
பொங்குகடல் சூழிலங்கைத் தீவு மாதின்
புன்னகையில் நீமயங்கி மோகமுற்ருய்
அங்கமெல்லாம் அவளுக்குப் பச்சையாடை
அணிவித்தாய் முத்துவட ஆரம் பூண்டாய்
எங்கெயடா உன்னுரிமைக் கேடயந்தான்
ஏனுனக்கு அவளின்னும் அளிக்கவில்லை?

அட்டைகளும் உன்னுடலைத் தின்டிடாது
அரியமலைக் கந்த ளுந்தன் பஞ்சுமெத்தை
இட்டமலை உச்சியிலே காதற் கீதம்,
ஏழ்மையிலே பிறந்தது உன் சோகக் கீதம்,
கட்ட ஒரு முழத்துண்டோ கவளச்சோருே
கழிசரக்குத் தேயிலையே உனது சோகப்
பட்டியலை ஊரறியும் ஆட்சி மன்றம்
பகட்டினிலே வாழுதடா உனைமறந்து.

நட்ட மெல்லாம் உன்தலைக்கே, லாபமங்கே
நாய் படுக்கும் மெத்தையிலே நீயோ கீழே,
அட்டதிக்கும் உன்னெலும்புக் கூட்டால் வாழ
ஐயோ! நீ, மாடானுய் அறிவு கெட்டாய்
பட்ட மரம் போலானுய் உழைத்தும் வாழப்
பழகாமல் குடிப்பழக்கம் கற்று விட்டாய்
கெட்ட தெல்லாம் போதுமடா அன்புந்தோழா
கீழ்மையிதை விட்டு விடு திருந்தி வாழ்வோம்.

தாளாலைக் கூட்டரவில்

## புதிய தொழிற் சங்கம்

கிழக்கிழங்கைத் தாளாலைக் கூட்டரவைச் சேர்ந்த தமிழ் ஊழியர்கள் தமக்கெனத்தனியானதோர் தொழிற்சங்கம் அமைத்துள்ளார்கள்.

கிழக்கிலங்கை தாளாலைக் கூட்டரவில் தனிச்சிங்கள அமுலை எதிர்த்து, தமிழில் செயலாற்றும் வண்ணம் ஊழியர்களை ஊக்குவிப்பது இச்சங்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்ருகும். மேலும் தமிழ்பேசும் ஊழியர்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கமாக அகில இலங்கை கூட்டுத்தாபன ஊழியர்சங்கத்தின் கிளைச் சங்கமாக இது இயங்கும் என்று தெரிகிறது.

பின்வருவோர் இச் சங்கத்தின் பதவியாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்: திரு. ஆர். யோகநாதன், செயலாளர்: திரு. எஸ். பி. செல்வரத்தினம், பொருளாளர்: திரு. வி. மோகனசுந்தரம், ஆட்சிக் குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் வி. பொன்னம்பலம், ஆர். அருளானந்தம், சவுந்தரலிங்கம், பி. கனகலிங்கம், ரி. கதிர்காமம், ஏ. மகாதேவன்,

## பிரிவுபசாரம்

டிக்கோயாவைச் சேர்ந்த டங்கெல்ட் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கடந்த பத்துவருடங்களுக்கு மேலாக ஆங்கில உதவி ஆசிரியராகக் கடமையாற்றி நாரயாந்தனை ஞேமன் கத்தோலிக்க பாடசாலைக்கு இடம் மாறிச்செல்லும் திரு. கா. துரைராசசிங்கம் அவர்களுக்கு மேற்படி பாடசாலை செந்தமிழ் சிறுவர் மன்றத்தினரால் ஒரு பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

ஆசிரியரின் பண்பு-சாதனை சேவைகளைப் பாராட்டி ஆசிரியர்களும் மாணவர்களும் பேசினர்.

## விருந்தினர் வருமானம் 400 கோடி

சென்ற ஆண்டில் பிரிட்டனுக்கு வந்த வெளிநாட்டவர்களின் தொகை 21 இலட்சத்து 75 ஆயிரமாகும். இது 1962ல் வந்தவர்களின் எண்ணிக்கையை விட 11 சத விகிதம் அதிக அதிகமானதாகும் என்று தெரிகிறது.

பிரிட்டனுக்கு வந்தவர்கள் சென்ற ஆண்டில் அங்கு செலவிட்ட தொகை ரூ 400 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் கோட்டைகளைக் கழகப் பீரங்கிகள் தகர்த்து விட்டன

**இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் ஆதரவில் 24 மணி நேரத்துள் அட்டன் பகுதியில் மூன்று பிரமாண்டமான பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. இக் கூட்டங்களில் கலந்து கொண்ட இக் கட்டுரையாளர் அங்கு தான் கண்ட காட்சிகளையும் மலையகத்தில் இ. தொ. கழகத்துக்குத் திரளும் ஆதரவையும் சுவைபடக் கூறியுள்ளார். காங்கிரஸ் கோட்டை சரிந்து விழுவதையும் இதர தொழிற் சங்கங்களின் போக்கையும் நன்கு தெளிவுபடுத்தி, 35 இலட்சம் தமிழ் பேசும் மக்கள் ஒரே கொடியின் கீழ் திரண்டு வருவதையும் சுட்டிக் காட்டுகிறார்.**

'உழைத்து உழைத்து உருக்குலைந்த மாடாக உழைத்து ஓடாகிப் போன தொழிலாளிகள்' இந்த நாட்டில் இருக்கிறார்களென்றால் அது மலையகத்துத் தொழிலாளர்களை விட வேறு தொழிலாளர்களாக இருக்க முடியாது.

அவர்கள் உயிர் வாழுகிற ஒரு உரிமையை விட மற்ற ஏனைய உரிமைகள் அத்தனையையும் குடியுரிமை, வாக்குரிமை, கல்வியுரிமை, தொழிலுரிமை-இழந்து, ஆருமற்ற அனாதைகளாக, வாயில்லாப் பூச்சிகளாக வாடுகிறார்கள்.

## கழகம் விடிவெள்ளி

மலையகத் தமிழ் தொழிலாளர்களின் இருண்ட வாழ்வில் விடி வெள்ளியென இன்று இலங்கைத் தொழிலாளர் கழகம் முளைத்திருக்கிறது.

இதை அண்மையில் மலையகத் தமிழ் தொழிலாளர்களின் ஒரு பகுதியினரைப் பார்த்து, நெருங்கி அளவளாவிய பொழுது தெரியக் கூடியதாக இருந்தது.

இலங்கைத் தொழிலாளர் கழக ஆதரவில், அதன் பிரசாரக் கூட்டங்கள் இருபத்திநான்கு மணி நேரத்துக்குள் அட்டன் பகுதியைச் சேர்ந்த மூன்று இடங்களில் வெற்றிகரமாக நடைபெற்றன.

முரசுகளிலே பல தினுசு-எம் இதயத்தில் ஒலிப்பது
தமிழரசு!

காற்றில் மூவர்ணக்கொடி அசைந்தாடுகிறது. கம்பத்தின் கீழ் நின்று உணர்ச்சி ஒவ்வொரு சொல்லிலும் கொப்பளிக்க ஒரு தொழிலாளி பாடுகிறான், ஓசையை ஒலிபெருக்கி சுமந்து சென்று பக்கத்துக் குன்றுகளில் மோதி எதிரொலிக்கிறது. அதைப் பல நூறு தமிழ்த் தொழிலாளர்கள் ஆர்வத்தோடு செவிமடுக்கிறார்கள்.

இதோ அடுத்த இரண்டு அடிகளும் அந்தத் தொழிலாளித் தோழரின் இதயத்தில ஊற்றெடுத்துப் பாய்கிறது.

ஓங்கிவளர்ந்தது காங்கிரசு-
இன்று

ஏங்கித் தவிப்பது காங்கிரசு இந்தக் காட்சி நடந்தேறும் இடம் கொட்டக்கலை. இ. தொ. கழகத்தின் ஆதரவில் இந்தப் பகுதியில் நடந்த முதல் கொள்கை பரப்புக் கூட்டம் இதுதான்.

இங்கேதான் கழக உறுப்பினரும், மலைநாட்டுத் தமிழ் மக்களை வாட்டும் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி அடிக்கடி பத்திரிகையில் எழுதுப வருமான இளம் நண்பர் தர்மலிங்கம் இருக்கிறார். அவர் மட்டுமல்ல 'உதய சூரியன்' பத்திரிகை ஆசிரியர் இரா. நாகலிங்கம் அவர்களின் இடமும் இதே ஊர்தான்.

கொட்டகலையில் கலந்து கொண்ட தொழிலாளர்களில் பெரும்பாலோர் மட்டும் வாலிபர்களாக இருந்தார்கள். அடுத்த நாள் மஸ்கெலியோப் பகுதியைச் சார்ந்த சாமி மலையில் நடந்த கழகக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் நூற்றுக்கு நூறு விழுக்காடு வாலிபர்களாகவே இருந்தார்கள். இதைத் 'தொண்டன்' பத்திரிகை ஆசிரியரும் பழைய காங்கிரசுவாதியுமான திரு. நாதன் பேசும் பொழுது 'இங்கே நான் காண்கிற அத்தனை பேரும் வாலிபர்களாக இருப்பதையும் நான் ஒருவன் மட்டும்தான் நரைத்த தலையோடு காட்சியளிப்பதையும் பார்க்கும் பொழுது மலையகத்துத் தமிழ் வாலிபர்கள் விழித்து விட்டார்கள்' என்று குறிப்பிட்டார்.

**வாலிபர்கள் காங்கிரசைக் கை கழுவி கழகப் பக்கம் வருகிறார்கள் என்பது வெறும் சொல்வீச்சல்ல. மலையகம் முழுவதும் கண்ணாரக் காணக் கூடிய உண்மை.**

## திடுக்கிடும் சரிவு கண்டு 'ஆயுட்காலத்' தலைவர்கள் அதிர்ச்சி

சாமி மலையில் கறுப்பு—சிவப்பு உடையணிந்த கழகத் தொண்டர்கள் மிக்க உணர்ச்சியோடும் உற்சாகத்தோடும் கூட்டத் துவக்கத்திலும் முடிவிலும் சில மந்திரங்களை (சுலோகங்களை) ஒலித்தார்கள்.

நாங்கள் கேட்டது? ஜனநாயக உரிமைகள்!

நாங்கள்? வகுப்புவாதிகள் அல்ல!

எங்கள் மொழி? தமிழ் மொழி!

எங்கள் இனம்? தமிழ் இனம்!

எங்கள் தந்தை? செல்வநாயகம்!

எங்களுக்கு வேண்டும்? குடியுரிமை!

• சாமி மலைக் கூட்டத்தில் உணர்ச்சியின் உருவமாக

## தாமரைப் பூவன்

விளங்கியவர் இலட்சுமித் தோட்டக் குழுத் தலைவர் திரு. நடராஜன்.

கழகத்தின் தூண்களாகவும், கழகத்தின் காவலர்களாகவும், கழகத்தின் கண்ணின் மணிகளாகவும் நடராஜனைப் போன்ற கணக்கற்ற இளைஞர்கள், இளமைத் துடிப்புள்ள வாலிபர்கள் மாறி வருவது கழகத்தின் வருங்காலம் பொலிவுடன் விளங்கப் போவது மட்டுமல்ல, கழகம் ஒன்றே பத்து லட்சம் தோட்டத் தொழிலாளர்களது பிரதிநிதித்துவம் பொருந்திய இயக்கமாக மாறப் போவதற்கும் அறிகுறியென்பது கொஞ்சமும் மிகையல்ல.

## பொகவந்தலாவை

சாமி மலைக் கூட்டத்தை முடித்துக் கொண்டு போகவந்தலாவைக்குப் புறப்பட்டோம். மஸ்கெலியாவில் மதியவுணவை வைத்துக் கொண்டோம். மஸ்கெலியாவிலும் கழக அலுவலகம் இருக்கிறது. அதன் பொறுப்பாளர் தோழர் செல்லத்துரை, இளைஞர். இளைஞர் என்றால் இன்னும் பால் முகம்கூட மாறவில்லை. மெல்லிய அரும்பு மீசை இப்போதுதான் முளைக்கிறது. மூர்த்தி சிறிதேயொழிய, கீர்த்தி பெரிது. சாமி மலைக் கூட்டத்தில் காலையில் பேசும் பொழுது மலைநாட்டுத் தொழிலாளியின் மாதச் சந்தாப் பணத்தை ஏப்பமிட்டு, அவனை அட்டை போல உறிஞ்சியெடுக்கிற தொழிற் சங்கங்களைச் சாடு சாடென்று சாடினார். 'தொண்டமானையல்ல, தொண்டமானின் பிற்போக்குத்தனத்தை எதிர்க்குமுகமாக, தொண்டமானைப்போல கொடும்பாவிகட்டி அதைத் தோட்டம் தோட்டமாக இழுத்துப் போய் எரிக்க வேண்டும்' என்று கர்ச்சனை புரிந்த குட்டிச் சிங்கமும் இவரே தான்.

மஸ்கெலியாவில் கழகத்தை வழி நடாத்திச் செல்லும் தலைவர் திரு. சாமிநாதன் முதியவர். பழைய காங்கிரசுவாதி. ஆனால் இப்போது பேச்சும் மூச்சும் கழகம் தான்.

வண்டி குன்றுகளை வளைய [illegible] டிருந்தது. ஆனால் எமது கார்ச் சாரதியிருக்கிறாரே திரு. சின்னையா— அவர் இந்தத்தொழிலில் பழுத்த அனுபவசாலி.

### கழகத் தொண்டன் கார்ச் சாரதி

'20 வருடங்கள் தோட்டத்தில் லொறிச் சாரதியாக இருந்திருக்கிறேன். ஒரு எக்சிடன்ட் கூடப் பட்டதில்லை, வேணுமென்றால் இந்தாங்க என்ரை லைசென்சு!' என்று 19ம் நூற்றாண்டு கால லைசென்ஸ் பத்திரத்தைக் கையிலே திணித்தார்.

வேடிக்கை யென்னவென்றால் கார் ஓட்டும் பொழுது தான் திரு. சின்னையா கார்ச் சாரதி. மற்றப்படி கழகப் பணிதான். சரியான தீவிரவாதி. தனது ஒரே மகளைக் கழகத்தின் மகளிர் பகுதி அமைப்பைக் கவனிக்க கழகத்திடம் ஒப்படைத்துள்ளார்.

மலையகத்தை எந்த இடத்திலிருந்து, எந்தக் கோணத்தில் பார்த்தாலும் கண்ணுக்கும் — கருத்துக்கும் அது வொரு அழகிய — இன்பமயமான காட்சியாகவே இருக்கிறது. தமிழ்த் தொழிலாளர்கள் தங்கள் உழைப்பைக் கொட்டி, வியர்வையும்—இரத்தமும் சிந்தி மலையகத்தையே ஒரு பெரிய தோட்டமாக அமைத்து இருக்கிறார்கள்.

நாட்டின் தேசிய வருமானத்தில் 60 விழுக்காடு அவர்களது உழைப்பில் பிறக்கிறது.

**1963ம் ஆண்டு மட்டும் உற்பத்தியான தேயிலையின் எடை இரு. 48.46 கோடி! இது தேயிலை உற்பத்தியில் ஒரு புதிய சாதனை. 1962ல் உற்பத்தியான தேயிலையின் எடை இரு. 46.7 கோடி!**

உற்பத்தி பெருகியது. அவனது வாழ்வு மலர்ந்ததா? வாழ்க்கைத்தரம் உயர்ந்ததா?

ஏழ்மையில் உழல்கிறார்கள். மாட்டுத் தொழுவத்திலும் கேவலமான, 10 அடி நீளம் 8 அடி அகலமான அறைகளில்—வீடுகள் அல்ல-இரண்டு மூன்று குடும்பங்கள் அடைபட்டுக் கிடக்கின்றன.

ரூபா 17-50 பஞ்சப்படி கூட தோட்டத் தொழிலாளர்கள், எண்ணிக்கையில் இலட்சமாக இருந்தும் இது வரை பெறவில்லை.

### ஆற்றிய பணியென்ன?

கணக்காக மாதா மாதம் 50 சதம் சந்தாப் பணமாக வசூல் செய்யும் திரு. தொண்டமானை ஆயுள் தலைவராகக்கொண்ட காங்கிரஸ் சரி, ஜனுப் அசீஸை ஆயுள் தலைவராகக் கொண்ட காங்கிரஸ் சரி, பாட்டாளிகளின் கூட்டாளிகள் நாங்கள்தான் என்று ஒரு புறம் பறையறைத்துக்கொண்டு மறு புறம் எத்தனை ஆயிரம் தொழிலாளர்களை எவ்வளவு விரைவில் கப்பலில் ஏற்றி கோடிக்கரையில் இறக்கலாம் என்று திட்டம்போடும் சமசமாஜிஸ்டு-கம்யூனிஸ்டுகள் சரி, இவ்வளவு காலமும் இத்தோட்டத்தொழிலாளர்கள் வாழ்வு உயர செய்த தொண்டென்ன? ஆற்றிய பணியென்ன?

இப்படி நாம் கேட்கவில்லை. தோட்டத் தொழிலாளர்கள்—இளம் வாலிபர்கள் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்.

**சந்தேகமிருந்தால் தொண்டமான், அசீஸ் போன்றோர் கழகக் கூட்டங்களுக்கு மாறு வேடத்தில் வந்து, ஓரத்தில் இருந்து தோட்டத் தொழிலாளர்களது பேச்சை செவிமடுக்க வேண்டும். அப்போது புரியும் உண்மை.**

பொகவந்தலாவையை நாம் அடைந்த பொழுது நேரம் 4 மணி, கூட்டம் ஆரம்பமாகி திரு. கலியபெருமாள் பேசிக்கொண்டிருந்தார். ஆயிரக் கணக்கில் அங்கு திரண்டிருந்த மக்கள் வெள்ளம், பொகவந்தலாவைத் தமிழர்கள் உண்மைத் தமிழர்கள்தான் என்பதை அனுபவ பூர்வமாக உணர வைத்தது.

(13-ம் பக்கம் பார்க்க)

### பர்மாவிலிருந்து

# இந்தியர்கள் வெளியேறுகின்றனர்

## 'பர்மியர் மட்டும்' சட்டத்தினுல் ஏற்பட்டுள்ள நெருக்கடி

**பர்மிய அரசாங்கத்தின் பர்மியமயக் கொள்கையினுல், கடந்த நான்கு மாதங்களில் சுமார் 10 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரம் பேர் வரை இந்தியர்கள் பர்மாவிலிருந்து வெளியேறி விட்டனர் என்றும், இவ்வாறு மாதம் 3000 பேர் வீதம் வெளியேறி வருகின்றனர் என்றும் இரங்கூன் செய்தியொன்று கூறுகிறது.**

பர்மியமயக் கொள்கையின் முக்கிய நோக்கம், பர்மாவில் வாழும் ஏழு இலட்சம் இந்தியர்களை வெளியேற்றுவதாகும் என்று நம்பப்படுகிறது.

'பர்மியர்மட்டும்' என்ற சட்டவிதியினுல் இந்தியர்கள்தினே தினேபலதொழில்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்கள். இந்திய டாக்டர்கள் இலவச மருத்துவ மனைகளில் மட்டுமே தொழில் நடத்தும் நிலை உருவாகியுள்ளது. ஓராண்டுக்கு முன்னர் ஓரிருவராக இந்தியர் வெளியேறிய நிலைமை மாறி, இன்று பெருந்தொகையினராக வெளியேறும் நிலைமை ஏற்பட்டிருக்கிறதாம்.




# ரிஷி
# அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 றுத்தல் ரூபா 35/00
விலை ½ றுத்தல் ரூபா 22/50

(தபாற் செலவு 95 சதம்)

ஆயுர்வேத டாக்டர்:
T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்
**ஞானசுந்தர வைத்தியசாலை,**
187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1964 மார்ச் மாதம் 15-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12
தொலை பேசி எண் : 3411 த. பெ 1183


## தாமதம் என்றால் "இல்லை" என்பதா?

"மொழிப் பிரச்சினையைத் தீர்க்க பேச்சுவார்த்தை நடத்தப்போவதாகக் கூறினார்களே! இதுவரை அப்படி ஒன்றும் காணவில்லையே!" என்று மக்கள் கேட்கத் தொடங்கியுள்ளனர்.

நேரடி நடவடிக்கையை நிறுத்திவைத்து ஒருமாதமாகிவிட்டது. தமிழரசுக் கோரிக்கைபற்றி பிரதமர் எதிர்க் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாகச் செய்திகள் கூறின. 'இதோ பேச்சு! அதோ பேச்சு' என்றெல்லாம் பத்திரிகைகள் காற்றாடிகளைப் பறக்கவிட்டன. ஆனால் இன்றுவரை எந்தப் பேச்சுவார்த்தையும் தொடங்கக்காணோம்.

சீனப் பிரதமரின் விஜயத்துக்குப் பின் மொழிப்பேச்சு ஆரம்பமாகும் என்று கூறப்பட்டது. அதன் பின் வேலை நிறுத்த நெருக்கடி தோன்றியது. அதுவும் தீர்ந்து இன்று அமைதி நிலவுகிறது. இன்னும் இந்தப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்காததேன்?

அரசியற் சூழ்நிலையோ பேச்சுவார்த்தைக்குப் பெரிதும் சாதகமாயிருக்கிறது. தமிழ்பேசும் மக்கள் போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திவிட்டு, சமரசப் பேச்சுவார்த்தைகளை அனுமதித்துள்ளனர்.

சிங்கள மக்களும் மொழிப்பிரச்சினை சமரசமாகத் தீர்க்கப்படுவதையே ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். பேச்சு வார்த்தைக்கு அவர்கள் இதுவரை எத்தகைய எதிர்ப்பும் காட்டவில்லை. அவர்களின் மனப்போக்கு பேச்சு வார்த்தைக்குச் சாதகமாகவே அமைந்துள்ளது.

எதிர்க் கட்சிகளும் பிரச்சினை சமரசமாகத் தீர்க்கப் படுவதையே வரவேற்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களோ, இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்களோ பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டை போடுவார்கள் என்று தோன்றவில்லை. பிரச்சினையைத் தீர்க்க அவர்களின் பூரண ஒத்துழைப்பு கிடைக்குமென்றே எதிர்பார்க்கலாம்.

இத்தகைய சிறந்த சூழ்நிலையும் ஒத்துழைப்பும் கிடைத்திருந்தும் அரசாங்கம் மௌனம் சாதிப்பதேன்? இப் பொன்னான வாய்ப்பை பயன்படுத்தும் உத்தேசம் கிடையாதா? இல்லையேல், வகுப்புவாத சக்திகள் தலையிட்டு முட்டுக்கட்டை போடும் அபாயம் ஏற்பட்டுள்ளதா? ஏன் இந்த விரும்பத்தகாத மௌனமும் தாமதமும்?

இதுவும் ஆட்சியாளரின் ஓர் அரசியற் தந்திரமாக இருக்கலாமோ என்ற ஐயம் மக்களிடையே தோன்றியுள்ளது. சில நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காகச் சில பிரச்சினைகளின் தீர்வைத் தாமதப்படுத்துவது அரசியல் உபாயமாகக் கருதுவதுண்டு. அத்தகைய பிரச்சினைகளில் தாமதம் எதிர்பார்க்கும் பலனைக் கொண்டுவருவதுண்டு.

ஆனால் அந்தத் தந்திரம் மொழிப்பிரச்சினையில் பலிக்காது. இதில் தாமதம் நேர்மாறான பலனையே கொண்டுவரும். காரணம், மக்கள் விழிப்புடன் இருப்பது தான். தட்டிக்கழிப்பதற்கு இதில் இடமில்லை.

மொழிச் சிக்கல் மக்கள் உள்ளங்களில் கொந்தளிக்கும் பிரச்சினை. அதில் தேவையற்ற தாமதம் அரசாங்க நடவடிக்கையின்மீது தமிழ் பேசும் மக்களுக்கு அவநம்பிக்கையையே ஏற்படுத்தும். நேரடி நடவடிக்கையைத் தவிர்ப்பதற்காகவே இந்த உபாயத்தைக் கையாண்டனர் என்ற கருத்து ஏற்பட ஏதுவாகும். தாமதம் செய்தால் சூடு தணிந்துவிடும்—படிப்படியாகச் சிங்களத் திணிப்பை அமுல் நடத்திவிடலாம் என்ற எண்ணமிருந்தால், அதில் நிச்சயம் ஏமாந்துபோகிறவர்கள் ஆட்சியாளர்களே.

சோவியத் ரஷ்யாவில் நடைபெற்ற சமூகப் புரட்சியின் போது ஒவ்வொரு நிமிடத் தாமதமும் புரட்சியின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கக்கூடியதாக இருந்தது. அப் புரட்சிக்குத் தலைமைதாங்கிய லெனின் அன்று கூறினார்: 'எம்மைப் பொறுத்தவரையில் தாமதம் என்றால் சாவுதான்' என்று. ஒரு சில நிமிடத் தாமதத்தால் அரசியற் சம்பவங்கள் தலைகீழாக மாறிவிட்டதற்கு உலக வரலாற்றில் எத்தனையோ சான்றுகள் உண்டு.

எனவே முக்கிய தேசியப் பிரச்சினைகளில் தாமதம் விபரீதமான விளைவுகளைக் கொண்டுவரக் கூடும். மொழிப்பிரச்சினையில் பேச்சுவார்த்தைகளின் முடிவை மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் வேளையிலே அதனை எக்காரணம் பற்றியோ தாமதம் செய்தல் மக்களின் பொறுமையைச் சோதிப்பதாகும்.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் முன்வந்ததால்தான் தமிழ்பேசும் மக்கள் நேரடி நடவடிக்கையை நிறுத்திவைத்தனர். நிறுத்தி வைத்தபின்னர், பேச்சுவார்த்தைகளை தேவையற்ற முறையில் பின்போடுவதானல், அதற்கான தீர்வும் மக்கள் கையிலுள்ளது என்பதையும் ஆட்சியாளர் மறந்துவிடக்கூடாது.

வகுப்புவாதிகளின் நெருக்குதலினின்று ஆட்சியாளர் இன்னும் விடுபடவில்லை என்பது பகிரங்க இரகசியம். அரசாங்க அலுவலகங்களில் இன்று வகுப்புவாதிகளின் கைதான் ஓங்கி நிற்கிறது. இலாகா அதிபர்களையும் வகுப்புவாதச் சிப்பந்திகள் ஆட்டிவைக்கின்றனர். அமைச்சர்களோ இலாகாகளில் தங்களின் ஆதிக்கத்தைச் செலுத்தத் திராணியின்றி, திக்கித் திணறுகின்றனர். அந்த அளவுக்கு ஆட்சியாளர் வகுப்புவாதிகளின் கையில் சிக்கியுள்ளனர்.

வகுப்புவாதத்துக்குப் பணிந்து கொடுத்து எந்தத் தேசியப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது. பணிந்துகொடுத்தால் வகுப்புவாதம் வலுவடையுமேயன்றி பிரச்சினை தீராது.

மொழிச் சிக்கலுக்குச் சமரசத் தீர்வு காணவேண்டும் என்ற எண்ணமும், ஆர்வமும் ஆட்சியாளருக்கு உண்மையில் இருந்தால், உடனடியாகச் செயலில் இறங்கட்டும். இல்லையேல் அவர்களின் நேர்மையில் தமிழ்பேசும் மக்களுக்கு ஐயப்பாடு தோன்றும். "தாமதம் என்றால் இல்லை என்பதுதான் பொருள்" என்பதனை உணர்ந்து, பின்னர் அவர்கள் அதற்கேற்ப நடவடிக்கை எடுப்பார்கள்.

பேச்சுவார்த்தையைத் தாமதப்படுத்தும் ஒவ்வொரு [illegible] இன்னும் மேலும் சிக்கலாக்கும் என்பதை அரசாங்கம் உணர்தல் வேண்டும்.

## 'நாவலர் பாடசாலையை மூடும்படி நான் கூறவில்லை'

## சைவ பரிபாலன சபை செயலாளருக்கு நல்லூர் பிரதிநிதி கடிதம்

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை விவகாரம் பற்றி நல்லூர் பிரதிநிதி டாக்டர் இ. மு. வி. நாகநாதன், சைவபரிபாலன சபைச் செயலாளருக்கு நிலைமையை விளக்கிக் கடிதமொன்று அனுப்பியுள்ளார். வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையை மூடிவிடுமாறு தாம் கல்வி அதிகாரியிடம் ஒரு போதும் சிபார்சு செய்யவில்லை யென்றும் தமது நோக்கத்தைச் சபையினர் தவறாகப் புரிந்து கொண்டிருப்பதாகவும் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். தற்போது இவ் வித்தியாசாலை அமைந்திருக்கும் இடத்தை நாவலர் நிலைய தர்ம கர்த்தாக்களிடம் திருப்பிக் கொடுக்க வேண்டு மென்றும் இதனால் இந்து சமய மறுமலர்ச்சிக்கு உழைத்த பெரியாரின் ஆசைகளைத் தொடர்ந்து நிறைவேற்ற வழி அமையும் என்பதனையும் இந்து சமயதத்துவங்கள், தமிழ் கலாசாரம், இசை முதலியன வளர உதவு மெனவும் தான் சிபார்சு செய்திருந்ததாகவும் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

16-2-64-ம் திகதி நடைபெற்ற சபையின் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை சபைச் செயலாளர் திரு. நாகநாதனுக்கு தெரிவித்திருந்தார். டாக்டர் நாகநாதன் அவர்கள் இதற்கான தமது பதிலில் தெரிவித்திருப்பதாவது:

'நீங்கள் கல்வி மந்திரிக்கு அனுப்பி வைத்த, உங்கள் சபையின் 16-2-64 திகதியிட்ட தீர்மானம் அடங்கிய, கடிதத்தின் பிரதி எனக்குக் கிடைத்தது.

அத்தீர்மானத்தின் தொனியும் கருத்தும் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தையே அளித்தன. உண்மைகள் உங்களுக்குத் திரித்துக் கூறப்பட்டும், எனது நோக்கங்கள் தவறாகப் புனைந்து கூறப்பட்டும் இருக்கின்றன வென்றே என்னால் ஊகிக்க முடிகிறது. நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை மூடப்பட வேண்டுமென நான் எழுத்து மூலமாக மகஜர் அனுப்பியதோ அல்லது வேண்டுகோள் விடுத்ததோ கிடையாது.

கல்லூரிகள் புனரமைப்புக்குப் பொறுப்பாயுள்ள உதவி அதிபரிடமும், அதன் பின் வட மாகாண உதவிக் கல்வி அதிகாரியிடமும் நான் பேச்சு வார்த்தைகள் நடாத்திய சந்தர்ப்பங்களில், எனது தொகுதியில் கல்லூரிகள் புனரமைப்பு எவ்விதம் அமைய வேண்டுமென்பதற்கான எனது கருத்துக்களைப் பொதுவாகச் சுட்டிக் காட்டியுள்ளேன்.

தற்போதைய நிலைமையைச் சமாளிக்கவோ, இப்போது நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்கவோ ஒருவருடைய அரசியல் நண்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் சாதகமாக நடந்து, அதன் மூலம் தமது அரசியல் எதிர் காலத்தை வளம் படுத்தும் நோக்கத்தோடு பள்ளி செல்லும் மாணவர்களையும், இந் நாட்டின் வருங்காலக் கல்வியையும் பயன்படுத்திக்கொள்ளவோ செய்யப்படும் முயற்சியாகக், கல்லூரிகள் புனரமைப்பு இருக்கக் கூடாது என்பது எனது உறுதியான கொள்கை.

அத்துடன், எமது பிள்ளைகளின் கல்விக் கூடங்கள் நல்ல கட்டடங்கள், ஆய்வு கூடங்கள், மற்றும் பல வசதிகள் கொண்டனவாக அமைவதற்கான முதற்படியாகவும், 15 அல்லது 20 வருடங்களுக்கு அப்பால் ஏற்படும் கல்வித் தேவைகளுக்கேற்ற முறையிலும் கல்லூரிகள் புனரமைப்பு நடாத்தப்பட வேண்டுமென்பதும் எனது உறுதியான நம்பிக்கையாகும். யாழ்ப்பாணத்திலுள்ள பள்ளிக் கூடங்களில் பெரும்பாலானவை வெறும் மாட்டுத் தொழுவங்களென்பதையும், எமது சிறிய பள்ளிக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ள இடம் நெருக்கமானதும், விஸ்தரிப்புக்கு இடமேயில்லாததாகவும் அமைந்துள்ளதென்பதையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேற்கூறிய இரு கல்வி அதிகாரிகளிடமும், ஒட்டுமடத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு நல்ல பள்ளிக் கூடமில்லையென்றும், உயர்ந்த நிலத்தில் கட்டப்பட்ட ஒரு நல்ல பள்ளிக் கூடம் அந்த வட்டாரப் பிள்ளைகட்கு அவசியம் தேவையென்றும், அப்படி ஒரு பள்ளிக்கூடம் நிறுவப்படும் பட்சத்தில், முற்றிலும் வசதியற்ற கட்டடத்தில் அமைந்துள்ள நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையிலுள்ள ஆசிரியர்களையும், பிள்ளைகளையும் புதுப் பள்ளிக்கூடத்துக்கு வசதியெனில் மாற்றலாமென்றும் கூறியிருந்தேன். இப்பொழுது நாவலர் பள்ளிக் கூடம் இருக்கும்இடத்தை நாவலர் தாபன நிர்வாகிகளிடமே திருப்பி ஒப்படைக்க வேண்டுமென்றும், அந்த இந்துப் பெரியாரின் இதயத்து ஆசைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் இந்து சமய நிகழ்ச்சிகள், இந்து தத்துவம், தமிழ் கலாச்சாரம், இசை ஆகியவற்றுக்கென அக் கட்டடம் புனருத்தாரணம் செய்யப் படலாமென்றும் ஆலோசனை கூறியிருந்தேன்.

இலங்கை அரசாங்கத்தால் சொந்தம் கொண்டாடப்பட்டு, தமிழ்மொழி, கலாச்சாரம், வாழ்க்கை ஆகியவற்றுக்கு வெளிப்படையாகதுவேஷத்தன்மை காட்டும் சிங்கள, பௌத்த அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் நடாத்தப்படும், தரத்தில் குறைந்தகட்டடத்தில்இப்பள்ளிக்கூடம் நடாத்தப்படுவது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் பக்திக்குரிய பெயருக்கு மதிப்போ, கௌரவமோ அளிக்கக்கூடியதொன்றென என்னால் கணமேனும் நம்பமுடியாது.

நான் பிறப்பிலேயே ஓர் கிறிஸ்தவன் என்பது முற்றிலும் அவசியமில்லாத பிரச்சினை. கல்வி விஷயத்தில் அரசியல் வேறுபாட்டைப் புகுத்த இது ஒரு முயற்சியாகும்.

எல்லாவற்றிலும் மேலாக எமது மக்களின் எதிர்காலப் பெருமையில் நம்பிக்கையுள்ள பெருமை மிக்க தமிழன் நான் என நம்புகிறேன். ஆகவே, நமது பிள்ளைகளின் கல்விக்கும், கலாச்சாரத்துக்கும் நன்மைபயக்கக்கூடியதென நான் கருதுவதையே நான் செய்வேன்.

குறிப்பிட்ட இரு கல்வி அதிகாரிகளுக்கும், சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் வதியும் மக்கள், மற்றும் பள்ளிக்கூட நிர்வாகக் குழுக்கள், கர்த்தாக்கள், பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் ஆகிய பல தரப்பட்டோருடனும் இவ் விஷயத்தை யிட்டுக் கலந்தாலோசித்து, அவர்கள் வெளியிடும் கருத்துக்களின் அடிப்படையிலேயே, எனது தொகுதியிலுள்ள நிறுவனங்களை மாற்றியமைப்பதையிட்டு அரசாங்கத்திடம் தெரிவிப்பதாகக் கூறியிருந்தேன்.

துரதிர்ஷ்டவசமாக உதவிக் கல்வி அதிபரும் பள்ளிக்கூடத் தொழில் எஞ்ஜினியரும் தமது யாழ்ப்பாணத்து விஜயத்தைக் கடைசி நிமிடத்தில் ரத்துச் செய்ததால் நான் திட்டமிட்ட கூட்டங்கள் ஒத்திவைக்க வேண்டி ஏற்பட்டது.

உங்கள் சபை பிழையான தகவலின் மீதும், பொய் அடிப்படையிலும் அவசரமாகப் போர் தொடுக்க முயன்றதையிட்டு மனம் வருந்துகிறேன்.

வண்ணார்பண்ணையில் கல்லூரிப் புனரமைப்பு பற்றி உங்களுடன் கலந்தாலோசிக்க விரைவில் சந்தர்ப்பம் அளிப்பீர்களானால், நன்றியுடையவனாவேன்.

நீங்களே உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டது போல, இப்பள்ளிக்கூடத்தில் வண்ணார்பண்ணை மக்களில் 95 சதவிகிதத்தினருக்கு ஆழ்ந்த அக்கறை உண்டு என்ற முறையில், யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரெட் துரையப்பாவுக்கு இவ் விஷயத்தில் முதன்மையான உரித்து எதுவும் கிடையாது.

வண்ணார்பண்ணை, நான் பிரதிநிதித்துவம் செய்யும் நல்லூர்த் தொகுதியில் உள்ளது என்பதை நான் தாழ்மையுடன் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்கொழும்பு மீன்பிடிப் பயிற்சி நிலையத்தில் தமிழ் மாணவர் அவதி

## நடவடிக்கை எடுக்கும்படி கடற்ருெழில் அதிபருக்கு வேண்டுகோள்

ஜப்பானிய தொழில் நுட்ப உதவித் திட்டத்தின் கீழ் நீர் கொழும்பு மீன்பிடி பயிற்சி நிலையத்தில் தமிழ் மொழி மூலம் பயிற்சி பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ் மாணவர்கள் பல இன்னல்களுக்கு இலக்காகியுள்ளார்களெனத் தெரிகிறது. தமிழ் மொழி மூலம் பயிற்சி பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட இவர்களை ஆங்கிலத்தில் ஒப்பமிடும்படி பயிற்சி நிலைய முதல்வர் வற்புறுத்தி வருகிருர் என்றும், அவர்களுக்கு வழங்கப்படும் உதவிப் பணத்தை நிறுத்தப் போவதாகவும் அதிபர் கூறியுள்ளாராம். மாணவர்கள் தொடர்ந்து தமிழில் ஒப்பமிடுவதாயின் பயிற்சி முடிவில் வழங்கப்படும் சான்றிதழ்களில் 'தகுதியீனமாக எழுதுவேன்' என்றும் அதிபர் பயமுறுத்தியுள்ளாராம். இது பற்றி பயிற்சி நிலைய தமிழ் மாணவர்கள் கடற்ருெழில் அதிபருக்கும் தமிழரசுத் தந்தைக்கும் கடிதம் அனுப்பியுள்ளார்கள்.

கடற்ருெழில் அதிபருக்கு அனுப்பியிருக்கும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

'பயிற்சி வகுப்புக்கள் தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும் இவ்வேளையில் பயிற்சி நிலைய அதிபர் தினசரிக் குறிப்பு ஏடுகள், விடுமுறை விண்ணப்பங்கள் அனைத்தையும், தமிழ் மொழியில் எழுதுவதை ஆட்சேபித்து, சகல தொடர்புகளையும் ஆங்கில மொழியில் வைத்துக் கொள்ளும் வண்ணம் வற்புறுத்தி வருகின்ருர். தமிழில் ஒப்பமிடுவதால் நமக்கு வழங்கப்படும் உதவிப் பணத்தைக் காலம் தாழ்த்தியே வழங்கி வருகிருர். தொடர்ந்து தமிழில் ஒப்பமிட்டால் உதவிப் பணம் நிறுத்தப்படுமென்றும்—இப்பணம் சிற்றுண்டிச்சாலை உரிமையாளருக்காகவே வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

'தொடர்ந்து தமிழ் மொழியில் ஒப்பமிட்டு வந்தால் பயிற்சி முடிவில் வழங்கப்படும் சான்றிதழ்களில் 'தகுதியற்றவர்கள்' என்று எழுதப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

'பயிற்சி நிலையத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை, பயிற்சி நிலைய சாரதி றணதீர என்பவரின் சகோதரரின் பெயரில் உள்ளது. ஆனல் றணதீரரே இதை நடாத்தி வருகிருர். சிற்றுண்டிச்சாலைக்குச் சேர வேண்டிய பணத்தைத் தன்னிடம் கொடுக்கும்படி றணதீர கூறியுள்ளார். மேலும் இவர் சிற்றுண்டிச்சாலையில் உணவருந்தும் பொழுது பல இன்னல்களை விளைவிக்கிருர். இவர் பயிற்சி நிலைய சாரதியாகக் கடமையாற்றுகிருரா? அல்லது சிற்றுண்டிச் சாலையை நடத்துகிருரா என்று தெரியாது மாணவர்கள் கஷ்டமடைகிருர்கள். சிற்றுண்டிச்சாலையில் உணவு எடுக்காவிடினும், உதவிப் பணத்தைச் சிற்றுண்டிச் சாலைக்கே கொடுக்க வேண்டும் என்றும் மாணவர்கள் வற்புறுத்தப்படுகிருர்கள்.

'முதல்வரிடம் இது பற்றி முறையிட்ட பொழுதிலும், அவர் எது வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நமது குறைகளை எழுத்தில் தர வேண்டாம் என்று கூறி முதல்வர் தட்டிக் கழிக்க முற்படுகிருர்.'

இவற்றையொட்டி நடவடிக்கை எடுக்கும் வண்ணம் கடற்ருெழில் அதிபரை வேண்டியிருப்பதுடன், தமிழரசுத் தந்தை திரு சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்களையும் தங்கள் குறைகளை நீக்க உதவும் வண்ணம் மாணவர்கள் கேட்டுள்ளார்கள் என்று தெரிகிறது. இவர்கள் 1964-1965 ஆண்டு பயிற்சி வகுப்புக்குரிய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

24-2-64ல் வழங்க வேண்டிய இவர்களது உதவிப் பணம் இதுவரை கொடுபடவில்லை என்றும் தெரிகிறது.

## சீனு பர்மிய எல்லையை தாக்கக்கூடும்

பர்மா—சீன எல்லையில் பெருங் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், எந்த நிமிடத்திலும் சீனு பர்மிய எல்லையை ஆக்கிரமிக்கக் கூடுமென்றும் இரங்கூனிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

இந்த எல்லைப் பிரச்சினை சம்பந்தமாகப் பாரதப் பிரதமர் நேருவுடன் பேச்சுவார்த்தை நடத்தவே பர்மியத் தலைவர் ஜெனரல் நீ வின் அவசரமாக டில்லிக்குச் சென்ருரென்றும் இரங்கூன் செய்திகள் குறிப்பிடுகின்றன.

—

## இலங்கையில் ......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணை சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஒன்றினை அமைக்க வெளிநாடுகளின் உதவியை இலங்கை நாடியிருக்கிறது. தொழிற்சாலைக்கான இயந்திரங்களை வெளிநாடுகளின் உதவியுடன்தான் அமைக்க வேண்டியுள்ளது.

பிரதமர் சௌஎன் லாய், இவ்வியந்திரங்களை இத்தாலிய நாட்டிடமிருந்து வாங்குவதே நல்லது என்று மறைமுகமாகச் சிபார்சு செய்திருப்பதாக அறிகிருேம். கொம்யூனிஸ்ட் நாடான செக்கோசிலவேக்கியாவும் இயந்திரங்கள் அளிப்பதற்கு முயன்று கொண்டிருக்கும் போது, கொம்யூனிஸ்ட் நாடல்லாத இத்தாலிக்கு கொம்யூனிஸ்ட் பிரமுகர் ஒருவர் நற்சாட்சி வழங்கியது இங்கு அனைவருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கிறது.

## காப்புறுதிக் கூட்டுத்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெறிந்ததைத் தொடர்ந்து தலைமையில அதிர்ச்சி ஏற்படடிருப்பதாகவும் வர்ணிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு போன்ற ஊர்களுக்கு மேலதிகாரிகள் சென்று இனிமேல் தமிழில் 'பொலிசி'களைத் தருவதற்கான வாக்குறுதிகளை வழங்கியிருப்பதாகவும் தெரிகிறது. தமிழ் மக்கள் 'பொலிசி' கிழிப்பின் மூலம் நடாத்திய போராட்டம் ஓரளவு வெற்றி கண்டிருக்கிறது என்றே சொல்லலாம்.

தமிழர்கள் தமிழில் 'பொலிசி' கள் எடுத்தால் அவற்றின் பதிவுக்கு வெகு காலதாமதமாவதும் வருவாயை அதிகம் பாதிப்பதாகப் பிரதிநிதிகள் முறையிடுகின்றனர்.

ஆயிரக் கணக்கானவர்கள் தமிழ் மொழியில் தொடர்பு கொள்ளும் இந் நிறுவனத்தின் தலைமை நிலையத்தில் இதுவரை ஒரு தமிழ் தட்டச்சுப் பொ . இல்லாததும் ஒரு பெரும் குறையாக வர்ணிக்கப்படுகிறது.


### இன்றே எழுதுங்கள்

எந்த விதமான மனக் கவலைகளோ, வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய காரியங்களோ இருப்பின் அவைகளை விபரமாக எழுதி அனுப்புங்கள். தெய்வ பலத்திலுலும், மந்திர சக்தியினுலும் உங்கள் காரியங்களை நிவர்த்தி செய்து தர முடியும். இரகசியங்கள் வெளியிடப்பட மாட்டாது.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

**பி. எம். திசாநாயக்க**

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

அருத எண்ணெய் தலைமை காரியாலயம்

கம்பளை.






மொண்ட் பிளாங்க்

இலங்கையின் பிரீதிகரமான கட்டிப் பால்




ஏஜெண்டுகள்

அப்துல்ஹூசெய்ன் ஜபேர்ஜீ

192, 4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு.


# மொழிப்பிரச்னை மாநாட்டில் இ. ஐ. முன்னணி நிலை என்ன?

மொழிப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கு அரசு நடாத்தவிருக்கும் மாநாட்டில் இடதுசாரி ஐக்கிய முன்னணியினர் கலந்துகொள்வதையிட்டு அபிப்பிராய பேதம் நிலவிவருவதாகத் தெரிகிறது. அரசாங்கம் தங்களை 'சிங்கள இனத் துரோகிகள்' என்ற பட்டத்துடன் சிங்கள மக்களிடம்காட்டிக் கொடுத்துவிடக் கூடும் என்று இடதுசாரி ஐக்கிய முன்னணிப் பிரமுகர் ஒருவர் கருத்து வெளியிட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

மொழிப்பிரச்சினையில் ஒரு உடன்பாடு ஏற்படுமானல் சிலவேளை சிங்களமக்கள் மத்தியில் பிளவு ஏற்படக்கூடும். அந்தவேளையில் 'இடதுசாரிகள்தான் தமிழ் மொழிக்கு சலுகைகள் வழங்கி சிங்களத்துக்குத்துரோகம்செய்துவிட்டனர்' என்ற குற்றச்சாட்டை இடதுசாரி ஐக்கிய முன்னணியின்மேல் ஆளும் கட்சி சுமத்திவிடக்கூடும். ஆகவே மொழிப்பிரச்சினை மாநாட்டில் இடதுசாரி ஐக்கிய முன்னணியினர் கலந்து கொள்வது புத்திசாலித்தனமல்ல என்று ஒரு கோஷ்டியினர் இடதுசாரி ஐக்கிய முன்னணிமேலிடத்தை அறிவுறுத்திவருவதாக நமக்குச் செய்திகள் கிடைத்துள்ளன.

இடதுசாரி ஐக்கிய முன்னணியினர் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ள திட்டத்திலும் பார்க்கக் கூடுதலான சலுகைகளைக் கொடுக்க மாநாடு வழிவகுக்கக் கூடுமாதலால் மாநாட்டில் இ. ஐ முன்னணி கலந்து கொள்ளுவதுகூடாது என்று வகுப்புவாத எண்ணங்கொண்ட இடதுசாரிகள் கோஷ்டியொன்று எடுத்துக் கூறிவருவதாகவும் அறிகிருேம்.

## சீனபிரதமர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சௌ-என்லாயின் ஆபிரிக்கச் சுற்றுப்பிரயாணமும் வெற்றிபெறவில்லையென்றும், இந்தியா மண்ணைக் கொண்ட ஆக்கிரமிப்புநாடு என்ற கருத்தை ஆபிரிக்க நாடுகளை ஏற்றுக்கொள்ளச் செய்வதில் சௌ-என்லாய் தவறிவிட்டாரென்றும், சீன அதிகார பீடம் கருதுகிறதாம் அவர்மீது அதிருப்தி ஏற்பட இது மற்ருெரு காரணமாம்.

சீன இராணுவத்தின் பிரதம தளபதியும், சீன சுதந்திரப்போரில் கம்யூனிஸ்ட் படைக்குத் தலைமைதாங்கியவருமான ஒற்றைக்கண் தளபதி சூட்டே அல்லது டென் சியாவோ—பிங் பிரதமராக நியமனம்பெறக்கூடுமென்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆத்மீகத் தேர்தல்

முனியப்பதாசன்

பொழுது இன்னும் புலரவில்லை. மெல்லிய இதமான இளம் கறுப்பையும் காலை வெய்யிலின் மனோகரமான பிரகாசத்தையும் கலந்து கண்ணுக்கெட்டிய தூரம் வரையும் வார்த்துவிட்டதாய் ஒரு அமைப்பு. நல்லூர்க் கந்தசுவாமிகோவிலின் காலைப்போதின்பூஜைக்கான ஆயத்த மணியின் நாதம் அந்தப் பேரமைதிப் பெரும் போதைக் கிழித்துக் கேட்கிறது. பக்கத்தே உள்ள பிள்ளையார் கோவிலில் எழுகிற மணி ஓசை கந்தன் கோவில் மணி ஓசைக்குத் தாளம் போடுவதாய் ஒரு அமைப்பு.

முன் விறாந்தையில் சிந்தனையில் கிடந்த கனகரெத்தினம் எழுந்தார். உருவமற்ற ஆயிரவிதமான அறக்கோட்பாடுகளே ஒரு உருவமற்ற உருவமாய் எழுகிறமாதிரி இருந்தது. பின் கிணற்றடிக்குச் சென்று குளித்தார். தோய்த்துப் போட்ட ஈர வேஷ்டியை உடுத்திக் கொண்டு-படையாக அப்பிய திருநீற்றுப் பூச்சுடன்--'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்ற தேவாரத்தை முணு முணுத்துக் கொண்டே வெளியே வந்தார். கோயிலை இவர் இரண்டெட்டில் அடைந்ததும் பூஜை தொடங்குகிறது. பூஜை செய்பவர்- கடமை தவறாத அன்புருவான குருக்கள். இவர் நெறி வழுவாத பக்தர். அவருக்கு அந்த மோகனச் சூழ்நிலையில் இவர். இவருக்கு அவர். இரண்டு பேருக்கும் பிள்ளையார். எவரும் விழாக் காலம் தவிர அப்படி வருவதில்லை.

தீபம் குருக்களின் கையில் ஏறிச் சுழலுகிறது. கனகரத்தினத்திற்குப் பக்தி எழவில்லை. கொஞ்ச நாளாய் அவருக்கு இப்படித்தான் இருக்கிறது. பயிற்றிய புலன்கள் கட்டுடைத்து என்ன என்னவோ எண்ணுகின்றன. பிள்ளையாரைக் கும்பிட்டுக் கொண்டிருக்கிறபோதே அவருக்கு ஒரு கற்பனை எழுகிறது...

'கனகரெத்தினத்திற்கு ஜே'-'கனக ரெத்தினத்திற்கு ஜே.' 'ஜே'-'ஜே' என்று மக்கள் உற்சாக மிகுதியால் கத்துகிறார்கள். வெள்ளம் போல் நிறைந்து நிற்கிற அந்தப் புனிதமான ஆத்மாக்களின் குரலை அவர் மௌனப் புன்னகையுடன் ஏற்கிறார். ஆயத்தங்கள் அவரை அறியாமல் நடந்து முடிகின்றன. நூற்றுக் கணக்கான கார்களும்-மாலைகளும் தயாராயிருக்கின்றன. இவரைக் குண்டுக் கட்டாய்த் தூக்கி முன் திறந்த காரில் அமர்த்த முனைகிறார்கள். இவரது வெற்றி உற்சாகம் தேய்கிறது. உணர்ச்சி மிக்க மனிதர்களைக் கட்டுப்படுத்திக் கொண்டே அவர் சிரமப்பட்டு ஒரு உயர்ந்த இடத்தில் ஏறிக் கத்துகிறார்-'இது சாதாரண வெற்றியில்லை. ஆத்மீக வெற்றி. அதைக் கொண்டாட இந்த ஆரவாரம் வேண்டாம். ஆத்மாவால் அனுபவியுங்கள்'-கீதையைப் பற்றியும் விவேகானந்த-இராமகிருஷ்ணரைப் பற்றியும் பேச்சு நடக்கிறது. அவரைச்சுற்றி-அந்த இடத்தைச் சுற்றிப் புனித அலைகள் பரவுகின்றன.

குருக்கள் கையால் திருநீற்றையும் அர்ச்சனை இலையையும் மலரையும் வைத்தபோதுதான் அவருக்குத் தன் எண்ண ஓட்டம் அறுந்தது. மிகவும் வெட்கியவராய் வீட்டை அடைந்தார். பழையபடி முன்விறாந்தையில் வந்து 'ஈஸிச் செய'ரில் படுத்தார்.

'விஜயா-விஜயா' என்று கூப்பிட்டார். உள்ளேயிருந்து குரல் எழவில்லை. 'தரித்திரம் பிடித்த கழுதை' என்று முணுமுணுத்தார். ஊரெலாம் மேலான தத்துவங்களை உணர்ந்துகொண்டு தம்மைச் சுற்றிக் கவிந்து நிற்கிற பொய்களையும் வஞ்சனைகளையும் துடைத்து விடத் துடிக்கிற போது தம் மனைவி மட்டும் பேயிருளில் துயில்வதாய் அவருக்குப்பட்டது. நேற்றைய சம்பவமும் நினைவிற்கு வந்தது. மிக்க வெறுப்போடு அதை எண்ணினார்.

வெளியே காரியமாகப் போய்விட்டு இரண்டு மணிக்கு மேலாகத்தான் அவர் வந்தார். சாப்பிட அவர் சென்றபோது அவர் மனைவி வரவில்லை. இலையைப் போட்டு நீர் தெளித்துக்கொண்டிருந்த போது தான் அவள் வந்தாள். அமுதைப் படைத்துக்கொண்டிருந்தபோது அவள் கேட்டாள். 'எதற்காக மாரடிக்கிறீர்கள். நாயாக அவதிப்படுகிறீர்களே உங்களுக்கு ஒரு வோட்டாவது கிடைக்குமா?'

ஏறக்குறைய இருபத்தி ஐந்து வருடகாலமாய் தன் லாப நஷ்டம்சுகதுக்கம் என்பவற்றில் பங்குகொண்டு நின்ற தம் மனைவியை மிக்க வெறுப்போடும் அருவருப்போடும் பார்த்தார். கவனமாகத் தாம் பழக்கிய பெருந்தவக் கோட்பாடுகளில் இவளுக்காக அவர் எவ்வளவற்றைத்தான் விட்டிருக்கிறார்? குழுமையான சுந்தர நினைவுகளிலே தாம் உத்தியோகம் பார்த்த காலத்தில்-பிற இடங்களில் மலைநாடுகளில் பூமித்தாயின் சௌந்தர்யமான செந்தழிப்பில்கிறங்கி நின்று-கையும் கையும் மனமும் மனமும் கலந்து...ஏன் தாம் பேணிவந்த பிரமச்சரியத்தையே அவளுக்காகத் துறந்தாரே-? மனைவி என்பவள் வெறும் சதைப் பிண்டம்தானா? இரத்தம் இருக்கும்வரையும் ஒட்டும் மூட்டைப் பூச்சியா? ஆத்மாவையும் அதன் அகப் புறப் பிரகாசங்களையும் அறிந்து கொள்ளும் அளவிற்கு உயர முடியாத ஜடமா?-ஏனோ கள்தூரிபாயை எண்ணினார். கண் கலங்கியது. சாப்பிடாமலே எழுந்துவிட்டார்.

'நடப்பதைக் கவனிப்போம்' என்று முணு முணுத்துக்கொண்டே அட்டில் அறையை அடைந்து தாமாகத் தேநீர் தயாரித்துக் கொண்டு ஈஸிச் செயரில் வந்து படுத்தார்.

ஃ

கனகரெத்தினம் ஒரு மாஜி ரிடையேர்ட். இரண்டாவது உலக மகாயுத்தத்தில் பாதுகாப்புப் பகுதியில் பெரும் பொறுப்பான பதவிகளை வகித்தபிறகு காலம் சென்ற பிரதமர் ஆரம்பித்த குடியேற்றத்திட்டம் சம்பந்தமான பகுதியில் பெரும் பொறுப்பை வகித்தவர். யப்பான்காரர்கள் கொழும்பில் குண்டுபோட்ட காலத்தில் மரணம் தன் கூரிய கொடும் கரங்களால் எட்டிப் பிடித்துத் தழுவிக் கொள்ள மோகவெறி கொண்டு திரிந்தபோது அவற்றிற்கு அஞ்சாமல் நீச்சல்போட்டவர். பாதுகாப்பு இலாகாப் பகுதியை விட்டு உணவு விவசாயப் பகுதிக்கு மாற்றலாகிறபோது தம நாட் குறிப்புக் கொப்பியில் அவர் எழுதினார். 'இதை போதிக்கும் மரண பயமற்ற வலிமை மிக்க ஆத்மாவை நான் இங்கே-இந்தப் பதவியில் இந்தச் சூழ்நிலையில் பெற்றேன். பதவி மாறுகிற போது மீண்டும் எனக்கு மரணபயம்வருமா? சாத்தியமில்லை. நான் வலிமைபெற்றுவிட்டேன்.'

கோகேலது கண்களைப் போல அவரது கண்கள் இருக்கும். பெரியமுகம். மெய்ஞான அறிவின் விளக்கமாய் முகமெங்கும் பிரகாசம், சதுரமான உடலமைப்பு. நல்ல நீண்ட உருவம். வயது அறுபது ஆகிவிட்டது. யாரும் அப்படிச் சொல்லிவிட முடியாது. அதற்குக் காரணமும் இருந்தது. அவருக்கு ஒரு இலட்சியம். அந்த இலட்சியம் அவரை இயக்கியது. உற்சாகத்தைக் கொடுத்தது. வலிமையைக் கொடுத்தது. அதற்காக-அதற்காகவே



தான் அவர் வாழ்ந்தார். பென்ஷன் பெற்றதும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித்தேர்தலுக்குப்பணத்தையும் கட்டினார்.

அவருக்குக் காசைக் கட்டிப்போட்டு வருகிறபோது ஒரு மாலைகூட விழவில்லை. தன்னுக்குள் அப்போது அவர் சொல்லிக்கொண்டார். 'இது ஆத்மீகத் தேர்தல்-ஆத்மா அழிவில்லாதது. செல்லாத போலி ஆரவாரம் அதைச் சாகடித்துவிட முடியாது.'

காசைக்கட்டிவிட்டு வந்த போது என்ன எண்ணங்கள் அவருக்குத் தோன்றிற்றோ அந்த எண்ணங்கள் நெஞ்சு கொள்ளாக் கற்பனைகள், அந்த ஈஸிச் செயரில் இப் [illegible] போதும் அவருக்கு எதிர்ப்பட்டன. காந்தி மகாத்மா வந்தார். 'சமயத்தின் அடிப்படையில் நான் ஓரளவு அரசியலை உருவாக்க முயன்றேன்- நீ அதை முற்றுப் பெறச் செய்யப்போகிறாய்'-விவேகானந்தர் வந்தார் 'அழிவில்லை. சமாதானமே. உலகத்திற்கு இந்து தர்மங்களின் மேம்பாட்டை உணர்த்த இதுவே தக்க சமயம். நீர் வாழ்ந்துகொண்டிருக்கிற சமுதாயத்தில் சமயத்தின் அடிப்படையில் அரசியலை அமைக்க இதுவே தக்க சமயம்-வெல்க நீர்' என்று வீர முழக்கமிட்டார். அவை கனவுகள். அந்தக் கனவுகளைத்தான் இந்த அதிகாலையிலும் அவர் கண்டு கொண்டிருந்தார். அவர் வரையில் அவை கனவுகள் தாமா? வெறிபிடித்த நாய்ச் சமூகத்தில் காலம் காலமாய் எப்படியோ தப்பி வந்திருக்கிற தருமங்களை உருவாக்க முயலும் ஜீவன் ததும்பிய கற்பனைகள்.

இப்போது இருள் முற்றற விலகிவிட்டது. காலைக் கதிரவனின் செழிப்பான இளம் கதிர்கள் விறாந்தைக்கு முன்னால் அமைந்து கிடந்த மலர்களில்-மரங்களில்-மண்ணில் புரண்டு புரண்டு தழுவுகிறது. கற்பனைகள் நழுவுகின்றன. நாளை மறுநாள் தேர்தல். அவர் இதுவரையிலும் எந்த ஆயத்தங்களும் செய்யவில்லை. நகரமே அடிபடுகிறது. 'பாராளுமன்றத் தேர்தல்' என்றால்சும்மாவா? எதையோ எண்ணிக்கொண்டவராய்த் துண்டைஎடுத்து உதறிக்கொண்டே வெளியே நடந்தார்.

தன் வட்டாரத்தில் இருக்கிற சுருட்டுக் கொட்டில்களை அடைகிறார். வலிமை மிக்க பேராற்றல் மிக்க ஞானஒளி அவரை இயக்குகிறது. உள்ளத்தின் உண்மை ஒளிக்கு ஏற்றவாறு சொற்கள் பாய்ந்து விழுகின்றன. புடமிட்ட சொற்கள். காலம்காலமாய் மெய்ஞானத்தைத் தோய்த்துக் கொண்டிருக்கிற சொற்கள்.

'நீ அறிவிலி இல்லை. உன் ஆத்மா அறியாதது எதுவுமில்லை. வலிமையும் ஞானமும் சேர்ந்த உன் ஆத்மா உனக்குத் தெரியாமல் கிடக்கிறது. அதை விழிப்புறச் செய். பிரிக்க முடியாது-வாழ்க்கையோடு இணைந்துபோய்க் கிடக்கிற அரசியலுக்கு அதைப் பயன்படுத்து. உன்னைச்சுற்றிச் சொர்க்கத்தைக்காண்பாய்......

அவர் உணர்ச்சி வசப்பட்டுப் பேசுகிறார். தனிமனிதன் - கூட்டான மொத்தத் தொகையான மனிதர்கள் என்ற பாகுபாடு அவரிடம் இல்லை. அவர் ஆத்மாவைப் பற்றிப் பேசுகிறார். எல்லாவிடமும் நிறைந்து நிற்கிற புனிதமான சக்தியை உணர்ந்து நிற்கிற ஆத்மா-புனித ஆத்மாவானாலும் எதையும் அசைக்கும். எல்லாருக்கும் கேட்கும் என்பது அவரது நம்பிக்கை.

அவர் பிரசாரம் செய்கிறார். வார்த்தைகள் நறுக்கிய துண்டுகளாய்விழுகின்றன. 'இதுதேர்தல் இல்லை. இது ஆத்மீகத் தேர்தல். மெய்ஞானத்தை வலிமை மிக்க ஆத்மாவை நாம் புத்தகம்,கோயில், மேடைகள் என்ற கூட்டிற்குள் இருந்தும் விலக்கிப் பரந்த அளவில் செயல்படுத்தப்போகிறோம். அவ்வளவு தான். இது ஆத்மீகத் தேர்தல்...'

கள்ளுக்கொட்டில் சந்திகள் எதையும் அவர் விட்டு வைக்கவில்லை. புயலைப்போல அவர் நடமாடுகிறார்.

ஜனங்கள் நிரை நிரையாய்த் தொகை தொகையாய்க் கூடுகின்றனர். இறுதி நாளில் பிரசாரத்தின் இறுதிக் குரலாய் அவர் குரல் ஒலிக்கிறது.

'...ஆத்மா என்பது மற்றவனிடமிருந்து-பிற நாட்டிடமிருந்து கடன் வாங்கும் பொருளன்று. உன் உள்ளே உள்ளே நீயேயாய் எரிந்து கொண்டிருக்கிற ஞானதீபம். எதனாலும் அழிக்க முடியாத வச்சிரப் பொருள். மூட்டிவிட்டால் மாளாது ஓங்கி ஓங்கி வளரும் தீ. இந்தச் சமூகத்திற்கு-ஒரு பாவமுமறியாமல் குருக்கள் ஒருவர் தீயிடப்பட்டு வெந்து மடிந்தாரே-நூற்றுக்கணக்கான மக்கள் துடி துடிக்க விம்மி அழுத சோகக் குரல்கள் எழுந்ததே?-பிற ஒருவனால் தெய்வத்திற்கு நிகரான பெண்களின் கற்பு சூறையாடப்பட்டதே? பேதைமையையே ஆசனாக முன் நிறுத்திக் கொண்டு-அந்தப் பேதைமையையே தம் கவசமாய் இறுமாந்து நிற்கிறதே இந்தச் சமூகம்-இந்த நாடு. இந்த நாட்டின் ஆத்மாக்கள் தூங்கிக்கொண்டிருந்தன.அவ்வளவுதான்.இந்த நாட்டின் கூட்டான புனித ஆத்மாவைத் தட்டி--'இதோபார்-இனம், வர்க்கம், காலம், மொழி, சமயம் என்ற வேறுபாடில்லை. தெய்வத்தோடு நிகரான குற்றமற்ற புனித ஆத்மாக்கள் நாம்' என்று சொல்வார் யார்? தூங்கிக் கொண்டு கிடக்கிற இந்த நாட்டின் புனித ஆத்மாவைத் தட்டி எழுப்புவார் யார்?- இந்தத்தேர்தல் ஆத்மாவின் புனிதப் பிரசாரம். நாடெங்கும் மடிந்து கிடக்கும் பொய் மாயப் பிடிப்பைத் துகள் துகளாய்த் தட்டி எறிந்து-இந்தத் தூசிகளா நம் உயர்ந்த ஆத்மாவைப் பிணித்துக் கொண்டிருந்தது என்று பரிகசிக்கப்போகும் தேர்தல்...'

சுற்றி நிற்கிற ஜனங்கள் வைத்தியக்காரப் பார்வை பார்க்கின்றனர். தம்மிடம் நிரம்பி வழிந்தஏதோபொய்யான மடமைத் தனங்கள் கழன்றுகொண்டே தம் கண் முன்னால் ஓடிவிட்டமாதிரி அவர்களுக்கு ஒரு நம்பிக்கை பிறக்கிறது. அவர்யாரையும் சட்டைசெய்யாமல்வீட்டை அடைகிறார். அன்றைக்கிரவு அவர் தன் நாட்குறிப்புக் கொப்பியில் எழுதினார்.

...வெறி...வெறி-மற்றெதையும் காணவிடாத பொய் மாயத் திரையைக் கிழிக்கத்

(11-ம் பக்கம் பார்க்க)

## அடுத்த இதழில்

'அன்புமணி' எழுதும்

**இதயக் குரல்**

என்னும் சிறுகதை இடம்பெறும்.

## இலங்கைத் தமிழர்

# உரிமை காக்க உலகத் தமிழர்களே ஒன்று சேருங்கள்

## இலங்கை தமிழர் மன்றம் பற்றி 'தமிழ்க்கொடி' தலையங்கம்

அண்மையில், சென்னையில் உருவாகியிருக்கும் 'இலங்கைத் தமிழர் மன்றம்' பற்றி நாம் தமிழ் இயக்க வார ஏடாகிய 'தமிழ்க் கொடி' 1-3-64 இதழில் 'ஆதரவு தாரீர்' என்ற தலைப்பில் பின் வரும் ஆசிரியத் தலையங்கத்தை எழுதியுள்ளது.

பன்னிரெண்டு மைல்களுக்கப்பால் இருக்கும் இலங்கை, தமிழர் வாழ் பழம் பெரும் பூமிகளில் ஒன்று. தொன்று தொட்ட தமிழ் நிலம். இரண்டாம் தமிழ்ச்சங்கம் கபாடபுரம் இருந்தது ஈழம் தான் என்பது வரலாற்றாசிரியர்களின் துணிபு.

அந்த மண்ணில் இன்று சிங்களவர்கள், தாங்கள் பெரும்பான்மையாக வாழுகிறார்கள் என்ற ஒரே காரணத்தால், தமிழர்களைப் படுத்தும் கொடுமைகொஞ்சநஞ்சமன்று. தமிழர்களை எவ்வாறாவது இலங்கையிலிருந்து விரட்டியடித்து விட வேண்டும் என்பது இன்று அவர்களின் குறிக்கோளாக இருந்து வருகிறது. அதன் காரணமாகத்தான் ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கான தமிழர்கள் இலங்கையிலிருந்து துரத்தப் படுகிறார்கள்.

அவர்களின் உரிமையைக் கட்டிக்காக்க தமிழ் நாட்டு அரசாங்கமோ, அவர்களின் குறைகளுக்குச் செவிசாய்க்க டெல்லி அரசாங்கமோ தயாராகவில்லை.

இந்த நிலையைப்போக்க, இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைக் கட்டிக்காக்க "உலகத் தமிழர்களே ஒன்று சேருங்கள்!" என்ற அறை கூவலைச் செயல்படுத்த தமிழகத் தலைநகரில் "இலங்கைத் தமிழர் மன்றம்" என்ற பெயரில் ஒரு அமைப்பு உருவாகி இருக்கிறது. அதைத் தோற்றுவித்தவர் கவிஞர் காசிஆனந்தன். இயக்கத்தின் பால் அன்பு கொண்டவர்களும், தமிழினம் வாழ ஆசை கொள்ளும் தகைமையாளர்களும் அம் மன்றத்தை—செயல் பட எல்லா வகையிலும் ஆதரவு தர வேண்டுகிறோம்!

## முல்லைத் தீவுப் பகுதியில் சிங்களத் திணிப்புக்கு கையாளும் உபாயம்

நூற்றுக்கு நூறு வீதம் தமிழ் பேசும் மக்கள் வதியும் இப் பகுதியில் சிங்களம் மாத்திரம் சட்டம் வெகு தந்திரமான முறையில் அமுல் செய்யப்படுவதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

ஆங்கிலேயருக்கு அடிபணியாது கடைசிவரையும் உயிரையும் பாராது போராடி வீர சுவர்க்கம் அடைந்த பண்டார வன்னியனும் அவன் போன்ற சுயமரியாதையைச் சிறிதும் விட்டுக் கொடுக்காத சந்ததியினரும் வாழும் அடங்காப்பற்று என்னும் பகுதியில் இந்த நிலை ஏற்படுவதா?

1. அரசாங்கத்தினரால் மாதாந்த உதவித் தர்மப் பணம் பெறும் ஏழைகள், நோயாளிகள், வயோதிபர் மீதா சிங்களத்தில் திணிப்பு? இவர்கட்கு பணம் கொடுப்பதற்கு உரிய அட்டைகள் தனிச் சிங்களத்தில் அனுப்பப்பட்டுள்ளன. இதனால் இவ்வேழை மக்கள் தாமறியாத மொழியில் எழுதப்பட்டிருப்பதனால் அவ்வட்டைகளைப் பெற்றும் பணம் பெறமுடியாத நிலையில் இருக்கின்றனர். இதைப் பற்றி ஏற்கனவே வவுனியா மாவட்ட அதிபருக்கு முறையிட்டும் இதுவரை நடவடிக்கை எடுத்து இவ்வேழைகட்கு உதவி செய்யாதது கவலைக்குரிய தொன்றாகும்.

2. பொது மக்களுக்கும், சிங்களத்தில் தேர்ச்சியுறாத உத்தியோகத்தர் கடமையாற்றும் கந்தோர்கட்கும் ஆங்கில—தமிழ் மொழி பெயர்ப்பற்ற தனிச்சிங்களத்தில் எழுதப்பட்ட காசுக் கட்டளைகளும், சம்பளப் பட்டியல்கள், கடிதங்களும், அனுப்பப்பட்டு வருகின்றன. இதை அரசாங்கம் தான் செய்யமாட்டேன் என்று சொல்லிச் சொல்லிச் செய்வது தந்திரமானதும், அட்டூழியமான செயலுமாகும். ஆஸ்பத்திரி வைத்திய அதிபர்களால் கொழும்பு அரசாங்க மருந்துச்சாலைக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களை வழமைபோல் ஆங்கிலத்தில் அனுப்பியதற்கு அவ்விண்ணப்பங்களைச் சிங்களத்தில் எழுதி அனுப்ப வேண்டுமெனத் திருப்பி அனுப்பப் பட்டிருக்கின்றன. சிங்களத்தில் தேர்ச்சியுறாத வைத்திய அதிபர்கள், லிகிதர்கள் எவ்விதம் சிங்களத்தில் எழுதி அனுப்ப முடியும்? மருந்துகள் வந்து எமது நோய்கள் மாறுவது எப்படி? இந்த நிலையில் நாம் கண்மூடித்தனமாக இருக்கலாமா?

3. 10-2-64ந் திகதி வெளிவந்த வீரகேசரிப் பத்திரியில் முற்பக்கத்தில் 'பொலிஸ் வாக்கு மூலம் தமிழில் பதிவு—முல்லைத் தீவில் வசதி" என்ற தலையங்கத்துடன் வந்த செய்தியின்படி முல்லைத் தீவுப் பொலீஸ் நிலையத்தில் பொது மக்கள் கொடுக்கும் வாக்கு மூலங்களைத் தமிழில் பதிவு செய்ய வசதிசெய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. ஆனால் நூற்றுக்கு நூறு வீதம் தமிழ் பேசும் மக்கள் வதியும் இப் பகுதிக்காக இருக்கும் முல்லைத் தீவுப் பொலீஸ் நிலையத்தில் ஆக ஒரே ஒரு தமிழ் பொலீஸ் உத்தியோகத்தர் மாத்திரம் இருக்கின்றார். இவரால் இப்பகுதியில் வாழும் தமிழ் பேசும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியுமா? வீரகேசரிப் பத்திரிகையில் உள்ள செய்தியின்படி முல்லைத் தீவுப் பொலீஸ் நிலையத்தில் மாற்றம் எதுவுமில்லை. சென்ற வருடங்களில் ஒரு தமிழ் பொலீஸ் அதிகாரியும், இரு பொலீஸ் உத்தியோகத்தர்களும் கடமையாற்றிய இந்தப் பொலீஸ் நிலையத்தில் இன்று எல்லாம் சிங்களமயமாக்கப் பட்டுள்ளது. இவர்கள் எமது மொழியை அறியாத தன்மையினால், கொடுக்கும் முறைப்பாடுகள் திருத்தி எழுதப்பட்டு, நீதித் தலங்களில் பெயர்களும், முறைப்பாடுகளும் மாறுபடுவதால் சம்பந்தப்பட்டவர் [illegible] செலவுகளுக்கும், [illegible] களுக்கும் ஆளாகின்றனர்.

4. தபால் நிலையம், பகிரங்க வேலைப் பகுதி காரியாலயம், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் நிலையங்கட்கு ஒவ்வொரு சிங்கள லிகிதர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எதுவித கடமைகளையும் சரிவரச் செய்ய இயலாது. அரைகுறைச் சிங்களம் படிக்க ஆரம்பித்துள்ள தமிழ் அதிகாரிகளும் லிகிதர்களும் சிங்கள மொழியை நன்குபுரிந்து கொள்ள முடியாது. இந் நிலையில் சிங்கள மொழி பெயர்ப்புகளை அவற்றிற்குச் சான்றுரை செய்து ஏற்று ஒப்பமிடுவது "தானறியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்" என்பது போல் ஆபத்தான நிலை ஏற்படக் கூடும்.

5. சிங்கள ஊழியர்கள் தனிச் சிங்களத்திலல்லாது வேறு மொழிகளில் வேலை

(13-ம் பக்கம் பார்க்க)

## வெப்பத்தைக் காட்டும் புதுமுறை கரண்டிகள்

புதிய வகைச் சமையல் கரண்டிகள் இப்போது அமெரிக்காவில் விற்பனையாகி வருகின்றன. இக் கரண்டியின் கைப்பிடிப் பக்கத்தில் வெப்பமானி ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. அடுப்பிலுள்ள உணவை இக் கரண்டியால் கிண்டும் போது அந்த உணவின் வெப்ப நிலை எவ்வளவு என்று தெரிந்து விடுகிறது.

வெப்பமானி கரண்டியின் கைப்பிடிப் பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ளது. 50 பாகை பாரன் ஹீட் முதல் 250 [illegible] பாகை [illegible] வரை இதில் அளவுக் குறி உள்ளது.

## ஆத்மீகத் தேர்தல்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கிவிட்டேன். நூற்றுக்கணக்கான ஆத்மாக்கள் விழிப்புறத் தொடங்கிவிட்டன. இனி வெறியில்லை. பலியுமில்லை. சமாதானமே-நான் மூவாயிரம் வோட்டுக்களால் வெல்லுவேன். அதைத் தடுக்கமுடியாது; ஆத்மாவுக்குக் கட்டுப்பாடுகள் இல்லை. அதை அழிக்கமுடியாது. இந்த வெற்றி என்னுடைய வெற்றியில்லை. 'எங்கெங்கு தர்மங்கள் அழிந்து அதர்மங்கள்மேலிடுகிறதோ அங்கெல்லாம் நான் பிறப்பேன்' என்ற பகவான் கிருஷ்ணனின் வெற்றி. விழிப்புற்ற புனித ஆத்மாக்களின் வெற்றி...'

விடிந்தால்தேர்தல். பொல்லாத இரவும் விடிந்தது. யாழ்ப்பாண நகரம், லண்டன் பாரிஸ் முதலான பெரு நகரங்களைப்போல் அடிபடத் தொடங்கியது. ஒவ்வொரு சிறிய உயிரும் எதையோ எதிர்பார்த்து நிற்கிற சாயலில் அமைதி-குமுறல் என்ற வற்றோடு நிற்கிறது. நகர வீதிகளில் படிந்து கிடந்த தூசுகள் எழும்பி காற்றுடன் கலந்து படிகின்றன. அவையும் எதையோஎதிர்பார்த்து மேலே எழுகிறமாதிரி இருந்தது.

அன்றைக்கும் அவர் வெளியே வரவில்லை. இந்த ஆரவாரத்தில் அவருக்கு நம்பிக்கை இல்லை. மாலை வந்தது. வாக்குகள் எண்ணப்படும் இடத்தை அடைந்தார். நேரம் ஓடியது. அவர் தகர்ந்தார். இருபத்து ஐந்து வோட்டும் அவருக்குக் கிடைக்கவில்லை.

வென்றவர்கள் வெற்றி ஓலம் எழுகிறது. மனிதர்களின் கூட்டான அருமையான கூட்டுணர்ச்சிகள் சுண்டப்பட்டுவிட்டன. விடிந்தால் அவற்றின் விளைவுகளை இயலுமானால் பேப்பரில் படத்துடன் பார்க்கலாம்.

தள்ளாடித் தள்ளாடி வீட்டை அடைந்தார். தம் அறையில்போய் காந்தி மகாத்மா-விவேகானந்தர்-இராமகிருஷ்ணர் படத்தின் முன்னால் கிடந்தார். வெறி பிடித்துக் கத்தினார். 'உலகம் பொல்லாதது. மகாத்மாவே உலகம் பொல்லாதது. நீங்கள் வீடுதோறும் பிறந்தாலும் எங்கோ ஒரு மூலையில் வெறியும் பித்தலாட்டமும் கொடுமைகளும் கயமைகளும் வாழ்ந்துகொண்டு தான் இருக்கும். புனிதமான ஆத்மாவின் வலிமை மிக்க சக்தியோடு வளர்ந்து கோடி கோடி கோடியாய்ப் பல்கிப் பெருகித் தழைத்து நிற்கிற கயமைத்தனங்கள் செத்து மடியப் போவதில்லை—

அவருக்கு அன்றைக்கு உறக்கம் பிடிபடவில்லை. வெடித்து வெடித்து அழுதார். அந்த அழுகை தான் வெற்றி பெறவில்லையே என்ற ஆதங்கத்தால் பிறந்த அழுகையில்லை. வெறிபிடித்த ஒரு சமுதாயத்தில் புனிதமான ஆத்மாவை-மெய்யுணர்வுகளை விழிப்புறச் செய்ய முடியவில்லை - அது வெல்ல முடியவில்லை - என்ற ஆற்றாமை கண்ணீரைப்புரட்டிப் புரட்டிக் கொட்டியது.

அவரது மனைவி வந்தாள். தயங்கித் தயங்கிச் சொன்னாள். 'உங்களை எனக்குத் தெரியும். உங்களது புனிதமான உணர்ச்சிகளையும் எனக்குத் தெரியும். அவை இந்த உலகத்தை எட்டாது என்றுதான் தடுத்தேன்.

மனிதர்கள் மாற மாட்டார்கள். மாறுவதாயிருந்தால் புத்தன் யேசுவிற்குப்பிறகு காந்தி மகாத்மா தோன்ற வேண்டிய அவசியம் இருந்திராதே—

மனைவியை அவர் பார்த்தார். தெய்வம்போல் அவள் உயர்ந்து நின்றாள்.

ஃ

பொழுது புலரவில்லை. வழக்கம்போல் அந்தப் புலராப்போதில் கிளரும் மணி ஒலிகளின் நாதம் அவரை மயக்குகிறது வழக்கம்போல் அவர் பிள்ளையார் கோவிலுக்குப் போகிறார். குருக்கள் பூஜை செய்கிறார். கனகரெத்தினத்தின் கண்கள் அந்தக் கோயிலின் மோட்டு வளையைப் பார்க்கின்றன. சலனமற்று நிலைக்கின்றன. பாம்பொன்று அரைவாசி விழுங்கிய எலியோடு நிற்கிறது. அதன், எலியின் வால்-கருமையாய்த் தொங்குகிறது.

தெய்வச்சந்நிதியில் அவன் படைத்துவிட்ட உயிர்கள் அவன் உதிரம் ஒன்றை ஒன்று விழுங்குகிறது. தெய்வத்திற்குக் கொதிக்கவில்லையா? அவன் தெய்வமில்லையா?-கேள்வி தொங்கி அவருள்ளே சுழலுகிறது. தெய்வம்-ஆத்மா-தான் நம்பி வாழ்ந்த அடிப்படைக்கோட்பாடுகளே தகருகின்றன--அவரே தளர்ந்துபோகிற சமயம் குருக்கள் அர்ச்சனைப் பொருட்களை வைத்தார். அவர் கண்களில் நீர் முட்டி மோதிக் கக்குகிறது.

'கனகரெத்தினம், பாம்புக்கும் பேய்க்கும் கூட ஆத்மா இருக்கிறதுதான். ஆனால் அவற்றை விழிப்புறச்செய்ய முடியாது. அவை பரிணாம தத்துவத்தின் படி-தெய்வத்தின் நியதிப்படி வளர்ந்து தாமாகவே தேடித் தேடி அலைந்து ஒளிபெற்று விழிப்படைய வேண்டியவை. நாமாக விழிப்புறச் செய்ய முடியாது. கவலைப் படாதே கனகரெத்தினம். வெறி பிடித்த வெறியைத் தவிர-வெறியை நோக்கிச் செல்வதைத் தவிர வேறெதையுமே செய்யாத நமது சமூகப்புத்திலே பாம்புகள்தான் இருக்கின்றன அவர்கள் தாம் செய்யும் கீழான பாவங்களையும் தம் மனத்தையே ஏமாற்றும் கயமைத்தனங்களையும் உணரும் காலம் வரும். அப்போது அவர்கள் ஆத்மா விழிப்படையும். விழிப்புற்ற தூய ஆத்மாவின் முன்னால் வஞ்சனையில்லை பொய் இல்லை-கயமை இல்லை. சின்னத்தனங்கள் இல்லை...

கனகரெத்தினம் புனித அலைகளில் மிதந்தார். 'குருக்களே நீங்கள் சொன்னது உண்மை. அதற்கு முன்னால் ஆயிரம் ஆத்மீகத் தேர்தல் நடந்தாலும் இந்த உலகம் மாறாது' என்று கத்தினார்.

சௌந்தர்யத்தின் பிறப்பிடமாய், மெய் ஞானத்தின் உறைவிடமாய் அவருக்கு அந்த நேரத்தில் பிள்ளையார் தென்பட்டார். பாம்பைப் பார்த்தார். அது விம்மிச் சுருண்டு கிடந்தது.

அடுத்தஇதழ் மறைந்த மூதூர் முதல்வர் திரு. த. ஏகாம்பரம் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு விசேட இதழாக வெளிவரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாசன்-மெய்யப்பன் வடநாடு செல்வதேன்?

## எம். ஆர். ராதா விளக்கம் தருகிறார்

'படிக்காதவனிடம் தான் கலை இருக்கு. நான் படிக்கல்ல. என்னிடம் நல்ல கலை இருக்கு. ஆரம்பத்து 'பவுண் டேஷனே' எனக்கு நாடகக் கலைதான். அதனுலேதான் நான் தொடர்ந்து தொடர்ந்து வெற்றி பெறுகிறேன். இங்கே இருக்கிற நடிகப் பசங்க படுத்திறபாட்டினுலேதான் வாசன், மெய்யப்பன் எல்லாம் வடநாட்டுக்கு ஓடுறாங்க'. இவ்வாறு எம். ஆர். ராதா 'கற்பகம்' 100 வது நாள் விழாவிலே பேசுகையில் கூறினுர்.

தமிழ்ப் பட உலகத்திற்கு ஏதோ நல்லகாலம் வரும். அது உருப்படும்னு பேசினுங்க, எனக்கென்னமோ அதிலே நம்பிக்கையில்லே. இங்கேதான் ஒரு தமிழ்ப் படம் பிடிச்சி முடிச்சதும், அதை ஹிந்தி ஆக்கலாம்னு யோசிக்கிறுங்களே! ஏன் இப்படி நினைக்கிறுங்க?

வாசன், மெய்யப்ப செட்டியார் இவங்களுக்கெல்லாம் தமிழ்ப்படம் பிடிக்கத் தெரியாதா? ஆனல் இங்கே இருக்கிற நடிகப் பசங்க படுத்தற பாட்டைப் பார்த்து. 'உங்க மூஞ்சியிலேயே முழிக்க வேண்டாம்'னு ஓடிப் போயிட்டாங்க அவங்க.

ஹிந்தி நடிகன் வர்ரான். காலை ஏழு மணி ஷூட்டிங்குன்னு, ஆறே முக்காலுக்கே மரத்தடியிலே வந்து ரெடியா உட்கார்ந்துட்றுன். முதலாளி வந்தால், 'பொஸ், பொஸ்'னு காதுக்கினிமையா குழைஞ்சு பேசறுன். பணம் கொடுக்கிறவனுக்கே காதுக்கு இனிமையாக இருக்கு. நல்லா வேலை செய்றுன். நிறைய பணத்தை வாங்கிண்டு போறுன். இங்கே நம்ம பசங்க என்னடான்னு, பணத்தையும் வாங்கிண்டு, ஒழுங்கா வேலைக்கும் போகாமே, 'வாசன் பாப்பான் என்னடா சொல்றுன்?, செட்டி இருக்கானு?'ன்னு மரியாதையில்லாமப் பேசறுங்க. தமிழ்ப் பட உலகம் உருப்படுமா சொல்லுங்க?'



எம். ஆர். ராதா

### புது முகம்

'என்னுது புது முகம்! எல்லாம் புதிசுதான், பழசுதான், கற்பகம் போலே நல்ல கதையா எழுது, எந்தப் புது முகத்தைப் போட்டாலும் ஓடும்.

வேறே ஏதோ யோசனை யோசனையோடு புது முகத்தைப் போட்றுங்க சிலபேரு. கதைக்குப் பொருத்தமா போடு, 'வின்' அடிக்குதா இல்லையா பாரு. கோபாலகிருஷ்ணன் படம் வெற்றின்னு, அவர் நாடகத்திலேருந்து வந்தவரு. பவுண்டேஷன் நல்லா இருக்கும் என் மாதிரி படிக்காதவங்க கிட்டே கலை இருக்கும். கலை இருக்கிற இடத்திலே, கலைஞன் இன்னு 'ரிமார்க்' இருக்கத்தான் இருக்கும், அதை மார்க் பண்ணுதே! கலையைப் பாரு—அதோடே போ, 'அவுட்'!'.

## செனட்டர்
## லண்டன் கந்தையா

வானெலி இரசிகர்களைப் பல வருடங்களாக மகிழ்வித்து வந்த 'லண்டன் கந்தையா' மேடைகளிலும் தோன்றி எண்ணற்றவர்களின் உள்ளங்களில் இடம் பிடித்துக் கொண்டார். இப்பொழுது லண்டன் கந்தையா 'செனட்டர்'ராகப் போகிறுர்.



எழில் முகத்தை எடுத்துக் காட்டும் இவ்விள மங்கை புஷ்பலதாவை 'வானம்பாடி'யில் காணலாம்.

இலங்கை வானெலி தமிழ் நாடகத் துறைத் தலைவர் திரு. எஸ். சண்முகநாதன் ('சாணு') அவர்களின் படைப்பான 'செனட்டர் லண்டன் கந்தையா'வை திரு. எஸ். பாலச்சந்திரன் மேடைக்குக் கொண்டுவரப் போகிறுர். 'செனட்டர் லண்டன் கந்தையா' ஆரம்ப விழா 9-3-64 திங்கட்கிழமை மாலை கொழும்பு மாநகர சபை உறுப்பினர் திரு. பி. கதிர்வேலு ஆச்சாரி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவைக் குத்துவிளக்கேற்றி திருமதி இந்திரா ராஜு ஆரம்பித்து வைத்தார்.

ஏராளமான பொருட் செலவில் சிறப்பான காட்சி, ஒளி அமைப்புகளுடன் மேடையேறப் போகும் 'சாணு' தயாரிக்கும் 'சாணக்கியன்' நாடகத்தின் அரங்கேற்றத்துக்கு முன்னதாகவே, இன்னும் சில வாரங்களில் முழுநீள நகைச்சுவை நாடகமான செனட்டர் லண்டன் கந்தையா மேடையேற்றப்படுமாம்.

லண்டன் கந்தையா வேடத்தில் இலங்கை இரசிகர்களைக் கவர்ந்த திரு. சண்முகநாதனே இந்நாடகத்திலும் செனட்டர் லண்டன் கந்தையா வேடத்தைத் தாங்குகின்றுர்.

திரு. ரொசைரியோபீரிஸ், திரு. இராஜேஸ்வரன், திரு. இருதயராஜா, வித்துவான் சோதிநாதன், திரு. நவரத்தினம், செல்வி கோகிலவர்த்தினி சுப்பிரமணியம் போன்ற முன்னணி நடிகர்கள் இந்நாடகத்தில் தோன்றுவார்கள்.

# நாடகப் போட்டி

இலங்கையில் தமிழ் நாடகக் கலை நல்ல முறையில் வளர்ச்சி அடையவில்லை—நடிகர்கள் போதிய அளவு முன்னேற்றமடையவில்லை என்ற காரணங்களை மனதில் கொண்டு, நடிகர்களையும், நாடக மன்றங்களையும், நடிப்புத் துறைக் கலைஞர்களையும் ஊக்குவிக்கும் நோக்கத்துடனேதான் நாம் நாடகப் போட்டியினை நடாத்த முன் வந்தோம். வருடா வருடம் தொடர்ந்து நடாத்தவும் எண்ணியுள்ளோம்.

தேர்வுக் குழு ஒன்றினை ஏற்படுத்திச் சிறந்த கலைஞர்களைப் பொறுக்குவது என்று ஆரம்பத்தில்யோசித்தோம். அங்கே பாரபட்சம் தலைகாட்டிவிடுமோ என்ற ஐயம் ஏற்பட்டமையினுல் இரசிகர்களிடத்திலேயே பொறுப்பை ஒப்படைத்தோம். இம்முறை நாடகத் தேர்வு தமிழ் இரசிகர்களுக்குப் புதுமையாகவிருக்கலாம். மேலை நாடுகளில் இம்முறை வழமையாக நடைபெறுகிறது. ஆங்கிலத் தினசரி ஒன்று இலங்கையில் இத்தகைய முறையில் 'வருடத்தின் பிரமுகர்' என்று ஓர் போட்டியினை இரசிகர்களைக் கொண்டே ஏற்பாடு செய்தது.

நாம் ஆரம்பித்துள்ள போட்டிக்கும் இரசிகர்கள் போதிய ஒத்துழைப்புக் கொடுத்து வருகின்றனர்.



கொழும்பு லிபேர்ட்டியில் திரையிடப்பட்டிருக்கும் துணிகரசாகசச்செயல்கள் நிறைந்த, வர்ணப்படமான 'ரொமியூலஸ் ரெமஸ்' என்ற ஆங்கிலப்படத்தில் பராக்கிரமசாலியான ஸ்ரீவ் ரீவ்ஸ் இப்படித் தோன்றுகிறுர்.

## எண்ணத்தின் எல்லை

மட்டக்களப்பு தேனமுத இலக்கிய மன்றத்தார் 'எண்ணத்தின் எல்லை' என்ற நாடகத்தைத் தயாரிக்கின்றனர். திரு. திமிலை மகாலிங்கம் கதை வசனம் பாடல்களை எழுதியதுடன் நாடக இயக்கப் பொறுப்பையும் ஏற்றுள்ளார்



மேலே உள்ள எழிலரசியை சுட்டிக் காட்டும் கான் ராஜேந்திரன் இப்படித் [illegible] 'வானம்பாடி'க் காகத்தான்.

இரசிகர்களின் திர்ப்பைக் கொண்டே தேர்வுக் குழு புள்ளி விபரங்களைத் தருகிறது. ஆகவே நாம் கொடுக்கும் எண்ணிக்கை இரசிகர்களின் தீர்ப்பை ஒட்டியேயிருக்கும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

3—3—64 வரை எமக்குக் கிடைத்த வெளியூர நாடக இரசிகர்களின் விபரங்களை இவ்வாரம் தருகிறோம். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி ஆகிய இடங்களிலிருந்தே அதிகமான வாக்குகள் கிடைத்துள்ளன. 20க்குக் குறைந்த வாக்குகளைப் பெற்ற கலைஞர்களைக் குறிப்பிடாமல் விட்டு விட்டோம்.

### யாழ்ப்பாணம்

**சிறந்த நாடகம்:**

| | |
|---|---|
| திப்பு சுல்த்தான் | 63 |
| காதலா கடமையா? | 37 |
| பக்த மீரா | 34 |
| எங்கிருந்தாலும்வாழ்க | 29 |
| நள-தமயந்தி | 26 |

**சிறந்த நடிகர்:**

| | |
|---|---|
| எஸ். லோகேஸ்வரன் | 56 |
| கணபதிப்பிள்ளை | 39 |
| சிவ. அன்பு | 28 |
| ஜே. பாக்கியன் | 27 |
| வி. கனகலிங்கம் | 24 |
| என். பாலசுப்பிரமணியம் | 24 |

**சிறந்த நடிகை:**

| | |
|---|---|
| செல்வி யோகா. இராசையா | 28 |
| வி. மகாலட்சுமி | 21 |

**சிறந்த கதாசிரியர்:**

| | |
|---|---|
| ரி. ஏ. மூர்த்தி | 46 |
| தேவன் | 43 |
| எஸ். கிறிஸ்ரி | 24 |
| புலவர் து. தெட்சணமூர்த்தி | 21 |

**சிறந்த நகைச்சுவையாளர்:**

| | |
|---|---|
| ஆர். எஸ். பாபு | 22 |

**சிறந்த இயக்குனர்:**

| | |
|---|---|
| எஸ். ரி. அரசு | 58 |
| தேவன் -யாழ்பாணம் | 46 |
| ஏ.ரி. பொன்னுத்துரை | 42 |

**சிறந்த தயாரிப்பாளர்:**

| | |
|---|---|
| கலைவாணர் நாடக மன்றம் | 59 |
| உதயசூரியன் நா. ம. | 28 |
| இலங்கைநாயகி நா.ம. | 22 |

### மட்டக்களப்பு

**சிறந்த நாடகம்:**

| | |
|---|---|
| பிலோமினு | 28 |

**சிறந்த நடிகர்:**

| | |
|---|---|
| அருளம்பலம் | 32 |
| நடமாடி | 29 |

**சிறந்த நடிகை:**

| | |
|---|---|
| பியற்றிஸ் பாலநாதன் | 21 |

**சிறந்த நகைச்சுவையாளர்:**

| | |
|---|---|
| மாஸ்டர் சிவலிங்கம் | 33 |

**சிறந்த கதாசிரியர்:**

| | |
|---|---|
| அன்புமணி | 31 |
| திமிலைத்துமிலன் | 22 |
| நடமாடி | 22 |

**சிறந்த இயக்குனர்:**

| | |
|---|---|
| நடமாடி | 27 |
| மாஸ்டர் சிவலிங்கம் | 21 |

### கண்டி

**சிறந்த நாடகம்:**

| | |
|---|---|
| நெஞ்சில் நீ | 42 |
| தியாக தீபம் | 41 |

**சிறந்த நடிகர்:**

| | |
|---|---|
| வி. ரி. கனகரத்தினம் | 27 |
| மனேகர் | 26 |

**சிறந்த நடிகை:**

| | |
|---|---|
| எம். காஞ்சனமாலா | 23 |
| மாகிரட் ரோஸ் | 20 |

**சிறந்த நகைச்சுவையாளர்:**

| | |
|---|---|
| ப.பாலசுப்பிரமணியம | 57 |
| பி. முருகேசு | 21 |

**சிறந்த கதாசிரியர்:**

| | |
|---|---|
| சண். சுந்தரலிங்கம் | 27 |
| வெண்சங்குவேள் | 25 |

**சிறந்த இயக்குனர்:**

| | |
|---|---|
| த. தங்கவடிவேல் | 24 |
| வெண் சங்குவேள் | 23 |

**சிறந்த தயாரிப்பாளர்:**

| | |
|---|---|
| எஸ். சிவபாதம் | 24 |
| வசந்தி புரடக்ஷன்ஸ் | 22 |

**சிறந்த வெளியிட்டாளர்:**

| | |
|---|---|
| பி. ஜே. அரியராஜ் | 21 |

யாழ்ப்பாணத்தில் சங்கிலியன் நாடக மன்றத்தின் 'புலித்தேவன்' நாடகம் நடைபெற்றதாகவும், அந்நாடகத்தைத் தயாரித்தளித்தவர் 'புதுமைலோலன்' என்றும் எமக்கு வாக்குகள் நிறையக் கிடைத்துள்ளன. 'புலித்தேவன்' கடந்த வருடத்தில் முதன் முதலில் நடைபெறவில்லை என்று அறிந்தமையினுல் அதைக் கணக்கிடாமல் விட்டு விட்டோம்.

## நாடகப் போட்டி

1963-ம் ஆண்டில் ..........................................
(ஊரின் பெயர்)

நடைபெற்ற தமிழ் நாடகங்களில்

சிறந்த நாடகம்..........................................

சிறந்த நடிகர் ..........................................

சிறந்த நடிகை..........................................

சிறந்த நகைச்சுவையாளர்..........................................

சிறந்த கதாசிரியர் ..........................................

சிறந்த இயக்குநர் (டைரக்டர்)..........................................

சிறந்த தயாரிப்பாளர்..........................................

சிறந்த வெளியிட்டாளர்..........................................

ஒப்பம்:..........................

முகவரி..........................
..........................
..........................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(12)

அறிமுகப்படுத்துகிறோம்

# திரு. மு. அன்பரசன்

தமிழகத்தில் நெல்லை மாவட்டத்திலுள்ள வீரவ நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. மு. அன்பரசன் ஒரு சிறந்த நடிகர் மட்டுமல்ல, சிறப்பான நாடகப் பயிற்சியாளருமாவார். 'முகுந்தன்' என்ற புனை பெயருடன் இயங்கும் திரு. எஸ். ரி. முத்தையா தயாரித்தளித்த 'உரிமைப் போர்' என்ற நாடகத்தின் மூலம் நாடக உலகில் பிரவேசித்த திரு. அன்பரசன் இதுவரை 12 நாடகங்களில் நடித்திருக்கிறார்.

'ரோமியோ ஜூலியத்', 'நாடோடி மகன்' ஆகிய நாடகங்களின் மூலமே தனது புகழ் ஓங்கியது எனக் கூறுகிறார். கொழும்பிலுள்ள ஒரு நிறுவனத்தின் அச்சுப் பகுதியில் பணியாற்றி வரும் திரு. அன்பரசனுக்கு மணியான இரு பெண்குழந்தைகளும் இருக்கிறார்கள்.

இவர் நடித்துள்ள நாடகங்களில் பலதரப்பட்ட பாகங்களை ஏற்று நடித்திருந்த போதிலும், நகைச்சுவை யூட்டும் பாத்திரங்களையே பெரிதும் விரும்புகிறார். அப்பாகம் அவருக்குக் கொடுக்கப்படவில்லை. விரைவில் நகைச்சுவை யூட்டும் பாத்திரத்தை தான் ஏற்று நடிக்கலாம் என்றும் கூறுகிறார்.

இப்பொழுது 'தளபதி' என்ற நாடகத்தில் கதாநாயகனாகத் தோன்றுகிறார். உதயசூரியன் நாடகமன்றம் அளித்த 'கடமை' என்ற நாடகத்திற்கு முதன் முதலில் பயிற்சி கொடுத்திருக்கிறார். இன்று 'தளபதி', 'இளங்கோவன் காதலி', 'சென்றுவா' ஆகிய நாடகங்களுக்கும் பயிற்சி அளித்து வருகிறார்.

இலங்கைக் கலைஞர்களுக்குள ஒற்றுமை குன்றி பல கூறுகப் பிரிந்து கிடப்பதை வெறுக்கும் இவர், இன்றைய நிலையில் தமிழுணர்ச்சியூட்டும் நாடகங்களையே பெரிதும் ஆதரிக்கிறார்.

திரு. அன்பரசனுக்கு கத்திச் சண்டை, சிலம்பம், முதலியவற்றிலும் போதுமான அளவு பயிற்சி இருக்கிறது. சுப்பையா தேவரிடம் இப்பயிற்சிகளைப்பெற்றாராம்.

## முல்லைத் தீவுப்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய மறுக்கின்றனர் என்று சாக்குப் போக்குக் கூறுகின்றனர். இதற்கு அரசாங்கமே பொறுப்பன்றி ஊழியர்களல்ல. அவர்கள் கடமைகளைச் செய்ய உள்ளவர்களே அன்றி அரசாங்கத்தின் கொள்கைகளை நிர்ணயிக்க அல்ல. அரசாங்கம் தனக்கே நியாயமற்றது எனத் தோன்றுவதை வலோத்காரமாகத் திணிக்க எத்தனிக்கும்போது பொது ஊழியர்கள் மேல் ஏன் பழி போட வேண்டும்.

6. கிராம சேவையாளர்கள் தமிழிலேயே கடமையாற்றுவதற்கென நியமிக்கப்பட்டவர்கள். இவர்களுக்கும் தற்போது சிங்களத்தில் கடிதங்கள் வர ஆரம்பித்திருக்கின்றன. சாதாரண கிராம மக்களுடன் தொடர்பு கொண்டு கடமையாற்றுபவர்கட்குமா சிங்களத் திணிப்பு?

## வேலை....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யிழந்தோர்' கழகச் செயலாளர் திரு. க. பத்மநாதன் சுதந்திரனுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

மேலும் அந்த அறிக்கை கூறுவதாவது:

சிங்களம் மட்டும் சட்டத்தினால் வேலையிழந்தோர் அனைவரும் புதிதாகத் தொடங்கப்பட்ட எம் கழகத்தில் சேர்ந்திடலாம். அவ்விதம் சேர்ந்திடுக என்றும் அனைவரையும் அழைக்கிறோம்.

தனிச் சிங்களச் சட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றோராய் இவர்கள் இருக்கலாம், இராஜினமாச் செய்வோராயும் இருக்கலாம்.

எனவே எங்கிருப்பினும் சம்பந்தப்பட்டோர் இக்கழகத்திற் சேர்ந்திடுக, ஏனையோரையும் சேர்க்க உதவிடுக, என மீண்டும் வேண்டி. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரியையும் இதன் கீழ் தருகிறோம். இவர்கள் எவருடன் தொடர்பு கொள்ளினும் சரியே. இக் கழக வளர்ச்சி, இது கொள்ளக் கூடிய வருங்கால செயற் திட்டம், ஆகியன பற்றிய கருத்தும் அன்பர்கள் அனைவரிடமிருந்தும் வேண்டப் படுகின்றன.

கழகத்தலைவரின் முகவரி:
பெ. செ. பாலசிங்கம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

துணைத்தலைவர்:
மு. மகாலிங்கம்
24, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

பொதுச் செயலாளர்:
க. பத்மநாதன்,
மே/பா: 'அருந்ததி',
சின்னக்கடை,
மன்னர்.

# காங்கிரஸ் கோட்டைகளைக்..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பொகவந்தலாவை வீரத்தின் நிலைக்களமாய், வெற்றியின் உறைவிடமாய், எல்லாவற்றிற்கும் மேலாக மானத்தின் பிறப்பிடமாய் ஒளி விடும் நகரம்.

1958 ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தில் பொலீசாரின் துப்பாக்கி குண்டுக்கு பலியாகி மரணத்தை அணைத்துக் கொண்ட இளைஞர்கள் ஐயாவு, பிரான்சிஸ் இருவரும் இதே பகுதியைச் சேர்ந்தவர்கள்தான். இவர்களது கல்லறைக்கு கூட்ட முடிவில் மேலவை உறுப்பினர் திரு. மாணிக்கம் தலைமையில் மௌன ஊர்வலமாகக் கழகத் தோழர்களும், பொதுமக்களும் சென்று மலர்வளையம் சூட்டி மரியாதை செய்தனர்.

மெய்சிலிர்க்க வைக்கும் அந்தக் காட்சியின் போது மக்கள் ஆவேசத்தோடு 'வாழ்க தமிழ்' 'வாழ்க ஐயாவு—பிரான்சிஸ் நாமம்' என்று முழங்கினர்கள்.

திரு. கரியபெருமாளைத் தொடர்ந்து பலர் பேசினர்கள். இன்னும் பலர் பேச இருந்தார்கள். கூட்டத்தை 6 மணிக்கு — ஒலிபெருக்கி கெடு முடியும் நேரம்-முடிக்க வேண்டும். எனவே முக்கிய பேச்சாளரான திரு. மாணிக்கம் (மே. உ) பேச எழுந்தார். ஆனல் அவரால் சரியாக 10 நிமிடங்களுக்கு பேசமுடியவில்லை.

'மைக் தகராறு?' கிடையாது. கூட்டத்தில் குழப்பமா? அதுவும் இல்லை. காரணம் 'மாலை போடும் படலம்' ஆரம்பமானதுதான்.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த தோழர் எத்திராஜ், பொகவந்தலாவைப் பகுதியில் பம்பரமாகச் சுழன்று கழகப் பணிபுரியும் வீரர், மாலைகளை வாங்கி இன்ன தோட்டத் தொழிலாளர்களது சார்பில் இந்த மாலையை திரு. மாணிக்கம் அவர்களுக்குப்போடுகிறேன் என்று ஒவ்வொரு மாலையாக வாங்கிப்போட்டுக் களைத்தே போனர்!

இதைப் பார்த்த ஒரு இளவட்டம், வயது பதினறு இருக்கும், பெயரை மறந்து போனேன் 'இதுவரை காலமும் காங்கிரஸ் கோட்டையாக இருந்து இன்று கழகக் கோட்டையாக மாறிவிட்ட மல்லிகைத் தோட்டத் தொழிலாளர்கள் சார்பாக இந்த மாலையை .........' என்று ஒரு குட்டிச் சொற்பொழிவே செய்துவிட்டு கனத்த பெரிய மாலை ஒன்றைத் தூக்கிப் போட்டார்!

### காங்கிரஸ் கோட்டை சரிகிறது

இந்த இளவட்டம் கூறியது போலவே பொகவந்தலாவைப் பகுதியில் காங்கிரஸ் கோட்டைகளாக விளங்கிய தோட்டங்கள், வேறு தொழிற் சங்கங்கள் காலடி எடுத்து வைக்க முடியாது என்றிருந்த தோட்டங்கள் ஒன்று மாறி, ஒன்று கழகக் கோட்டைகளாக மாறிவிட்டன. மாறி வருகின்றன.

கழகத்தின் பிரசாரம் வலுக்க, வலுக்க, ஏனைய பகுதிகளிலும் கழகக் கொடி பட்டொளி வீசிப் பறக்கும்நாள் அதிக தூரமில்லை. அதற்குரிய அறிகுறிகளை நாம் கண்ட தமிழ்த் தொழிலாளர்களது முகங்களும், உள்ளங்களும், அங்கு தேங்கி நிற்கும் உணர்ச்சியும், கரை கடந்த ஆர்வமும் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

மலையகத்தில் சிறிதளவாவது கல்வி கற்ற இளம் தொழிலாளர்கள்-நாலு பத்திரிகைகள் படித்த வாலிபர்கள்-கழகம் ஒன்றுதான் 10 லட்சம தோட்டத் தொழிலாளர்களின் உண்மையான விடுதலைப் பாசறை, உரிமைக் கோட்டை என உணர்ந்து அதன் பக்கம் ஆயிரக்கணக்கில் வந்து சேருகிறர்கள்.

காங்கிரஸ் கடந்த 28 வருடங்களாக, ஏழைத் தோட்டத் தொழிலாளியிடம் மாதாமாதம் சுளையாக 50 சதம் பிடுங்கி-சிட்டுக்கட்டும் கம்பனி மாதிரி—செயல்பட்டு வந்திருக்கிறதே யொழிய அந்த ஏழைத் தொழிலாளியின் வாழ்வு உயரத் தனது சுட்டுவிரலைக் கூட அசைக்கவில்லை.

'காங்கிரசுக்கு ஜே! காந்திஜிக்கு ஜே! தொண்டமானுக்கு ஜே! அசீசுக்கு ஜே!' என்று இப்படி 'ஜே' போடக் கற்றுக்கொடுத்ததேயொழிய, தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிமையுணர்வை ஊட்டி, அவர்களது உள்ளத்தில் அரசியல் விழிப்புணர்ச்சியை வளர்க்க காங்கிரஸ் ஸ்தாபனம் முற்ருகத் தவறிவிட்டது.

சமஜமாஜிஸ்ட்—கம்யூனிஸ்ட் சங்கங்களைப்பற்றி கேட்கவேவேண்டாம். கூலிப் பிரச்சினைதான் அவர்களது ஒரே பிரச்சினை. இவற்றிற்கு மாருக கழகம் தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிமையுணர்வை, [illegible] அறிவை ஊட்டப் பாடுபடுகிறது.

"கழகக் கூட்டங்களிலும், கழகஏடுகளிலும் கழகப்பேச்சாளர்கள்—எழுத்தாளர்கள், தொழிலாளப் பெருங்குடி மக்களுக்கு—

தமிழ்மொழியின் தொன்மையும்—வன்மையும், இலக்கண—இலக்கியச் சிறப்பும் கூறி மொழிப்பற்றை வளர்க்கிருர்கள்.

தமிழ் இனத்தின் புகழ் மிக்க வரலாறு கூறி, மீண்டும் பழைய பொற்காலத் தமிழகத்தைக் காணவேண்டும் எனச் சொல்லி இனப் பற்றை ஊட்டுகிருர்கள்.

மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்களை உண்மையான-உரிமை வேட்கையுடைய தமிழர்களாக்குவதன்மூலமே அவர்களை உரிமைப் போருக்குத் தயாராக்க முடியுமெனக் கழகம் நம்பி அந்தப்பணியைஇனிது செய்கிறது.

இவை காரணமாகவே தமிழ் தொழிலாளர்கள் கழகம் நோக்கி ஓடோடி வருகிருர்கள்,

அட்டன் மாவட்டத்தை பொறுத்தளவில் கழகமா? காங்கிரசா என்றகேள்விக்கே இடமில்லை.

காலமெல்லாம் 'காங்கிரஸ்' 'காங்கிரஸ்' என்று கூறி அதற்காகப் பாடுபட்ட நல்லவர்கள் கழகப்பக்கம்வந்து சேர்ந்துவிட்டார்கள்.

### தந்தை விட்ட தவறு

அவர்களுடைய ஒரேயொருகுற்றச்சாட்டு 'தந்தை செல்வநாயகத்தை 1957ம் ஆண்டே மலையகத்துக்கு வந்து தொழிற்சங்கம் அமைக்கச் சொன்னோம். வரவில்லை. அப்போது வந்திருந்தால் இன்று 1964ல் கழகம் தவிர வேறு தொழிற்சங்கம் மலைநாட்டில் இருக்கவே இருந்திருக்காது' என்பதுதான்.

இதுவரை காலமும் வடகிழக்கில் வதியும் 20 இலட்சம் தமிழ்பேசும் மக்களுக்கும்-மலைநாட்டில் வாழும் 15 இலட்சம் தமிழ் மக்களுக்கும் நேரடியான தொடர்பு இருக்கவில்லை. இந்த இருசாராருக்கும் இடையில், ஒருவரையொருவர் தரிசிக்க முடியாதவாறு தொண்டமான்-அசீஸ் காங்கிரசுகள் நந்திகள் மாதிரி குந்தியிருந்து விட்டன.

கழகம் இப்போது 35 இலட்சம் தமிழ் பேசும் மக்கள் நேசக்கரம் பிணைத்து ஒரு கொடிக்குள் ஒரு அணிக்குள் ஒரு தலைமையின் கீழ் [illegible] வுள்ள அரசியல் சக்தியாக மிளிர வாய்ப்பும்-சூழ்நிலையும் உருவாகிவருகிறது. இந்த கூட்டுசக்தி தமிழினத்தின் பூரண விடுதலைக்கு அடிகோலப் போகிறது என்பதில் யாருக்கும் சந்தேகமிருக்கத் தேவையில்லை.

## வெளியீட்டு விழா

அகிலன் எழுதிய 'சகோதரர் அன்றே', சுப்பிரமணியம் எழுதிய 'கீதம் இனிய குயிலே', தி. ஜானகிராமன் எழுதிய 'கமலம்', நாரண—துரைக் கண்ணன் எழுதிய 'பரங்கினி', கி.வா.ஜகனுதன் எழுதிய'கற்பக மலர்' ஆகிய ஐந்து புத்தகங்களை சென்னை முதல் மந்திரி திரு. பக்தவச்சலம் வெளியிட்டுள்ளார்.

சென்னை கோகலே மண்டபத்தில் தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கதின் சார்பில் வெளியீட்டு விழா நடைபெற்றது. விழா மந்திரி மன்ருடியார் தலைமையில் நடைபெற்றது.





ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மன நிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றே தான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி

கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுவர் தொடர்கதை:

# மந்திரக் கண்ணாடி

'சுதந்திரன்'

**(9)**

வெள்ளிக்கிழமை அதிகாலையில் ராமுவும் பாலுவும் கண் விழித்தெழுந்து, குகைக் கதவை முன்பு இருந்தது போலச் சாத்திவிட்டு, பாறைக்கு வெளியே வந்தார்கள்.

இன்னும் சரியாக விடியாததனுல் காட்டிலே இருள் பரந்திருந்தது. ராமுவும் பாலுவும் கடவுளைத் தரிசித்துவிட்டு மின் விளக்கின் உதவியோடு நடந்து சென்ருர்கள்.

ஒரு மரத்திலுள்ள கிளையொன்றில் கொடி போல ஒரு பொருள் ஆடியது. பாலு அப் பொருளை நோக்கிச் சுட்ட பின்புதான் அது கொடியல்ல, ஒரு பாம்பென்பதை ராமு அறிந்தான்.

இன்று சாயந்திரத்திற்குள் மந்திரக் கண்ணுடியை எப்படியாவது எடுத்துக்கொண்டு, இருள் சூழ்வதற்கு முன்னுல் குகையை அடைந்துவிட வேண்டுமென்று திட்டமிட்டுக்கொண்டே இரண்டு நண்பர்களும் காட்டின் நடுப்பகுதியை நோக்கி வெகு வேகமாக நடக்க ஆரம்பித்தார்கள்.

சிறிது தூரம் நடந்து சென்றதும், ராமுவுக்குப் பயம் பிடித்துக்கொண்டது. எப்படி மந்திரக் கண்ணுடியைக் கைப்பற்றலாம்?என்று யோசித்தான் பாலு.

பாலு, ராமுவை எதற்கும் தயாராக இருக்கும்படி சொல்லிவிட்டு, மந்திரவாதியின் குடிசையை நோக்கி நடந்தான்.

அதிக தூரம் நடந்ததும் மந்திரவாதியின் குடிசையைக் காணுததால், பாலு ஒரு உயர்ந்த மரத்தில் ஏறிக் காட்டை உற்று நோக்கினுன்.

**(10)**

இரண்டு பர்லாங் தூரத்திலிருந்த மந்திரவாதியின் குடிசை, பாலுவின் கண்களுக்குத் தெரிந்தது.

மரத்தை விட்டிறங்கிய பாலு, ராமுவைக் கூட்டிக்கொண்டு, மந்திரவாதியின் குடிசைப் பக்கம் சென்ருன்.

மந்திரவாதி வசித்துவத்த குடிசை மூடப்பட்டிருந்தது. குடிசையின் வாயிலில் இரண்டு பெரிய நாகபாம்புகள் படமெடுத்தாடிக்கொண்டிருந்தன.

ராமு, படமெடுத்த பாம்புகளைக் கண்டதும் பயத்தால் நடுங்கி, பின்னுக்கு ஓடினுன்.

பாலு தன் கைத்துப்பாக்கியினுல் இரண்டு பாம்புகளையும் சுட்டுக் கொன்றுவிட்டு, ராமுவை வெளியே நிற்கவைத்துவிட்டு, உள்ளே சென்ருன்.

குடிசை முழுவதும் மந்திரக் கண்ணுடியைத் தேடியலைந்தான் பாலு. ஒவ்வொரு பெட்டியாகப் பார்த்துக்கொண்டு சென்ருன்.

ராமுவும் குடிசையின் உள்ளே வந்து பாலுவுடன் சேர்ந்து மந்திரக் கண்ணுடியைத் தேடினுன்.

இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டிருந்த தங்கப் பெட்டியொன்றை ராமுவும் பாலுவும் கண்டனர். அப் பெட்டியின் மேல் புரியாத மொழியில் ஏதோ எழுதப்பட்டிருந்தது.

—(தொடரும்)

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

**வளர்மதி**

**சுதந்திரன் மாணவர் மன்றம்**

**அங்கத்தவர் மனுப் பத்திரம்**

இல. 1

பெயர் ____________________

பாடசாலை ____________________

விலாசம் ____________________

____________________

____________________ ____________________

பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

# சமூக சேவையிற் காந்தீயம்

—மு. அனுசூயை, கோப்பாய்—

உலகம் கண்டறியாத ஒப்பரிய சிறப்புக்களும், பண்புகளும் நிறைந்த காந்திமகான் இந்தியாவிற்குச் சுதந்திர ஆட்சியைத் தந்தார். அவருடைய வாழ்விலிருந்து நாம் ஒரு பெரிய உண்மையைக் கற்றுக்கொள்கிருேம். ஒருவன் அருஞ் செயல்களைச் செய்வதற்கு பிறக்கும்போதே பெரியவனுகப் பிறக்க வேண்டியதில்லை. எவனும் காந்தியைப் போல்உண்மையைக் கடைப்பிடித்து தளர்ச்சியின்றி உழைத்தால் பெரிய காரியங்களைச் செய்து முடிக்கலாம். காந்தி அடிகள் சடுதியாக வெற்றிச் சிகரத்தை அடையவில்லை. சத்தியத்தையும், அன்பையும்அடிப்படையாகக்கொண்ட விடாமுயற்சியே அவரின் வெற்றிக்குக் காரணம். அவர் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதித்தார். எதிரிக்கும் அன்புகாட்டினுர். அன்பும், அறனும், அவரது வாழ்வில் பண்பும் பயனுமாக விளங்கின. அவர் வாழ்க்கையில் என்றும் உண்மை நிலவியது. அவர் அறப்போர் முறையை அனுசரித்து, தான் நீதியென்று கண்டதை அஞ்சாமல் செய்தார். அவர் மன அடக்கமும் பொறுமையும் நிறைந்தவராய் பிறரைத் திருத்துவதற்காகத் தம்மை வருத்திக் கொண்டார். பொது மக்களாகிய நாம்இவரைப்போல் வாழ்முடியாதா? [illegible] சேர்ந்தவுடன் சத்திய நெறியை விட்டுப் பணத்தையும் பொருளையும் அபகரிக்கத் துணியும் மக்கள் காந்தி மகானைப்போல் ஒருபோதும் வாழமுடியாது. பொதுநலத்திற்கென அமைக்கப்பட்ட சங்கங்களைப் பாழாக்கிச் சுயநலம் தேடுவோரும் அவ்வாறு செய்ய வியலாது. அன்பையும், அன்னியோன்னியத்தையும் வளர்க்கவேண்டிய சங்கங்களிற் பிரிவினைகள் உண்டாக்குவோர் எங்ஙனம் காந்தியடிகளின் முன் மாதிரியைப் பின்பற்றலாம்? தனக்காகவும், பிறருக்காகவும் பாடுபட்டு உழைக்கவேண்டியவர், சோம்பலுடன்வாளா விருப்பாராயின் அவருக்கும் காந்திமகானுக்கும் வெகு தூரமென்றே கூற வேண்டும்.

தீய குணங்கள் நீங்கி மக்கள் புத்துயிர் பெற்றவராய் உண்மையிலும், அன்பிலும் நிலைத்திருந்து தூயமனத்துடன் தொண்டாற்றும் பொழுது, காந்தீயம்தோன்ற இடமுண்டு.

# திக்குவாயர்களுக்கு உதவும் சாதனம்

'திக்குவாயர்'கள் தங்களுடைய் குறையைப் போக்கிக் கொள்வதற்கு உதவும் தனிச் சாதனம் ஒன்று மேற்கு ஜேர்மனியில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பெயர் 'திக்கு வாயர் கண்ணுடி'.

திக்குவாயர்களை இக் கண்ணுடி, அதுவாகவே குணப்படுத்தாவிடினும், அவர்கள் தமது குறையை உணர்ந்து திருத்திக்கொள்ள உதவும்.

இந்தச் சாதனம் சாதாரணக் கண்ணுடி ஒன்றைக் கொண்டதாகும். நடுவில் மங்கலான பகுதி உள்ளது. திக்குவாய்க் கோளாறு உள்ளவர், இக் கண்ணுடியின் முன் நின்று பேச வேண்டும். அவர் திக்காமல் சரியாகப் பேசும் வரை அக் கண்ணுடி சாதாரணமாகத்தான் இருக்கும். ஆனுல், அவர் திக்கித்திணற ஆரம்பித்தவுடன் கண்ணுடியின் நடுவில் உள்ள பகுதி பெரிதாக வளர ஆரம்பிக்கும், உடனே அவர் தனது தவற்றை உணர ஆரம்பிக்கிருர். அதே சமயத்தில் அவரது வாய், நாக்கு ஆகியவற்றின் அசைவுகள் அக் கண்ணுடியில் பிரதிபலிக்கின்றன.

# 'பச்சைக் கிளியே பாடாதே'!

—("கல்முனை மணிவாசகன்"—)

பச்சை கிளியே பாடாதே—உன்
பவள வாயைத் திறவாதே!
இச்சை கொண்டோ பாடுகிருய்?—இல்லை;
இறுமாப்புடனே பாடுகிருய்?

செந்தமிழ்த் தாயை வாழ்த்தியோ—நீ
சிந்து பாடிக் களிக்கின்ருய்?
'இந்த நாட்டில் ஏன்பிறந்தேன்'—என்ருே;
இசையை மீட்கின்ருய்?

பாலும் பழமும் தருமெனக்கு—நீ
பாட்டால் 'நன்றி' சொல்கிருயோ?
மேலும்; 'உன்னைக் கூண்டிலிட்ட—நான்
பாவி' யென்ருே பாடுகிருய்?

வண்டமிழ் தன்னை நினைத்தோ—நீ
விடுதலைக் கீத மிசைக்கின்ருய்?
'கூண்டைத் திறந்து விட் டுவிடு'!—என்ருே;
கூவிப் பாடுகின்ருய்?

'வாழ்க மக்கள்! வாழ்க வையம்'!—என்ருே;
வாழ்த்துப் பாடுகிருய்?
'சூழ்க தமிழர்; ஒற்றுமையோடே'!—என்ருே;
சார்ந்து பாடுகிருய்?

பாட்டிலுன்னை வெல்வதற்கு—இப்
பாரில் யாரும் இல்லை யென்ருே;
கூட்டிச் சுதியை எழுப்புகிருய்?—ஐயோ!
குயிலை ஏனே மறந்து விட்டாய்?

எனது கிராமம்:

# அச்சுவேலி

—: சோ. கருணகரன் :—

எனது கிராமம் அச்சுவேலி. இது யாழ்ப்பாணப் பட்டினத்திலிருந்து சுமார் பத்து மைல்களுக்கப்பால் யாழ்—பருத்தித்துறை வீதியருகேயுள்ளது. இக் கிராமத்திற்கு தொண்டமானுறு, வசாவிளான், ஆவரங்கால் என்பன எல்லையாகவுள்ளன.

இங்கு சுமார் நானூற்றுக்கதிகமான மக்கள் வசிக்கிருர்கள். இவர்களிற் பெரும்பாலானேர் சைவ சமயத்தவரேயாகும். இங்கு சைவ சமயக் கோவில்கள் பல உண்டு. இக் கிராமத்தில் மக்கள் நலனைக் கருதியும், அவர்கள் சௌகரியத்திற்காகவும், அவர்கள் காய்கறி வாங்கக் கஷ்டப்படாமலிருக்கவும் ஓர் மரக்கறிச் சந்தையுண்டு. இச் சந்தை கிராம சபையின் மேற்பார்வையிற்ருன் இருக்கின்றது.

எனது கிராமத்தில் அகில இந்தியாவிலும், இலங்கையிலுமுள்ள பெரியோர்களாலும் போற்றப்படும் பெரியவரும், சிறந்த கல்விமானுமாகிய சிவஸ்ரீ குமாரசுவாமிச் குருக்கள் அவர்கள் வசிக்கின்ருர்கள். இங்கு இவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஓர் தமிழ்க் கலவன் பாடசாலையும், ஓர் விநாயகராலயமும் உண்டு.

எனது கிராமம் கோப்பாய்த் தொகுதியைச் சேர்ந்தது. இத் தொகுதியின் அங்கத்தவரான அமரர் வன்னியசிங்கம் தமிழினத்தின் விடுதலைப் போருக்காகத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈந்திருக்கின்ருர். இப்பொழுது இவரின் இடத்திற்குத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. மு. பாலசுந்தரம் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்ருர்.

எனது கிராம மக்கள் சென்ற தமிழுரிமைப் போராட்டங்களிலும், மற்றும் வேறு பல போராட்டங்களிலும் பங்குகொண்டிருக்கின்ருர்கள். இன்னும் இவர்கள் இனி வரும் போராட்டங்களிலும் கலந்துகொள்வார்களென்பதில் ஐயமில்லை.

# ஊ...ஊ...ஊ....!

ஐக்கிய நாடுகள் சபைக் காரியதரிசி ஊ தாண்ட் ஒரு பர்மியர். அவருடைய பெயரைக் குறிப்பிடும் பொழுது, திரு. ஊ தாண்ட் என்று நாம் குறிப்பிட்டால், அது பிழை.

ஏன் தெரியுமா?

"ஊ" என்ருல் பர்மிய மொழியில் "திரு" என்று அர்த்தம். ஆகவே, ஊ தாண்ட் என்ற பெயரிலேயே "திரு"வும் அடங்கியுள்ளது.

# கோபம் எதற்குப் பாப்பா?

காத்தான்குடி
எம். எல். அஹமது

வண்ணச் சட்டைப் பாப்பா
வாழக் கற்றுக்கொள் பாப்பா
எண்ண இனிக்கும் பாப்பா
எங்கும் வாழும் பாப்பா

வஞ்சகம் நிறையும் வாழ்வை
வளர விடாதே பாப்பா
கொஞ்சும் தமிழ்ப் பாதையிலே
கொடுமை வேண்டாம் பாப்பா

அஞ்சி ஓடும் கதைக்கு
அடிமைப் படாதே பாப்பா
கொஞ்ச நாட்கள் உலகில்
கோபம் எதற்குப் பாப்பா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## 'ஈழகேசரி' பொன்னையா ஞாபகார்த்த பேச்சுப் போட்டி

ஈழகேசரி பொன்னையா ஞாபகார்த்த பேச்சுப் போட்டி(1964) குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் நடாத்தப்படவிருக்கிறது.

28-3-64 சனிக்கிழமை நடைபெறும் 'ஈழகேசரி பொன்னையா ஞாபகார்த்த' விழாவில் அன்று காலை 9-மணிக்கு இளைஞர் பேச்சுப் போட்டி ஒன்று சன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெறும்.

பரிசில்கள்: ஒவ்வொரு பிரிவுக்கும் முதலாம் பரிசு—தக்கப் பதக்கம், இரண்டாம் பரிசு—வெள்ளிப் பதக்கம், மூன்றும் பரிசு—புத்தகப் பரிசு. பரிசில்களை ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றத்தினர் வழங்குகின்றனர்.

### நிபந்தனைகள்

பேச்சுப் போட்டி கீழ்ப்பிரி மேற்பிரிவு என இரு பிரிகு நடைபெறும். ஆண்களும் பெண்களும் பங்குபற்றம். (கல்லூரிகள், பாடசாலைகள், சபைகள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், ஏனைய தாபனங்கள் பங்குபற்றலாம்)

2. பிரிவுகளுக்குரிய வயதெல்லை பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது:

i கீழ்ப்பிரிவு 1-4-52க்குப் பின் பிறந்தவர்கள்.

ii மேற்பிரிவு 1-4-46க்குப் பின் பிறந்தவர்கள்.

3. போட்டியிற் பங்குபற்றுபவர்களின் வயதைத் தீர்மானிப்பதற்குப் போட்டி நடைபெறுவதற்கு ஒரு மணித்தியாலயத்துக்கு முன் பிறப்புச் சாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேறு எவ்வகையான பத்திரங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

4. கீழே காணப்படும் விடயத் தொகுதிகளிற் கீழ்ப்பிரிவு மாணவர்கள் ஒன்றைப் பற்றி 5 நிமிடத்திற்கு மேற்படாது மனப்பாடஞ் செய்து அதனைப் பேசுதல் வேண்டும்.

5. மேற்பிரிவு மாணவர்கள் மேற்பிரிவுக்குரிய மூன்று தொகுதிகளில் தொகுதிக்கு ஒன்றாக மூன்று விடயங்களை ஆயத்தஞ் செய்து இருத்தல் வேண்டும். போட்டி ஆரம்பிப்பதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னர் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பிற் பெறும் தொகுதியிலுள்ள ஒரு விடயத்தைப் பேசுதல் வேண்டும். இப் போட்டிப் பேச்சுக் குரிய நேரம் 7 நிமிடம்.

### விடயம்

கீழ்ப்பிரிவு: தந்தை தாய் பேண், இளமையிற்கல், செய்வன திருந்தச்செய், ஔவையார், மகாத்மா காந்தி, ஈழத்துப் பெரியார் ஒருவர்.

மேற்பிரிவு: தொகுதி (அ) நாவலர், குமாரசுவாமிப் புலவர், சுவாமி ஞானப்பிரகாசர், மகா வித்துவான் கணேசையர், கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி, சேர் பொன். அருணாசலம்.

தொகுதி (ஆ) பூதான இயக்கம், சமூகத் தொண்டு, உழைப்பின் உயர்வு, சிரமதான இயக்கம், சன்மார்க்கம்.

தொகுதி (இ) நாமும் விவசாயமும், தொழில் வளர்ச்சியும் எதிர்காலமும், கல்விப் பயன், தமிழ்மொழி வளர்ச்சி, நாட்டுப் பாடல்கள்.

## இல்லப் பிரிப்புக் கூட்டம்

தம்பலகமம் அரசினர் உயர் நிலைப் பள்ளி மாணவர்களிடையே புதுவருடத்துக்குரிய இல்லங்கள் பிரிக்கப்பட்டன.

மேற்படி பள்ளி அதிபர் திரு. பொ. சித்திரவேல் பேசுகையில்: 'ஓடி விளையாடு பாப்பா என்று கவியரசர் பாரதி சிறுவர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவிப்பதை நாம் பார்க்கிறோம். சிறுவர் பருவம் எப்படிக் கல்வி கற்பதற்கு உகந்ததோ அதேபோல் சோம்பலைப் போக்கிக் கொண்டு சுறுசுறுப்பானவர்களாகத் திகழ்வதற்கும் இளமைப் பருவமே ஏற்றகாலமாகும். எனவே மாணவர்களாகிய நீங்கள் இல்ல அடிப்படையில் விளையாட்டுத் துறையில் ஈடுபட்டு வெற்றி வீரர்களாகத் திகழ வேண்டும்' என்றார். பின்வரும் ஆசிரியர்கள் இல்ல ஆசிரியர்களாகப் பிரிக்கப்பட்டனர். விபரம் பின் வருமாறு:

சேரன் இல்லம் (சிகப்பு) ஆசிரியர்கள் திரு. க. தம்பிராசா, செல்வி. செ. மகேஸ்வரி, செல்வி வி. தாமோதரம்பிள்ளை—சோழன் இல்லம் (நீலம்) ஆசிரியர்கள் திரு. எஸ். பாலசுப்பிரமணியம், திரு. கு. சிவானந்தராஜா, திருமதி தேவி இல்லைநாதன்-பாண்டியன் இல்லம் (பச்சை) ஆசிரியர்கள் திரு. ச. தம்பையா, திரு. பி. தாமோதரம்பிள்ளை, செல்வி செ. கெங்காம்பிகை. இந்த மூன்று இல்லங்களுக்கும் பொதுச் செயலாளராக திரு. சபாரெத்தினம் [illegible] நியமனம் செய்யப்பட்டார்.

## மூதூர் எம். பி. க்களுக்கு பாராட்டு

"செல்வச் செழிப்பு மிக்க நாடான தம்பலகமம் கல்விச் செழிப்புடைய நாடாக இருக்கவில்லை.

இக் குறையைச் சுமார் ஐம்பதாண்டுகளுக்கு முன் ஆரம்பப் பாடசாலையாகத் தோன்றிய இப்பள்ளி படிப்படியாக முன்னேறியதின் மூலம் அகற்றியுள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும்."

தம்பலகமம் கோயில் குடியிருப்பில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் எண்பதடி நீளம் கொண்ட புதிய பாடசாலைக் கட்டிடத்துக்கு அஸ்திவாரக் கல் நடுகையில் தம்பலகமம் கிராமச் சபைத் தலைவர் திரு. சு. வேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியதாவது:

'இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்த பெரியார்களையும் பிரஸ்தாபப் பாடசாலை சிரேஷ்ட நிலைக்கு உயர உதவிய மதிப்புக்குரிய மூதூர் எம்.பிக்களையும் மனமாரப் பாராட்டுகிறேன்." அவரை அடுத்து மேற்படி பள்ளியில் கல்வியில் கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் பலர் பேசினர்.

## மலையகத்தில் வள்ளுவர் விழா

கொட்டகல மாவட்டம் 'பளிங்குமலை'யில் திருவள்ளுவர் விழா பாரதி மன்றத்தில் 1-3-64 ஞாயிறன்று பிற்பகல் 2 மணிக்கு நடாத்தப்பட்டது.

இவ்விழாவிற்கு இ தி.மு.க. ஹட்டன் மாவட்டச் செயலாளரும், கிளைச் செயலாளரும், கலைமன்றப் பொதுச் செயலாளருமான தோழர் இரா. ரெங்கையா அவர்கள் தலைமை தாங்கினார்.

விழாத் தலைவர் தோழர் இரா. ரெங்கையா அவர்கள் திருவள்ளுவர் உருவப் படத்தைத் திறந்துவைத்து, வள்ளுவர் வழி வகைகளையும், அன்னார் செயல்களையும், வள்ளுவர்விழா, பாரதி விழா, கலைவிழா, ஆண்டு விழா, பொங்கல் விழா, மன்றங்கள் திறப்புவிழா—இன்னும் மற்றும் விழாக்கள் நடாத்தும்போதெல்லாம் ஏமது பகுத்தறிவு யென்னும் 'பாசறை' யைப் பரப்ப மலையகத்தில் இன்றைய இளங்காளையர்கள் முன் வர வேண்டுமெனவும் முன்னுரையில் விளக்கமாகக் கூறினார்.

கலை மன்றத் தலைவர் தோழர் வி எம். சுப்பையா அவர்கள் (ஜாதி ஒழிய வழி) என்ற தலைப்பிலும், தோழர் ஏ. கண்ணுயிரம் அவர்கள் (நமது கடமை) என்ற தலைப்பிலும், தோழர் எஸ். சுப்பையா அவர்கள் (தமிழின் இன்றைய நிலை) என்ற தலைப்பிலும், தோழர் சி. செங்கமலை அவர்கள் (எதற்காக நூல் நிலையம்) என்ற தலைப்பிலும், மகளிர் குழுத்துணைச் செயலாளர்; தோழியர் வீ. கருப்பாய் அம்மையார் (சீர் திருத்தத்தில் எமது பங்கு) என்ற தலைப்பிலும் உரை நிகழ்த்தினார்கள்.

—

## பழைய மாணவர் சங்கம்

பம்பலப்பிட்டி அர்ச். மரியாயின் தமிழ்ப் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டுக் கூட்டம் கடந்த 23-2-64 மேற்படி பாடசாலையின் மண்டபத்தில் ஆசிரியர் எஸ். சந்தானம் தலைமையில் நடைபெற்றது.

'நாம் இந்தச் சங்கத்தை நடத்துவது இந்தப் பகுதியில் வதியும் ஏழைத் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி வசதியைத் தேடிக் கொடுக்கும் பொருட்டே. அவர்களுக்காக நாம் நம்மால் இயன்றளவு சேவை செய்ய வேண்டும் என்ற ஒரே சிறந்த இலட்சியத்தை மனதில் பதிய வைத்துக் கொண்டு செயலாற்ற வேண்டும்."இவ்வாறு மன்றத்தின் செயலாளர் டேவிற் இராசையா பேசும் போது குறிப்பிட்டார். மற்றும் திருவாளர்கள்: அகஸ்டின், அந்தனி ஜீவா, ஆறுமுகம், பீட்டர் முத்தையா, ரூபர்ட் வீரசாமி, ஆசிரியர் எஸ். சந்தானம் முதலியோரும் பேசினார்கள்.

நடப்பு வருடத்திற்கான புதிய உத்தியோகத்தர்கள்: தலைவர்: திரு. பீட்டர் முத்தையா, செயலாளர்: திரு. டேவிற் இராசையா, பொருளாளர்: திரு. அகஸ்டின், துணைப் பொருளாளர்: திரு. ஆறுமுகம், வாசிகசாலை பொறுப்பாளர்: திரு. ரூபர்ட், உதவி பொறுப்பாளர்: திரு. ராஜா, ஆட்சிக் குழு அங்கத்தவர்கள்: திரு. அந்தனி ஜீவா, திரு. [illegible] ஆசிரியர் எஸ். சந்தானம்.

## ஐ. ச. ச. நிலைய நிர்வாகிகள்

வேலணை தெற்கு ஐயனார் சன சமூக நிலைய வருடாந்தக் கூட்டம் அண்மையில் செல்வன் க. பழனி அவர்களின் தலைமையில் நடைபெற்றபோது புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்:

காப்பாளர்: செல்வன் செ. சண்முகவடிவேல், தலைவர்: திரு. வ. இராமலிங்கம், துணைத் தலைவர்: திரு. மு. விஞசித்தம்பி, செயலாளர்: செல்வன் க. நற்குணம், துணைச் செயலாளர்: செல்வன் நா. சுப்பிரமணியம், பொருளாளர்: டாக்டர் ஐ. பாலசுப்பிரமணியம் டீ. ஏ. எம்., துணைப் பொருளாளர்: செல்வன் கா. சண்முகலிங்கம். இத்துடன் எண்மர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

பின் வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன:

1. வேலணை தெற்கு என விலாசம் இட்டு வேலணை கிழக்கில் இயங்கிவரும் உபதபாற்கந்தோரை வேலணை தெற்குக்குத் திருப்ப முயற்சிப்பதற்கு சம்பந்தப்பட்ட தலைவர்களைப் பேட்டி காண்பதற்குத் தூதுகோஷ்டி அமைத்தல்.

2. தமிழரசுக் கட்சியால் நடாத்தப்பட இருக்கும் அறப் போராட்டங்களில் பங்குபற்றுவதற்காகத் தொண்டர்களைத் திரட்டுதல்.

3. நிலையத்திற்கு வானொலிப்பெட்டி அமைத்துத் தரும்படி தூதுகோஷ்டி ஒன்று கிராம சபைத் தலைவரைப் பேட்டி காணல்.

—

## கல்வி அதிகாரியின் வாக்குறுதி

தம்பலகமம் முன்மாரித்திடலில் உள்ள அரசினர் தமிழ்ப் பாடசாலையில் கற்கும் மாணவர்கள் கல்வித் தராதரத்தில் படுமோசமான நிலையில் இருப்பதாகவும், இந்தப் பாடசாலைக்கு உடனடியாக ஓர் திறமைசாலியான ஆசிரியரை அனுப்பி உதவுமாறும் மேற்படி ஊர் கிராம முன்னேற்றச் சங்க நிர்வாகிகளான திருவாளர்கள்: வே பொன்னுத்துரை, க. சண்முகம் நடராஜா போன்றோரைக் கொண்ட தூதுகோஷ்டி திருகோணமலை மாவட்ட கல்வி அதிகாரியை நேரில் பேட்டி கண்டு முறையிட்டுக் கொண்டதாகவும், அதற்குக் கல்வி அதிகாரி இந்த மாதம் முதல் திகதியிலிருந்து ஓர் ஆசிரியரைப் பிரஸ்தாபப் பாடசாலைக்கு அனுப்பிவைப்பதாகக் கூறியதாகவும் தெரிகிறது. ஆனல் அந்த அதிகாரி தமது வாக்குறுதியை இன்று வரை நிறைவேற்றி வைக்கவில்லை என்று அறியப்படுகிறது.

## இந்து வாலிபர் மன்றம்

பலாங்கொடை முதலாம் பிரிவில், இந்து வாலிபர் மன்றத்தின் 2 வது கூட்டுப் பிரார்த்தனையை 1—3—64 ஞாயிறன்று றை வித்தியாலயத்தின் உதவி ஆசிரியர் திரு. கனகசிங்கம் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். திரு. பிறைசூடி ஆசிரியரின் தேவாரத்துடன் மன்ற நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

'இந்து வாலிபர் மன்ற முன்னேற்றம்' என்ற தலைப்பின் கீழ் திரு. சோமசுந்தரம் ஆசிரியர் பேசினார். பிறகு திரு. கனகசிங்கம் ஆசிரியர், மன்றத்தின் வளர்ச்சி வழிபாடு முறைகளைப் பற்றி விளக்கினார். பிறகு திரு. பிறைசூடி ஆசிரியர், நாம் எவ்வாறு சமயத்தை வளர்க்க வேண்டும், அதன் பயன், மொழி என்பவற்றைப் பற்றியும் பேசினார். பிறகு மன்றத் தலைவர் திரு. ம. வேலாயுதம், செயலாளர் செ. பழனிவேலு ஆகியோரும் பேசினர்.

திருவாளர்கள்: சி. செல்லையா, மு. பெருமாள், வீ. கணேசன், சி. நடராஜா, இ. முருகையா என்போரும் பேசினார்கள். இத்துடன் மன்றம் கலைந்தது.

—

## கிராம முன்னேற்றத்துக்கு சிரமதான இயக்கம் மிகவும் சிறந்தது

'நாம் இன்று நாகரிகம் என்னும் போர்வையில் ஆடம்பர வாழ்க்கையையே விரும்புகிறோமன்றி நமது எதிர்காலத்தைப் பற்றியோ அல்லது கிராம முன்னேற்றத்தைப் பற்றியோ சிந்திப்பதில்லை. எங்கள் கிராம முன்னேற்றம் வாலிபர்களாகிய உங்கள் கைகளிலேதான் தங்கியுள்ளது. அதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் ஆடம்பர வாழ்வை நீக்கி சிரமதான இயக்கத்தில் ஈடுபட வேண்டும்.' இவ்வாறு சங்கானை இந்து முற்போக்கு வாலிபர் சங்க வருடாந்த மகாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசிய தலைவர் திரு கா. சுந்தரலிங்கம் தமது தலைமையுரையில் கூறினார்.

## நெஞ்சை அள்ளும்..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் எடுத்துக்காட்ட 3 வ ஆலயம் எழும்புகிறது.

### தேசிய காப்பியம்

கம்பராமாயணம், சீவக சிந்தாமணி போன்று பிற வரலாற்றைத் தழுவாமல், முதன் முதலாகத் தமிழிலே எழுதப் பெற்றது. செப்பிய கதையும் தமிழ் நாட்டிற்கே உரியது. கதாபாத்திரங்களும் தமிழர்கள். செய்தவனும் சேர நாட்டுச் செல்வன். எனவே, சிலம்பு முழுக்க முழுக்கத் தமிழனுக்கே உரியது. சிலம்புச் செல்வம் தமிழ்த் தேசியம் வளர்க்கும் தேசியக் காப்பியமாகும்.

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டிருக்கிறது.

ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50

நிர்வாகி
'சுதந்திரன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரவச மூட்டும் 5வது வாரம்!

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை)

லிபர்ட்டி (பதுளை) சீகிரி (பண்டாரவளை) சென்ட்ரல் (நாவலப்பிட்டி) ஷம்பா (தெகியோவிற்ற) ரோயல் (வவுனியா)



சிவாஜி கணேசன், சரோஜாதேவி,
எம். ஆர். ராதா, பாலாஜி, ரங்கராவ்,
பத்மினி பிரியதர்சினி, கருணாநிதி,
முதலியோர் நடித்த
பிரசாத் மூவீஸ் அளிக்கும்

# இருவர் உள்ளம்

கலைஞர் கருணாநிதியின் பேனாவில் பிறந்த பண்பான
வசன நடை கொண்ட உயர்ந்த திரை ஓவியம்
'இருவர் உள்ளம்'

★ உள்ளத்தின் படப்பிடிப்பு
★ உணர்ச்சியின் இருப்பிடம்
★ கருத்துக் கருவூலம்
★ கற்பனைக்கு எல்லை

என்றெல்லாம் பார்த்தோர் புகழும் பாங்கான ஓவியம்

மூலக்கதை: டாக்டர் லட்சுமி திரைக் கதை வசனம்: கலைஞர் மு. கருணாநிதி இசையமைப்பு: கே. வி. மகாதேவன் டைரக்ஷன்: பிரசாத்






காவியமிர்தம் பொங்கும் கருத்துப் படையல்

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) கெயிட்டி வின்ஸர் (யாழ்ப்பாணம்)

நெல்சன் (திருகோணமலை) தாஜ்மஹால் (மாத்தளை) ரீகல் (கம்பளை)

இம்பீரியல் (மட்டக்களப்பு) ரீகல் (நுவரெலியா)

எஸ். எஸ். ராஜேந்திரன், முத்துராமன்,
சகஸ்ரநாமம், தேவிகா, புஷ்பலதா,
டி. ஆர். ராமச்சந்திரன், கமலஹாசன்,
ஷீலாதேவி, டி. ஆர். ராஜகுமாரி
தோன்றும்

கண்ணதாசன் அளிக்கும்

# வானம்பாடி

இசை: கே. வி. மகாதேவன் பாடல்கள்: கண்ணதாசன், பி. அருணாசலம்

வெகு விரைவில்!

தேவர் பிலிம்ஸ் அளிக்கும்

எம். ஜி. ஆர்.,
சரோஜாதேவி,
அசோகன்,
எம். ஆர். ராதா,
ஜெமினி சந்திரா,
ராஜம்மா,
வி. கே. ராமசாமி,
சின்னப்பா தேவர்
தோன்றும்

## தருமம் தலை காக்கும்



## கல்நெஞ்சையும் கரைய வைக்கும் கருத்துப் படையல்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனி வீதி) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) மொடர்ன் (பதுளை) ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை) விஜிதா (ஹட்டன்)

கஸ்தூரி பிலிம்ஸ்

# பார் மகளே பார்

பணத்துக்கும் போலிக் கௌரவத்துக்கும் அடிமையாகி தன் ஆருயிர் மக்களையும் உற்ற மனைவியையும் ஓயாத சஞ்சலத்துள்ளாக்கி தானும் ஆறாத துன்பக் கடலில் மூழ்கித்த த்தளிக்கும் கோடீஸ்வரன் ஒருவனின் பரிதாப வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஒப்பற்ற உணர்ச்சிச் சித்திரம்!

டைரக்ஷன்:
ஏ. பீம்சிங்

இசை:
விஸ்வநாதன் - ராமமூர்த்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்டாரால் அவர்களது அச்சகத்தில், கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1964-ம் வருடம் மார்ச் மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.